கல்கி

KALKI 14-10-79
90 காசு




வாயில், நைலெக்ஸ், நைலான் 644,
ஷிபான், ஜார்ஜெட், பாலியெஸ்டர்,
பட்டு மற்றும்
வியப்பூட்டும்
பேரெழில் சேலைகளுக்கும்
இன்றே
விவியின் பிரத்யேக
புடவை பிரிவிற்கு
விஜயம் செய்யுங்கள்
பேஸ்மெண்ட் ஷோரூம்
(ஏர்-கண்டிஷண்ட்)
வெங்கடேஷ் வஸ்த்ராலயா
பி. லிமிடெட்
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர் பில்டிங்
ஹைகோர்ட் எதிரில
சென்னை-600 001. போன் 20201/2
PAM 1095

வட்ட மேஜை

பக்தி பரவசத்தில் ஓர் அட்டைப்படம்



30—9—79 அட்டைப் படம் தெய்விகக் இனிமையில் பூத்துக் குலுங்கும் மலர்க் கொத்தாக விளங்குகிறது. வீணையின் ஒலியம் திருப்பதியை நினைவுபடுத்துவதோடு நில்லாமல், வாசகர்களைத் திருப்திப்படுத்தி, பக்திப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

பள்ளத்தூர்
ந. பாபு ராஜேந்திர பிரசாத்

தேசப் பிதாவுக்குக் கல்கி ஆசிரியரின் தோத்திரம் நன்றாக இருக்கிறது. Father, Forgive them, for they know not what they do என்னும் விவிலிய நடையிலான தோத்திரம்—புதுமையானது—இரசிக்கும்படியானது.

வேலூர் — ஜே.வி. நாதன்

சொன்னது மாதிரியே கடுகு பதில்கள் அட்டகாசமாய்த்தான் இருக்கின்றன, அதைச் சுவைத்து முடித்துவிட்டு அடுத்த பக்கம் திருப்பினால் — 'சினிமா மசாலா!' ஒரே சுவை மயம்தான் போங்கள்!''

திருச்செந்தூர் — ஆ. சீனிவாஸன்

பாரதியாரின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலக நாடுகளில் உள்ள கவிஞர்கள் முன் வைத்து விட்டேன், என் 'போயட்' பத்திரிகை மூலம். 'மோரி மோடோ' பாரதியாரின் கவிதைகளை ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்து ஒரு பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறார். சீனர், பாரதியாரின் கவிதைகளை என் நண்பன் டாக்டர் லாம் மொழிபெயர்ப்பின் மூலம் படிக்கின்றனர். டாக்டர் ஜோஸே மலேசிய மொழியில் மொழிபெயர்த்து, தென்னாசிய மக்களிடம் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறார். டில்லியில் இருப்பவர்களுக்கு பாரதியைப் பற்றித் தெரியா விட்டால் இழிவு அடைய வேண்டுமா? உலகம் பாரதியைப் போற்றுகிறது!

சென்னை-17 — கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்

மகா கவி பாரதியைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையை ஒரு பல்கலைக் கழகம் வெளியிடவேண்டுமென்றால் அதற்கென்று ஒரு யோக்யதை'' வேண்டும். இந்தப் பேட்டியில் வெளியாகியுள்ள சம்பவங்கள் உண்மையே என்னும் பட்சத்தில் தில்லி நேரு பல்கலைக் கழகத்துக்கு அந்த யோக்யதை இல்லை யென்று நிச்சயமாகச் சொல்வேன்.

திண்டுக்கல் — ம. நாராயணன்

அன்று நிறம் மாறாத பூக்கள் விமர்சனத்தின் மூலம் பாரதி ராஜாவுக்குப் புத்தி சொன்னபோதும் சரி, இன்று வெள்ளிரதம் படத்தின் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டி இப்படிப்பட்ட நிகழ்ச்சி சினிமா உலக ஆசிரியர்களின் கற்பனையில்தான் நடந்துகொண்டிருக்கிறது என்று குறிப்பிடும்போதும் சரி. மற்றவரை விட உயர்ந்தவராக, வித்தியாசமானவராக, நேர்மையானவராக கௌசிகன் தெரிகிறார்.

குறிக்காரன்வலசு — ந. இராமசாமி

''நூல் வேலி' பட விமர்சனத்துக்கு ஒரு பக்கத்தை ஒதுக்கிவிட்டு அதில் முக்கால் பக்கம் சுஜாதா, சரிதா படம் போட்டுவிட்டு, கால் பக்கம் விமரிசனம் செய்தது அநியாயம். அதைவிட அநியாயம் சரத் பாபுவின் நடிப்பை இருட்டடிப்புச் செய்தது. அதையெல்லாம் விட்டு 'மீண்டும் வருக' என்பதில் இருக்கும் சிறு பிழையைப் பெரிது படுத்தி இருக்கிறாரே! ஒருசமயம் பட விமரிசனம் செய்த குட்டி கிருஷ்ணன் படம் முடியும் வரை குட்டித் தூக்கம் போட்டிருப்பாரோ?

வேலூர் — வேணுகோபாலன்

'பாலசந்தர் 'தேய் பிறையாகிக் கொண்டு வருகிறார்' என்ற என் மனக்குறையை அப்படியே பிரதிபலித்தது 'நூல்வேலி' விமர்சனம். 'கோவி'யின் அதியற்புத நடைவேகத்துக்கு 'விழிகள் விழ்த்திய வீரம்' மற்றுமோர் எடுத்துக்காட்டு.

சமுத்திரம் — அருள்மொழி

லட்சிய புருஷர்கள் பற்றிய கதை எழுதும் போதும் மூன்றாந்தரகாம உணர்வுதான் அகப்பட்டதா? (கோவி மணிசேகரனின் கதை — விழிகள் விழ்த்திய வீரம்)

கலீஃபா உமர் காவியம் போற்றும் லட்சிய புருஷர். சிற்றின்ப எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவர். நேர்மையின் உறைவிடமாகத் திகழ்ந்தவர். இதனை நான் கூறத் தேவையில்லை. பேரறிஞர் ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவே ஒப்புக்கொண்ட விஷயம்.

நாகர்கோவில் — தீபா

வித்தியாசமானவர்கள் கதை அருமையாக இருந்தது. அறிமுக எழுத்தாளர் சத்தியப் பிரியனுடைய சிறு குறிப்பினையும் படித்தேன். கல்கியில் தம் கதையைப் பார்த்த பின்னர் அவர் வேதனை யெல்லாம் மகிழ்ச்சியாக மாறியிருக்க வேண்டுமே!


பின்னலூர் — கொளக்குடி சஞ்சீவிராவ்

Kalki Shopping Page

While others are busy talking about their TV sets, we are busy selling ours!

Bharat TV

more performance than promises.



IACIL BT 30/79

Available at:


VIVEK & CO

Purasawalkam, Madras-600 007
Phone: 662462/663545
Mylapore, Madras 600 004.
Phone: 76923/75661.

Admired for beauty
Bought for performance

Bharat TV

Urvashi



Available at:


TV TRADERS

Alwarpet,
Madras 600 018 Phone: 71238
Anna Nagar, Madras 600 040

How to buy
the best TV in town?
**Read other
TV advertisements.**

**Then come and
see ours 'live'!**

Bharat TV



Available at.

ARUNA & CO

Tiruvottiyur
Ph: 553644



ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

பட்டு

இடம்!

121, ராஜு வீதி
கோயமுத்தூர்-641001
போன்: 25859

உஷா

சாரி பாரடைஸ்

333, ராஜு வீதி, கோயமுத்தூர்-641001
போன்: 33369

Kalki Shopping Page

STANDARD

குதூகலத் திருநாளாம் தீபாவளியின்
மகிழ்ச்சியையும், செழிப்பையும், புத்தாடை,
ஒளி, ஒலியின் மூலம் வெளிப்படுத்துகிறோம்.
மிகச் சிறந்த ஒளி, ஒலிக்கருவி
ஸ்டாண்டர்ட் டிவி.

இதை உங்கள் குடும்பத்திற்கு அளிப்பதின் மூலம்
இம்மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குங்களேன்!

இத்தீபாவளியின் மகிழ்ச்சி நீடித்து
நிலவிடும் அதிசயத்தை உணர்வீர்கள்.

Solid State TV



DEALERS

Asia Sales Agencies, 809, Mount Road, Opp. Alankar Theatre, Phone: 85413 ☐ **Melody House**, 274, Purasawalkam High Road, Phone: 663114 ☐ **Supriya Electronics**, 10, Nelson Manicka Mudaliar Road, Near Nungambakkam Railway Gate ☐ **Shyam Electronics**, 89, Arcot Road, Vellore Phone: 21117 ☐ **Telstar**, 8, Nungambakkam High Road, Phone: 82910 ☐ **Veltronics**, 159, Purusawalkam High Road, Phone: 664318 & 3, Sydenhams Road, Phone: 34599 ☐ **T. V. House**, 61, IV Avenue, Ashok Nagar, Phone: 423056, 423561

Kalki Shopping Page

- ஆதிமூலம்



கல்கி

1979 அக்டோபர் 14

சித்தார்த்தி புரட்டாசி 28

மலர்: 38 இதழ்: 11

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

டாக்டர் ம. பொ. சி.

பல்கலைக் கழகங்கள் சிலருக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றன. சிலருக்கு டாக்டர் பட்டம் வழங்குவதன் மூலம் பல்கலைக் கழகங்கள் கௌரவம் பெறுகின்றன. அண்மையில் சென்னை பல்கலைக் கழகம் ம.பொ. சிக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமையுற்றது.

'என்றோ நடந்திருக்க வேண்டியது இன்றேனும் நடந்ததே' என்று மகிழ்கிறோம். துணைவேந்தரையும், பேரவை, ஆட்சிக்குழு உறுப்பினர்களையும் பாராட்டுகிறோம்.

எழுபத்தி மூன்று வயதான ம. பொ. சியின் வாழ்க்கை திறந்த ஏடு. அதில் மூடுமந்திரமோ, அப்பழுக்கோ காண முடியாது. பொதுநலத் தொண்டிலேயே கழிந்த வாழ்க்கை. எளிய குடும்பத்தில் பிறந்தாலும் சலியா உழைப்பால், நேர்மையால் உயர முடியும், மக்களின் நன்மதிப்பைப் பெற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் ம.பொ.சி.

பள்ளியும் கல்லூரியும் தரும் கல்வியை விட அதிகமாகவே சுய முயற்சியால் அறிவாற்றல் பெற முடியும் என நிரூபித்திருக்கிறார்.

தமிழ் மொழியினிடத்தும், தமிழ் நாட்டினிடத்தும் அளப்பரிய பற்று கொண்டிருக்கும்போதே தேசப் பற்றையும் சிதற விடாமல் காத்துக் கொள்ள முடியும் என்பதை முன் உதாரணத்தால் உணர்த்துகிறார்.

ஐந்து நிமிஷ உரையாடலானாலும் சரி, ஐம்பது நிமிஷ சொற்பெருக்கானாலும் சரி, வெறும் வார்த்தை ஜாலம் பண்ணாமல் பொருள் பொதிந்த சிந்தனைகளை முன்வைப்பார். அதைவிட ஆச்சரியம், அதனை சுவாரஸ்யமாகவும் செய்து காட்டுவார். அளப்பரிய தெய்வ பக்தி உடையவரெனினும் மூடப் பழக்க வழக்கங்களுக்கு முதல் எதிரி.

மூன்று பல்கலைக் கழகங்களில் பல்வேறு குழுக்களில் உறுப்பினராய் இருந்து பணியாற்றியவர், நூலக ஆணைக் குழு தலைவராகத் தொண்டாற்றியவர், சட்டமன்ற மேலவைத் தலைவராக மேன்மையுற்றவர்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பதை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தாலும், அதனைப் பிறமொழித் துவேஷமாக மாற்றி விடாதவர்.

சிலப்பதிகாரத்திலே விசேஷ ஈடுபாடு கொண்டிருந்தாலும் தொல்காப்பியனார் முதல் கல்கி வரை அனைத்துத் தமிழ் இலக்கியங்களிலும் புலமை பெற்றவர். நூறு புத்தகங்களுக்கு மேல் எழுதியும் இன்னமும் கை சளைக்காமல் எழுதிக் கொண்டிருப்பவர்.

அவருடைய அரசியல் சில சமயங்களில் புரிந்துகொள்ள முடியாமல் நமக்கு இருந்திருக்கலாம். ஆனால் அதில் அந்தரங்க சுத்தி இருந்ததை அவருக்கு மாறுபட்ட கருத்துகள் கொண்டவர்கள் கூட மறுக்க முடியாது.

அவரது மீசை எத்தனையோ தடவைகளில் பத்திரிகை உலக கார்ட்டூனிஸ்டுகளுக்குக் கை கொடுத்திருக்கிறது. ஆனால் அவரது ஆண்மை தமிழக சரித்திரத்தோடு ஒன்றிய அவரது வாழ்க்கைச் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது.

கட்டபொம்மன், வ.உ.சி. போன்ற அன்றைய தேச பக்தர்களை இன்றைய இளைஞர்களுக்கு அறிமுகம் செய்து வைத்த இணைப்புப் பாலம். பண்புள்ள பத்திரிகையாளர். எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தபோதும் இல்லாதபோதும் எழுத்தாளர்களின் தலைவர். விடுதலைப் போராட்ட வீரர்; தமிழக எல்லைப் போராட்டத் தீரர்.

சிலம்புச் செல்வரில் ஆரம்பித்து, கலைமாமணி, பத்மஸ்ரீ முதலியன பின் தொடர, டாக்டர் பட்டம் இன்று வந்தடைந்திருக்கிறது.

இலக்கிய முனிவரை கல்கி வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம். (இலக்கிய முனிவர் — இலக்கிய டாக்டர்)



தேவைப்பட்டவர்கள் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். உலகம் ஆரம்பித்த நாளி லிருந்து உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு விஷயத்துக்கு எனக்கு விடை கிடைத்து விட் டது. தெரிந்து கொள்ள ஆசை உள்ளவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

உயிரின் நிறம் மஞ்சள்.

மங்கலான பல்பு வெளிச்சம் தரும் மஞ்ச).

வெளிச்சத்தைப பார்தது விட்டு விழிகளை மூடிக் கொண்ட தும் உள்ளே நகரும் நூலிழை மாதிரி வெளிச்ச மஞ்ச ர்.

மெல்லக் குனிந்து, கடைசியாகத் தார் ரோட்டில் நீளமாய், மஞ்சள் கோட்டை இழுத்து முடிக்கையில் செத்துப் போனேன். இடுப்பில் உயிரைக் கட்டியிருந்த மாயக் கயிறு காணுமல் போயிற்று.

வானவில்

கடல் புணரக்
கருவுற்ற
மேகவல்லிக்கு
மழைப் பேறுக்கு
முன் நிகழும்
வளைகாப்பு.

வர்ணக் கணிகையர்
எழுவரும் கூடி
வான மேடையில்
ஆடும்
நாட்டியம்.

மேகப் பூக்களில்
மது வருந்தும்
வண்ணத்துப்
பூச்சி.

மதன்
ரதிக்களித்த
வர்ண ஊஞ்சல்

அழகு இராமானுஜன்

நான் சட்டென்று உயரே எழுந்தேன். இடக்கை பெயிண்ட் டப்பா தரையில் விழுந்து சிதற, என் உடல் 'நக்' கென்று தரையில் மோதி மல்லாந்தது. நான் மேலும் எழும்புகையில் பெரம்பூர் சகரம் ஐந்நூற்றி நாலு முனிசாமி நாயகரும் ஹெட் கான்ஸ் டபிள் சபாஸ்டியனும் ஓடி வருவது தெரிந்தது.

''ஐயரே, ஐயரே என்ன ஆச்சு உனக்கு?'' நான் எல். ஐ. சி. விளிம்பில் இருந்தேன். நியான் விளக்குகள் சிரித்துக் கொண்டிருந் தன. சென்னை நகரம் தூங்கிக் கொண் டிருந்தது.

''இட்டு ஐயரே, கண்ணைத் தொறந்து பாரேன்.''

நான் இன்னும் லேசானேன்.

''நாயக்கர் மார்ல கைவைச்சுப் பாருய்யா பயமாயிருக்குதே — பூட்டானு?'' துந்துபி சப்தம் மாதிரி வெற்றுக் குடத்துக்குள் கேட்கும் ரீங்காரம் மாதிரி ஓர் ஒற்றைச் சப்தம் என்னைச் சுற்றிக் கொண்டது. உல கத்து சப்தங்கள் என்னை விட்டுப் போயின. ஸெபாஸ்டியன் கைகளை ஆட்டிப் போலீஸ் வேனை அருகே அழைக்கிறான். பனிச்சென்று போலீஸ் வேன் விளக்கு வெளிச்சம் போட்டு நகருகிறது. அதுவே நான் கண்ட கடைசிப் பொருள். உலகம் என்னிடமிருந்து மறைந்து விட்டது.

நான் — அதாவது என் உயிர் பழைய நினைவுகளில் அலைய ஆரம்பித்தது.

''இட்டு ஐயர், போர் அடிச்சா மவுண்ட் ரோட் பக்கம் போயிட்டு வாங்களேன்.''

ஜெயில் சூப்பரிண்டெண்ட் சிரித்தபடி பேசினார்.

''என்ன சொல்றேள் புரியலையே!''

''தார் ரோட்ல பெயிண்ட் அடிக்கணு மாம். இரண்டு பேர் கேட்டாங்க. நைட் ஒர்க். முடிஞ்சதும் இங்கே வந்து படுத் திடுங்க — மூணு நாள் வேலை. மாறுதலா


இருக்கும். எல்லோரையும் இதுக்கு அனுப்ப முடியாது. உங்க மாதிரி கடுங்காவல் தண்டனை ஆட்களைத்தான் அனுப்பலாம். எனக்கு உங்க மேலே நம்பிக்கை இருக்கு. சும்மா போயிட்டு வாங்களேன்.''

நான் தலையசைத்தேன்.

எனக்கு அப்போதே தெரியும், நான் ஜெயிலுக்கு வெளியேதான் சாகப் போகிறேன் என்று.

''ஸெபாஸ்டியன், கைதி நெம்பர் 262ஐ கூட்டிக்கிட்டுப் போங்க. வயசாளி. அதட்டி மிரட்டி எதுவும் செய்ய வேணும். மெள்ளப் பேசி வேலை வாங்கணும். பயமே வேணும். நீ இல்லேன்னுக்கூட வேலையை முடிச்சுட்டு நேரே என்கிட்ட வந்துருவாரு. தங்கமான ஆள். மர்டர் கேஸ் ஆசாமி. சொந்த மாப்பிள்ளையையே திராவகம் ஊத்திக் கொன்னுட்டார். எதுக்குச் சொல்றேன்னு நீங்க அவரை ஏது என்னன்னு கொடாஞ்சி கஷ்டப்படுத்தக் கூடாது. அதுக்குத்தான். போயிட்டு வாங்க. இட்டு. வெளியே டீ பிஸ்கெட் சாப்பிடுங்க. மனசுக்குத் தெம்பு வரும்.''

நான் தலையசைத்தேன்.



''உடம்பிலே எறும்பு ஊறுற மாதிரித்தான்று ஆளு நீ. எதுக்குய்யா இப்படிச் செய்தே? கிட்டு — கிட்டு நீயா திராவகம் ஊத்தினே? ஏன் கிட்டு எதுக்கய்யா இப்படி லாக்கப் ரூமில்?'' என் இனிய நண்பர் பொற்கொல்லர் சம்பத்து ஆசாரி கம்பிகளுக்கிடையே என் கைகளைப் பிடித்து அழுதார்.

''இன்னொரு ஆம்பிளையா இருந்தா நட்டைச் செவட்டி என் மூஞ்சில எறிவான். உப்பே இல்லாத ரசத்தை தொட்டை விட்டுக் குடிச்சு எழுந்திருந்தா எப்படி— ஓர் அறை ஒட்டிக்க வைப்பாங்களேன். தப்பு பண்ணினதுக்குக் கூட கோவிச்சுக்க மாட்டேளா, எப்படிக் குடிக்க முடிஞ்சுது அந்த ரசத்தை?'' என் மனைவி அழுதாள்.

''இதோ இப்படி'' இன்னொரு கை ரசத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டு, விழி விரிய உட்கார்ந்திருந்தவளைத் தாண்டிப் பின் பக்கம் போய்க் கை அலம்பினேன்.

''அசடு — தப்புங்கறது மனுஷத்தனம். இதுக்குக் கோவிச்சுக்க முடியுமா? இரண்டு சிட்டிகை உப்பைப் போடு. ஒரு கொதி இறக்கு. சரியாப் போயிடும்!'' என் மனைவியை மெல்லத் தட்டிக் கொடுத்தேன்.

''என்ன அம்மா பேயடிச்சுக் கிடக்கா? என்ன ஆச்சு? என்னமாவது பெரிய ப்ளண்டர் பண்ணியிருப்பா. நீ போனாப் போறதுன்னு நகர்ந்திருப்பே. அம்மா தன் தலையிலே தானே அடிச்சுண்டு அழுதிருப்பா. இல்லையா? சரியான ஸாடிஸ்ட் அம்மா நீ. தன்னையே ஹிம்சைப் படுத்திக்கிறது மகா மட்டம். நிஜத்துல அப்பா உன்னைக் கடுமையாத் தண்டிச்சிருக்கார். ஒரு அறை அறைஞ்சுட்டாத் தப்புக்குத் தண்டனைன்னு உப்புப் போடாதது மறந்து போய்விடும். சமாதானமாயிடும். ஒண்ணுமே சொல்லாம இருந்துட்டா ஏழு ஜன்மத்துக்கும் உப்பு போடாத ரசம் உன்னால பண்ண முடியாது. இது தெரியாம அழறியே. எழுந்து கண்ணைத் தொடச்சுக்கோ. சினிமா போகலாம் வா — நீயும் வரயாப்பா. நிஜம்மாவே க்ரேட்பா நீ. நம்ம அம்மா ரொம்ப லக்கி.''

அவன் சொன்ன அதிர்ஷ்டம் சட்டென்று ஒரு நாள் கழித்துக் கொண்டது. புத்தியில் எத்தனை தெளிவிருந்தாலும் நிஜ வாழ்க்கை கோரமாகித்தான் போய் விட்டது. என் தைரியம் உரம் எல்லாம் கேள்வியாகி விட்டன.

அவன் குடிப்பதில்லை. புகைப்பதில்லை, சூதாடுவதில்லை, வெற்றிலை பாக்குக் கூடப் போடுவதில்லை. நான்கு பெண்களுக்கு நடுவே வளர்ந்த பிள்ளை என்றெல்லாம் யோசனை செய்துதான் கஸ்தூரியைக் கொடுத்தேன். லோகாயதமாய் ஒரு சின்னக் குறை கூட வைக்காமல் என் பெண்ணுக்கு வேண்டியதனைத்தையும் செய்தேன்.

அவனிடம் கெட்ட பழக்கமும் இல்லை, அதே சமயம் நல்ல புத்தியும் இல்லை. ஆயிரம் தைரியம் சொல்லி வளர்த்த என் பெண்ணுக்குக் கிடைத்தவன் கோழை. உத்தியோகத்தில் நடுங்கி வீட்டில் ரகளை செய்கிறவன். தெருவில் போகிறவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுப் பெண்டாட்டியை அடித்துக் கொல்கிறவன். 'எதுக்குடி சிரிச்சே?' என்று அவளை அறைந்திருக்கிறான். பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தவளிடம் கண்ணீர் விட்டுக் கெஞ்சியிருக்கிறான். 'மாட்டேன்னு சொல்றே?' என்று எட்டி உதைத்திருக்கிறான். நீ இல்லாமல் முடியவில்லை என்று கடிதம் எழுதியிருக்கிறான். நான் சற்றுக் குழப்பமடைந்தேன். இத்தகைய குணவான்களைப் பற்றித் தெரியாத என் குலக் கொடி நடுங்கித் தவித்தது.

சம்பத்து ஆச்சாரி என் வீட்டு வாசலில் உமிச் சட்டியும் ஊது உலையுமாய் நகை செய்கிறவர். சனியனை அறுத்தெறி என்று சொன்னார். நான் என் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டு வக்கீல் நோட்டீஸ் கொடுத்தேன்.

கொடுத்த நோட்டீஸை என் வீட்டு வாசலில் கிழித்துவிட்டுக் கஸ்தூரியின் தலை முடியை இழுத்துத் தெருவில் தள்ளி அறைந்த போது நிதானமாய் விலக்கி அவனைத் தெரு நடுவே நிறுத்தி ஆச்சாரி ஷெல்பில் வைத்திருந்த மஞ்சள் அமிலத்தை அவன் முகத்தில் ஊற்றினேன். வலி என்பது என்ன என்பதை உணர்த்தவே இதைச் செய்தேன்.

மூன்று நாள் நரக வேதனையில் அல்லாடி அவன் செத்துப் போனான்.

கீழ்க் கோர்ட்டில் எனக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மேல் கோர்ட்டில் அந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. ஒரு விடியற்காலையில் புதிய தாம்புக் கயிறு நோக்கி நடந்து — இது என்னைக் கொல்லப் போகிறது என்ற நினைவோடே கண்கள் கட்டப்பட, கட்டப்பட்ட கண்களுக்குள் மஞ்சள் கோடாய்க் கயிறு தெரிய — இனி மரணம் என்று மனசுக்குள் ஏற்றுக் கொண்டு மேடை ஏறும்போது கவர்னர்

நடுத்தெரு வர்க்கம்!

எங்களை நடுத்தர வர்க்கம்
என்கிறார்கள்!
கெரோசின், பால்
ரேஷன் என்று
எப்பொழுதும் தெருவில்
ஏதேனும் ஒரு க்யூவில்
நிற்கும் நாங்கள்
ஒரு
நடுத்தெரு வர்க்கம்தான்!

-பூண்டி





ஓவியர் மாருதி அவர்கள் என் கதைக்குப் படம் வரையவேண்டுமென்று விரும்புகிறேன்.

'வாஷ் டிராயிங்' பிரபலமாகிக் கொடி கட்டிப் பறக்கும் காலமிது. ஆனால் ஓவியம் பற்றித் தெரிந்தவன் நிச்சயம் கோட்டுச் சித்திரங்களைத்தான் விரும்புவான். வேகமும் உயிர்த் துடிப்பும் கோட்டுச் சித்திரங்களில்தான் அதிகம். திரு மாருதியிடம் அபார வேகம் இருப்பதைப் பல முறை உணர்ந்திருக்கிறேன். அவர் சித்திரங்கள் முரடாக இருக்கும். நிஜ வாழ்க்கையின் உஷ்ணம் அவர் எழுதும் முகங்களில் அதிகம் தெரியும். சந்தேகமான கோடு ஒன்று கூட இழுக்காமல் — தொலைவு — நெருக்கம் அத்தனையும் வித்தை காட்டுகிற அற்புதம் பல முறை கண்டிருக்கிறேன்.

அவரைக் கோட்டுச் சித்திரம் வரையச் சொல்லுங்கள். — பாலகுமாரன்

ஏற்ற கருணை மனுவோடு கதவு தட்டப் படுகையில் நான் துணியை விலக்கிக் கிழிறங்குகையில் என்னுள் ஏதோ நிகழ்ந்து விட்டது.

தூக்குத் தண்டனை கேட்டுப் படுத்த மனைவி மெலிந்து மெலிந்து மெல்லச் செத்துப் போனாள். நான் பரோலில் வெளியே வந்தேன். எரியூட்டினேன். சுமங்கலிகளுக்குச் சாதம் போட்டேன். வெற்றிலை பாக்கு குங்குமம் மஞ்சள் வைத்துக் கொடுத்தேன்.

ஜெயிலுக்குப் போக இன்னும் இரண்டு நாட்கள் இருக்கையில் என் பெண்ணோடு பேசினேன்.

''கஸ்தூரி! நீ ஏம்மா இப்படி இருக்கணும்? எதுக்கு நெத்தியிலே ஒண்ணுமில்லாமக்கோரப் படுத்திக்கணும்? புருஷன் செத்துப் போனால் தான் துக்கம் கொண்டாடணும். அவன் புருஷனே இல்லையே குழந்தே. நீ சாதாரணமா இரேன். நீ தைரியமா மஞ்சள் பூசிக்கோ. குங்குமம் இட்டுக்கோ. நம்மை அழகு படுத்திக்கிறது தைரியப்படுத்திக்கிற மாதிரிதான்.''

''அழகுங்கறது எதுப்பா?''

''எது கண்ணுக்குக் குளுமையோ அது அழகு. மஞ்ச மஞ்சேர்னு உன் அம்மா உடம்பு முழுக்க மஞ்சள் தடவிப் போனாளே அதுவும் அழகுதான்.''

''நீ சொல்றது தப்புப்பா.''

''என்ன கஸ்தூரி?''

''மஞ்சள்ங்கறது உரம்.''

''புரியலையேம்மா.''

''என் தைரியம் என்னை விட்டுப் போயிடுத்துப்பா. அந்த அசட்டுக்கு நீ கொடுத்த தண்டனை அதிகமோன்னு படறது. அது அசடுப்பா — விட்டு உதறியிருக்கலாம். ஆளை ஊத்திக் கொல்லலாமோ? பெரிய குத்தமா — என்னோட குத்தமாவே படறது அது.

''அப்பா—ஊர் சிரிக்குமேன்னு நான் பயப் படலே. என் புருஷன் நல்லவனா இருந்து நாலு மாசத்திலே செத்துப் போனாக் கூட நான் கடைசி வரைக்கும் மஞ்சள் தேய்த்துக் குளிப்பேன். ஒரு நிறைவோடே காலந் தள்ளுவேன். ஒரு உசிர் என்னமாத் தவிச்சதுங்கற ஞாபகம்தான் இப்போ வருது. தவிக்க வச்சது பாபங்கற மாதிரிப் படறது. என் வேர் அறுந்து போயிடுத்து. நான் என் புருஷனைச் சொல்லலே. நானும் என்னைச் சேர்ந்தவாளும் நியாயமானவங்கற நம்பிக்கை உடைஞ்சு போயிடுத்து. ஒருத்தரைத் தண்டிக்கலாம். அறவே அழிக்கலாமோ? தண்டிக்கறது உனக்கு உன் தப்புப் புரியணும் கறதுக்காக. உனக்குத் தூக்குத் தண்டனை நின்று ஆயுள் தண்டனை கிடைச்சப்போ நானும் சந்தோஷப்பட்டேன். ஏன் தெரியுமோ? உன் செயலுக்குத் தூக்கை விட இதுதான் சரியான தண்டனை. உன் செய்கை என்னன்னு உனக்குத் தெரியாமப் போயிடக் கூடாதில்லையா? மஞ்சள்ங்கிறது உரம் அப்பா. தப்புப் பண்ணாதவாதான் மஞ்சள் பூசிக்கலாம். மஞ்சளை உடுத்திக்கலாம். உலகத்திலே அத்தனை செடியோட வேரும் மஞ்சள்தான். என்னோட வேர் அறுந்துடுத்து. நீ சொன்னப்படியெல்லாம் என்னால பூசிக்க முடியாது.''

நான் ஜெயிலுக்குத் திரும்பினேன். கண்களை மூடினபோதெல்லாம் மஞ்சளை உணர்ந்தேன். அங்கே சமையலுக்குக் கீரை ஆய்கிற போதெல்லாம் வேரை அளைந்தேன். விடியல் வேளையில் அலறல் கேட்ட போதெல்லாம் மஞ்சள் தாம்புக் கயிற்றை நினைத்தேன். என்ன கேட்டாலும் என்ன செய்தாலும் வெறித்து அமைதியாய் உள்ள நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

கடந்த ஆறு வருடங்களில் நான் பேசினதை இரண்டே பக்கத்தில் எழுதிவிடலாம். இங்கு என் மௌனத்தைக் கண்டு என்னைச் சாமியார் ஆக்கினார்கள். உயரே தூக்கி வைத்தார்கள். விருப்பு வெறுப்பு அற்றுப் போனதால் அதிகம் நம்பினார்கள்.

வெளியே மஞ்சள் பெயிண்ட் அடிக்க அனுப்பினார்கள். தார் சாலை நடுவே மஞ்சள் கோடு இழுக்க இழுக்க என்னுள் என் உயிர் முடிச்சுக்கள் மெல்ல அறுந்தன. இருப்பதற்கும் இல்லாது போவதற்கும் வித்தியாசம் ஒழிந்து போக நான் என்னுள் இருந்து வெளியேறுவது எனக்கே தெரிந்தது. தூக்கு மேடை வரை ஒரு முறை சென்று வந்தது. இதற்கு உதவி செய்தது.

நான் அறிய — நிதானமாய் — எந்த ரகளையும் இல்லாமல் என் உயிர் என்னை விட்டுப் பிரியும்போதுதான் தெரிந்தது.

உயிரின் நிறமும் மஞ்சள்.

மஞ்சள் என்பது உரம்.

ரஸவாதம்

சு. சமுத்திரம்

ஊருக்குச் சற்றுத் தொலைவில், தனித்து இருப்பது போல் தோன்றும் முருகக் கோட்டத்தை ஒட்டி இருந்த அந்தக் குடிசை வீட்டின் கதவுகள் மூடப்பட்டிருந்தாலும் உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருப்பது வெளியே வெளிச்சமாகத் தெரிந்தது. ஊரில் வயதுப் பெண்களை வைத்திருக்கும் பெற்றோர்களால் 'ஜோஸ்யர்' என்றும், டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளால் 'வைத்தியர்' என்றும் உள்ளூர்ச் சாமியாடிகளால் 'சாமியார்' என்றும், பணக்காரப் பண்ணையார்களால் 'பரதேசிப் பயல்' என்றும் படித்த இளைஞர்களால் 'லூஸ்' என்றும் நினைக்கப் படுபவரான சம்பூர்ணம், மாடத்தில் இருந்த ஒரு ஊதாப் பொருளை எடுத்துத் திருப்தியுடன் பார்த்து விட்டுப் பிறகு அதனருகே இருந்த இன்னொரு ஊதாப் பொருளையும் உற்று நோக்கி விட்டு அருகே இருந்த ஓலைச் சுவடியைப் புரட்டி, குறிப்பிட்ட ஓர் ஏட்டில் உள்ள வாசகத்தை இலேசான குரலில், கனமான ராகத்தில் பாடினார். பிறகு, அந்த இரண்டு ஊதாப் பொருள்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்றார். அந்தப் பொருட்களில் ஒன்று செப்புக் களிம்பு. இருபத்தைந்து பைசா எடையுள்ள செம்புக் கட்டியில், இரண்டு நாட்களுக்கு முன்பு குற்றாலத்திலிருந்தபோது எலுமிச்சம் பழச் சாறைப் பிழிந்து வைத்திருந்தார். இப்போது அந்தக் கட்டி தனது சுய நிறமான ஊதா நிறத்தில் லேசாகக் குழைந்தது போல் களிம்பாக நின்றது. இன்னொன்று மயில் துத்தம். முள்ளம் பன்றி மாதிரி மொர மொரவென்று அதுவும் ஊதா நிறத்தில், உற்றுப் பார்க்கும் அவரையே உற்றுப் பார்ப்பது போல் இளித்தது.



சம்பூரணம், கீழே உட்கார்ந்து, விபூதிப் பைக்குள்வைத்திருந்த பாதரசத்தை எடுத்துத் தரையில் வைத்தார். அது—தரையில் அங்கு மிங்குமாக ஓடிக் கொண்டிருந்தது. உடனே அவர் மடியில் வைத்திருந்த ஒரு மூலிகை இலையைப் பிழிந்து அதில் ஊற்றினார். பாதரசம் இப்போது, கோலிக் குண்டு மாதிரி உருண்டு திரண்டு, அப்படியே நின்றது. சம்பூரணம், தன்னை மீறிச் சிரித்துக் கொண்டே ஊதா நிறத்தை உள்ளடக்கிய செம்பையும் களிம்பையும் மயில் துத்தத்தையும் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டார். இவற்றின் ஊதா நிறத்தைப் போக்கி விட்டால் கிடைக்கும் பொருள் சாதாவாக இருக்காது. அவருக்கும், அவருக்கு ஆண்டுக் கணக்கில் பணிவிடை செய்த குருவை மிஞ்சிய சிஷ்யனாகி விட்டதில் ஒரு திருப்தி இருக்கும்.

சம்பூரணம், கீழே உட்கார்ந்து பைக்குள் வைத்திருந்த மூலிகையை எடுத்து வைத்துக்கொண்டு அந்த ஊதாப் பொருட்களை உட்கார்ந்தபடியே பார்த்தபோது, மயில்சாமி, 'எப்போ சாமி வந்தீங்க?' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான்.

''மயில்சாமி, நீ வந்தது நல்லதாப்போச்சு. இன்னைக்கு ஒண்ணு செய்யப் போறேன்.

அதுக்கு ஒன்னைத் தவிர வேறே ஆளில்லே. அதாவது வாலே. என்ற பாத்திரத்தில் ஒரு மூலிகையைப் போட்டு, வீரம், பூரம் உட்படப் பல சாமான்களைப் போட்டு மூடிக் கமலாக்கினியால் எரிக்கணும். அதாவது நெருப்பு பூ விரியறது மாதிரி எரியணும். அப்புறம் அதில் வருகிற நீராவியை ஒரு பாட்டிலில் பிடித்து நீராக்கி, அந்த நீரை மயில் துத்தத்தில் வைத்து அரைக் கணும். மயில் துத்தம் காய்ந்த பிறகு அதை, அகல் விளக்கில் வைத்துப் புடம் போடணும். மயில் துத்தத்தோட ஊதா நிறம் போயிடும். இதைத்தான் 'துருக போகும்' என்று பாட்டு சொல்லுது. அப்புறம் இதைச் செம்புக் களிம்பை உருக்கி வெள்ளையாய் மாறிடும். இந்த மயில் துத்தத்தைப் போட்டு ஜலத் துல விட்டால்....விட்டால்....''

''விட்டால்....''


''அதை நீயே பாரு. ஆனால் ஒன்னு. நான் பொருளாசையால இதைப் பண்ணல. வன்னியர் மகள் 'பெயர் கொண்டிருக் கும்' மூலிகைன்னு பாட்டு சொல்லுதே அது எதுன்னு இன் னும் யாருக்குமே தெரி யாது. என்னோட குரு நாதருக்கும் தெரி யாது. நான்தான் 'பன்னைப் பனையைப் பார்த்திருந்தான்' என் கிற வரியை வன்னியர் மகளோட இணைத்துப் பார்த்தேன். அதன் விளைவாகக் கிடைத்த மூலிகை யைப் பாத ரசத்துலே சோதிக்கப் பார்த்தேன். பேஷ் இன்னும் நாலு நாளை யில இந்த இரண்டு மேலேயும் இருக்கிற

மாயவில்

வண்ணக் கலவையினால்
வளைவு நிறுத்தியதாய்
கண்ணுக்குக் காட்சி தரும்
கவினழகு வானவில்லே!
விண்ணும் வெறும் வெளியில்
விந்தை நிகழ்த்திடும் நீ
என்னரிய மாயையன்றோ?
எவர்ந்தப் பொய் வடிவம்?
-குயிலன்

ஊதா நிறம் போய் இன்னொரு நிறம் வரும். அந்த நிறம் என்னோட குரு நாதருக்கு என்னோட நிறத்தைக் காட்ட ணும். மற்றபடி எனக்கு வேற நோக்கம் இல்லே. உனக்கும் இருக்கப்படாது. சொல் றது புரியுதாப்பா?''

''எனக்குப் புரிஞ்சா என்ன புரியாட்டா என்ன சாமி... ஒங்க குருநாதர் சொல்றதை நீங்க செய்வீயளோ மாட்டீயளோ நீங்க சொல்லுறதை நான் தட்ட மாட்டேன்.



''சரி, ஆரம்பிப்போமா?''

சம்பூரணம் அதே கிராமத்தைச் சேர்ந்தவர்தான். ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த அவருக்கு இருபத்தைந்து வயதில் மணமேடை கிடைத்தது. ஆனால், ஐந்தாண்டுகளில் மண மேடையில் சரிபாதியாக இருந்தவள் பிண மேடைக்குப் போன துக்கம் தாங்காது அவரது சொத்துக்களைச் சகோதரர்களிடம் விட்டு விட்டுக் கோவில் குளங்களைச் சுற்றத் தொடங்கினார்.

குற்றாலத்துக்குக் குருநாதரிடம் வந்து, 'ரஸவாதம்' பற்றிப் பேசும் சாமியார்கள் என்பவர்களையும், சம்சாரிகள் என்பவர்களையும் உற்றுக் கவனித்தார்.

ஒரு நாள் குருநாதரிடம் 'வட்ட வட்டமாய் வன்னியர் மகளாய் இருக்கிற மூலிகை எது?' என்று கேட்டார். சம்பூரணத்தை ஏற இறங்கப் பார்த்த அந்த எண்பது வயது ஆசிரமக்காரர், 'இது வைத்தியத்துக்குச் சம்பந்தப்படாத மூலிகை. உனக்குத் தெரிய வேண்டிய தேவையில்லாத ஒரு மூலிகை' என்று கடுகடுப்போடு, 'இனி 'இதைப் பற்றிக் கேளாதே' என்பது போல் சொல்லிவிட்டார். இதுவே சம்பூரணத்துக்கு ஒரு போர் உணர்வை ஏற்படுத்தியது. தானே அந்த மூலிகையைக் கண்டுபிடித்து, 'ரசவாத' பரீட்சையில் தேறி, குருநாதருக்கே மார்க் போட வேண்டும், என்ற எண்ணம்.

இத்தகைய மனோபாவத்தில் ஊருக்கு வந்த சம்பூரணம், ரஸவாத வித்தையைக் கண்டுபிடித்ததைக் காட்சி யாக்க நினைத்த சமயத்தில்தான் மயில்சாமி வந்தார். வர வேண்டியவர்தான்.

இருவரும் சேர்ந்து, கண்டுபிடிக்கப்பட்ட மூலிகையையும் இதர மருந்துப் பொருட்களையும் அந்த வீட்டிலேயே இருந்த கமண்டலம் போன்ற பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்தார்கள். கீழே 'கமலாக்கினி'. பாத்திரத்தின் மேல் முனையில் யானையின் தும்பிக்கை போலிருந்த குழாயின் வழியாக வந்த நீராவியை ஒரு சீசாவில் பிடித்துக் குளிர்ந்த நீரில் சீசாவை வைத்தார்கள். நீராவி நீராகியது. பிறகு மயில் துத்தத்தை அந்த நீரில் போட்டுக் கல்வத்தில் அரைத்து வெய்யிலில் காயவைத்தார்கள். பின்னர் அதை அகல் விளக்குகளால் மூடித் துணியால் இறுகக் கட்டினார்கள். அப்புறம் அதைப் 'புடம்' போட்டார்கள்.



அகல் விளக்குகளை விலக்கியபோது மயில்சாமி துள்ளிக் குதித்தார்.

''சாமி... ஊதா நிறம் போயிட்டது... போயிட்டுது... எல்லாம் போயிட்டுது...''

''இதுக்குப் பேருதான் சுன்னம். மயில் துத்தத்துல ஊதாவைப் போக்கிவிட்டால் சுன்னம்.''

சம்பூரணம் சிரித்துக் கொண்டார். மறுநாள், மயில்சாமி, சந்தையிலிருந்து வாங்கிக்கொண்டு வந்திருந்த ஊது உலையில் செம்புக் களிம்பு உருக்கப்பட்டது. அந்தக் களிம்பு குழைந்து நெளிந்து ஊதா நிறத்தில் தவழ்ந்தபோது, சம்பூரணம் அதன் மீது வெள்ளைப் பஸ்பமாக மாறிய மயில் துத்தத்தைப் போட்டுவிட்டு, அந்தக் கலவையைப் பானையில் இருந்த நீரில் போட்டார்.

இருவரும் ஊதா நிறத்தில் காட்சியளித்த அந்தச் செம்புக் களிம்பையே பார்த்தார்கள். ஊதா நிறம் மாறிக் கொண்டே இருந்தது. படிப்படியாக, கண் முன்னாலேயே கண்ணுக்குத் தெரியாமலேயே மாறிக் கொண்டிருந்தது. இப்போது மயில்சாமியுடன் சம்பூரணமும் சேர்ந்து துள்ளிக் குதித்தார்.

''செம்பு... தங்கமாய் மாறிட்டு... தங்கமாய் மாறிட்டு... நினைச்சதைச் சாதிச்சிட்டேன்.... சாதிச்சிட்டேன்...''

''என் பொண்ணுக்கு மட்டும் இப்படி மூணு பவுன் கிடைச்சால், அவள் கல்யாணம் எப்பவோ முடிஞ்சிருக்கும்.''

மயில்சாமி தன்னை யறியாமல் சொல்லி விட்டு, தன்னை யறிந்து உதட்டைக் கடித்தார். சம்பூரணம், அவரையே பார்த்தார். பாவம்... பரம ஏழை... இவன் பெண்ணுவது நல்லா வாழணும்...

சம்பூரணம், நீரில் கிடந்த தங்கத்தை எடுத்து மயில்சாமியிடம் நீட்டினார். அவர் வாங்காமலே பதறினார். பிறகு, மகளுக்கு ஒரு சங்கிலி போட்டால், கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறு விழும் என்ற எண்ணத்தில் வாங்கிக் கொண்டு, அங்கே நிற்கப் பயந்தவர்போல் வீட்டுக்கு ஓடினார். 'இந்தத் தங்கம் எப்படிக் கிடைச்சது.... மிராசுதார் அருணாசலம் வீட்ல நகை நட்டுத் திருடு போயிட்டுதாம். இந்தத் தங்கம் எப்படிக் கிடைச்சது? எனக்கு.. இப்பவே ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சாகணும்' என்று குதித்த மனைவியிடம் தான் திருடன் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டி ரகசியத்தைச் சொல்லி விட்டார் மயில்சாமி. அதே சமயம், 'மத்தவங்ககிட்டச் சொல்லப்படாது' என்று சொல்லி விட்டார். அந்தத் தங்கக் கட்டியையே பார்த்துக் கொண்டு மயில்சாமியின் மனைவி நின்றபோது, பண்ணையார் அருணாசலத்தின் ஒரு பாதியான — அவரை விட இரு உடம்பு கொண்ட காளியம்மாள் தங்கக் கட்டியையும், அதைக் கெட்டியாகப் பிடித்திருந்தவளையும் பார்த்தாள். மயில்சாமியின் மனைவியிடம் 'வயலுக்குப் போய்ச் சீ

ம

டரத்தைத் தூவிவிட்டு வாரியா' என்று சொல்வதற்காக வந்தவள், வந்த சொல்லை வாய்க்குள்ளேயே ஒதுக்கிக் கொண்டு, ''எங்க நகைகளை இவ்வளவு சீக்கிரத்தில எப்படிம்மா உருக்க முடிஞ்சது...' மீதிய எங்க வச்சிருக்க...? அவரு போலீஸ் கிட்டத்தான் போய்க்கிட்டு இருக்காரு'' என்று சொன்னபோது மயில்சாமியின் மனைவியால் ரகசியத்தைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

சம்பூரணம் புறப்பட்டுக் கொண்டிருந்தார். 'வார துப்பசில... கல்யாணத்தை வச்சிடு. நாளைத் தள்ளாதே'' என்று மயில்சாமியிடம் அவர் சொல்லிக் கொண்டிருந்த போது, பண்ணையார் அருணாசலம், வீட்டுக் கதவைத் தள்ளிக் கொண்டு வந்தார்.

''நானும் துப்பசில என் பொண்ணுக்குக் கல்யாணம் வச்சிருக்கேன். நிச்சயதாம்பூலம் கூட ஆயிடுச்சு. ஒரு பத்துப் பவுன் நகை யாலே நின்னுடப்படாது பாருங்க....இது... செம்புக் களிம்பு. அரைக் கிலோ. இது மயில் துத்தம் கால் கிலோ... நீங்க சும்மா அந்த மூலிகையைப் போடணும்...அவ்வளவு தான். கல்யாணம் முடிஞ்சிடும்....''

சம்பூரணம், அருணாசலத்தைப் பார்த்தார். அவர் பிரித்துக் காட்டிக் கொண்டிருந்த இரண்டு தாப் பொருட்களைப் பார்த்தார். மோசமான மனுஷன். கள்ள நோட்டு அடிக்கப் பார்த்தவன். பக்கத்து வயல் வரப்பை வெட்டுறவன்....

''பணம் படைச்ச நீ ஆசைப் படறது தப்பு. ஒன் மகள் கல்யாணம் நடக்கும். அவள் தீர்க்காயுசா குழந்தை குட்டிகளோட வாழ்வாள். நான் சொல்றதை நம்பு!''

''நம்புறேன் அய்யா நம்புறேன். அதே மாதிரி நான் சொல்றதையும் சாமி நம்பணும். என்னோட பத்துப் பவுன் நகை போயிட்டுது. தும்பது பவுன் போடறதா பொறுப்புப் பேசியிருக்கேன். பத்துப் பவுன் காணல. மயில்சாமி என்னோட நகையைத் திருடலன்னு நான் நம்புறதுக்காவது நீங்க பத்துப் பவுனையாவது தங்கமாத் தரணும். இல்லேன்னா இவனைப் போலீசில பிடிச்சுக் கொடுப்பேன். அங்கே இவனோட திருட்டு அம்பலமாகும். இல்லேன்னா ஒங்க குட்டு அம்பலமாகும். கவலைப்படாதீங்க சாமி! நான் யாரு கிட்டயும் சொல்ல மாட்டேன். சரி... வேலைய ஆரம்பிப்போமா?''

சம்பூரணம், தெளிந்துவிட்டார். ஆசாமியிடம் இருந்து தப்ப முடியாது. எப்படியாவது சமாளிக்க வேண்டும்!

''சரி...இப்படி வா... சொல்லித்தரேன்!''

''அப்படிச் சொன்னா எப்படிச் சாமி? நீங்க தப்புத் தப்பாச் சொல்ல மாட்டீங்க என்கிறது என்ன நிச்சயம்? நீங்க சத்தியவான். சத்தியம் மீற மாட்டீங்க... வாங்க. முருகன் கோவிலுக்குப் போவோம்...நான் தேங்காய் பழம் கொண்டு வந்திருக்கேன். தாம்பாளத் தட்டுல ஒரு கற்பூரத்தைக் கொளுத்தறேன். நீங்க 'முருகா! இவருக்கு அதாவது இந்த அருணாசலத்துக்குச் சத்தியமாய்த் தெரிஞ்சதைத் தான் சொல்லிக் கொடுக்கேன். பொய் சொல்லலேன்னு எதுக்கும் ஒரு பேச்சுப் பேசிடுங்க!''



இந்தக் கதைக்குக் 'கோபுலு' மிகப் பொருத்தமாக வரைய முடியும் என்று நினைக்கிறேன். அவரின் ஒவ்வொரு கோடும் ஓர் உணர்ச்சியின் கோடு. எலும்பு தோல் போர்த்த யாக்கைகளுக்கும் என்னென்ன உணர்வுகள் எல்லாம் இடக்கின்றன என்பதைக் கோடி காட்டும் ஓவியர். கதாசிரியனுக்கு இவர் 'உரையாசிரியர்'. — சு. சமுத்திரம்

சம்பூரணம், சத்தியம் செய்து விட்டார். அந்தக் கையோடயே அருணாசலத்துக்குச் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமலே ஓடினார். குருநாதரைப் பார்க்கப் பயம்.

ஒரு மலையடிவாரத்துக்கருகே போய் உட்கார்ந்தார். மலை உச்சியில் இருந்த முருகன் கோவிலுக்குள் நுழையும் தைரியம் இல்லாமல், மனத்துக்குள் புலம்பினார்.

''முருகா! சத்தியவானுவை உன் முன்னால் செய்த சத்தியத்தையும் மீறி, அருணாசலத்துக்கு ரசவாதத்தை மாற்றிச் சொல்லிவிட்டேன். திருக்குறளில் சொன்னது போல் இந்த நாட்டின் பொருளாதாரக் கட்டுக் கோப்பைக் குலைக்கக் கூடாது என்பதற்காகவும் தனிமனிதர்கள் பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்கக் கூடாது என்பதற்காகவும் உன் முன்னால் கொடுத்த சொல்லையும் மீறி அவனுக்கு 'புரை தீர்ந்த' பொய்மையைக் காட்டி விட்டேன். ஒருவேளை... இதுவும் ஒன் விளையாட்டோ என்னமோ.. வாக்குத் தவறியவனுக்கு ஒரு வாக்குக் கொடுப்பா...''

பட்டணம் சுற்றிய பரதேசியான சம்பூரணம், மலையுச்சிக் கோவிலையும், பனை மரங்களையும் பார்த்துக்கொண்டிருந்தபோது-

பண்ணையார் அருணாசலம் வீட்டில் திருமண விழா. மணமகள் மண மேடையில் ஏறி, மணமகனுடன் சேர்ந்து கொண்டாள். தாலி கட்டப் போகிற சமயம். 'இப்போதைக்குப் போதும்' என்று சொல்லி அருணாசலம் உருவாக்கிய இருபது பவுன் தங்கக் கட்டி மணமகளின் கரங்களில் தங்கக் காப்புகளாக, கழுத்தில் ரெட்டை வடச் சங்கிலியாக மின்னியது. தாலி கட்டப் போகிற சமயம் பிள்ளை வீட்டார் அவளை உற்றுப் பார்த்தார்கள். உற்று உற்றுப் பார்த்தார்கள். அருகில் போய்ப் பார்த்தார்கள். அதிர்ச்சியுடன் பார்த்தார்கள்.

மணமகளின் காப்புகளும், ரெட்டை வடச் சங்கிலியும் திடீரென்று ஊதா நிறத்தில் கண் சிமிட்டின.

பூக்குழி

லக்ஷ்மி

8

மூன்று நாட்கள் தொடர்ந்து பக்கத்து டவுனில் இருந்த கண் வைத்தியரிடம் மாமியாரை அழைத்துச் செல்ல நேர்ந்தது அகல்யாவுக்கு.

கண்களைப் பரிசோதிக்கும் முன் ரத்தப் பரிசோதனை — எக்ஸ்ரே—இதயப் பரிசோதனை என்று அவளை வேறு சில இடங்களுக்கு அந்த வைத்தியர் அனுப்பி விட்டிருந்தார்.

காங்கேயத்துக் காளைகள் பூட்டிய வண்டி உள்ளே மெத்தை வைத்துத் தைத்துத் திண்டுகளைச் சாத்தி உட்கார வசதிகள் செய்யப்பட்டிருந்தன. மாடுகளுடன் பழக்கப்பட்டிருந்த வேலையாள் முனியாண்டிதான் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான். ஜல் ஜல் என்று சதங்கை ஒலியுடன் நெடுஞ்சாலைமீது மாடுகள் துரித கதியில் சீராக ஓடியபோது



காரில் சவாரி செய்வது போன்றுதான் சுகமாக இருந்தது. அப்படி இருந்தும் பஞ்சரத்தினம் வீட்டுக்கு வந்ததும் இரவு வேளைகளில் கழுத்து வலி, முதுகு வலி என்று அவதிப்பட்டாள்.

தனது உடல் அயர்வைப் பாராட்டாது இரவில் எந்த வேளையானாலும் எழுந்திருந்து உப்பு வறுத்துக் கொண்டு மாமியாருக்கு ஒத்தடம் கொடுத்து உபசரித்தாள் அகல்யா. வைத்தியர் கொடுத்திருந்த தூக்க மாத்திரையைச் சாப்பிடச் செய்து மாமியார் உறங்கும்வரை கால்களை அமுக்கிப் பிடித்துப் பணிவிடைகள் பலவும் சலிக்காது செய்தாள்.

இன்னும் எத்தனையோ அவள் செய்யத் தயாராகத்தான் இருந்தாள். ஆனால் அன்று மாலை அவர்களை மீண்டும் வரச் சொல்லியிருந்த கண் வைத்தியர் கொடுத்த தகவல் அவளைத் துயரப்படுத்தி விட்டிருந்தது. அவளை உள்ளே வரச் சொல்லி மேஜைக்கெதிரே கிடந்த ஆசனத்தைக் காட்டினார் கண் வைத்தியர்.



இந்தப் பீடிகையே அவளை மிகவும் கலவரப்படுத்தி விட்டது. ''உங்களோடு கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும். பெரிய அம்மாவுக்கு இதெல்லாம் தெரிய வேண்டியதில்லை....'' சொல்லிக்கொண்டே உறையிலிருந்த எக்ஸ்ரேயை இழுத்து வெளிச்சத்தில் பிடித்தபடி தமது தலையை இலேசாகத் தடவிக் கொண்டார் வைத்தியர்.

''எக்ஸ்ரே, ரத்தப் பரீட்சை, இதயப் பரிசோதனை இவைகளின் முடிவான விவரங்களை அந்தந்த வைத்தியர்கள் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். பெரியம்மாவின் கண்களையும் பரிசோதித்துப் பார்த்தாகி விட்டது. ஒண்ணுமே திருப்தியாக இருக்கவில்லை.'' 'பகீர்' என்ற உணர்வில் அகல்யா ஒரு கணம் சங்கடப்பட்டு விட்டாள்.

''அவங்க உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லீங்களே?'' அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. அருகில் இருந்து இந்தச் சமயம் உதவக் கணவன் கூடவே இல்லையே என்ற ஆதங்கத்தில் மலைத்துப் போனாள்.

ஒண்ணு ரெண்டுன்னு இருந்தால்தானே கவலைப்படணும்? வெள்ளம் சாண் போனால் என்ன! முழம் போனால் என்ன என்கிற நிலை இப்போது....

''ஏற்கனவே இவங்களுக்கு லேசா ஒரு தடவை மாரடைப்பு வந்திருக்கிற அறிகுறி ஈ. ஸி. ஜி. யில் தெரிகிறது. இதுக்கு முன்பு எப்பவாவது அவங்களுக்கு நெஞ்சு வலி வந்ததுண்டா? கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்க!''

நினைத்துப் பார்த்தாள் அகல்யா. அவள் கணவன் வெளி நாட்டுக்குப் புறப்பட்டுப் போன பின்பு — சில நாட்கள் தொடர்ந்து பஞ்சரத்தினம் பிரிவுத் துயரம் தாளாமல் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

'நெஞ்சிலே இத்தனை ஆசைகளைச் சுமந்துண்டு கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேனே. இந்தப் பிள்ளை வேலை பெரிசுன்னு என்னை உதறிட்டுப் போயிட்டான். அந்த நினைப்பே என நெஞ்சிலே வலியாக வந்து வேதனை பண்ணுது' என்று ஒரு நாள் இரவு படுக்கப் போகு முன் விசும்பி அழுதாள் தாயார்.

''என்னங்க அத்தை — டாக்டரைக் கூட்டி வரச் சொல்லவா'' -பதறினாள் அகல்யா.

''ஒண்ணும் வேணாம். வயிறு கொஞ்சம் மந்தமா இருக்கு'' என்று கூறிவிட்டுச் சமையலறைக்குள் புகுந்து தானே கொஞ்சம் சுக்குக் கஷாயம் தயார்த்துச் சாப்பிட்டாள்.

அப்பொழுது பஞ்சரத்தினத்துக்கு ஒரு கண்ணில் நல்ல பார்வை இருந்தது.

''நெஞ்சுவலின்னு ஒரு தடவை சொன்னாங்க கை மருந்து தானே ஏதோ சாப்பிட்டாங்க... சரியாப் போச்சன்னாங்க. அதை நான் பெரிசு பண்ணலை. அது ஒரு லேசான மாரடைப்பு நோயாக இருக்குமோ?''

''இருந்திருக்கலாம்.''

பகீர் என்ற உணர்வு அவளுக்கு. அதை அப்பொழுதே வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை செய்யாதது எத்தனை பெரிய பிசகு? அவள் கணவனுக்கு என்ன பதில் சொல்லுவாள்?

"இதயம் பலவீனப்பட்டு வீங்கியிருக்கிறதை எக்ஸ்ரே காட்டுகிறது. அத்தோட சுவாசப் பைகளில் நீர் கோத்துக் கொண்டிருக்கிறது. ரத்தத்திலே எக்கச்சக்கமான சர்க்கரை. ரத்த அழுத்தம் வேறே."

"கூடக் கொஞ்சம் மருந்தை ஊசியில் ஏத்தினாச் சர்க்கரை குறைஞ்சுடுமே.. அதே போல் ரத்த அழுத்தத்துக்கும் வேறே புதுசா ஏதாவது மருந்து குடுத்திங்கன்னு குறைஞ்சுடாதா? கண்ணை ஆப்பரேஷன் பண்ணினால் பார்வை வரவாமில்லேயா? ஒரு கண்ணிலாவது கொஞ்சம் பார்வை வந்தால்தானே அவங்களுக்கு நிம்மதி...."

"அதைத்தான் சொல்ல வரேன். இத்தனை கோளாறுகள் இருப்பதால் ஆபரேஷனுக்குத் தகுதியற்றதொரு கேஸ்ன்னு முடிவு செய்துட்டேன்."

"அப்படின்னு அவருக்குப் பார்வை இடைக்க வழியில்லேயா?"

"ரொம்ப வருந்தறேன். போன தடவை ஒரு கண்ணை ஆபரேஷன் செய்தேன். அது தோல்வியாகி விட்டது. அதில் கொஞ்சம் கூடப் பார்வை யில்லே. இப்போ இந்தக் கண்ணில் காட்டரேக்ட் நன்கு முற்றிவிட்டிருக்கிறது. ஆபரேஷன் செய்யப் பக்குவமான நிலைதான். ஆனால் பயன்தான் ஒன்றும் ஏற்படப் போவதில்லே. வீணா இதய பலவீனமான அவங்களைப் போட்டுத் தொந்தரவு செய்து என்ன பிரயோஜனம்?"

"அப்படின்னா..." அகல்யாவுக்கு மேலே பேசத் தோன்றவில்லே. நெஞ்சிலே ஒரு படபடப்பு.

"அப்படின்னு இன்னும் சில நாட்களில் இவங்க பார்வை முழுதும் இழந்து குருடராகி விடுவார்கள். நான் ரொம்ப வருந்துகிறேன். வேறே செய்வதற்கு ஒன்றுமே யில்லே."

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் வேண்டும் என்று பேசினார். அவரைக் கேலி செய்ய எண்ணிய ஒருவன், 'நரகலோகத்துக்கு?' என்று கத்தினான். "இப்படி ஒவ்வொருவரும் தத்தம் நாடுகளுக்காகப் பரிந்து பேச வேண்டும் என்பதுதான் நான் சொல்ல வந்தது" என்றார் லாயிட் ஜார்ஜ்.

வ. தேனப்பன்



நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு மெல்ல எழுந்திருந்தாள்.

"அப்படின்னு நாங்க மறுபடியும் இங்கே வரத் தேவையில்லேன்னு சொல்றீங்க...." மீண்டும் சந்தேகத்துடன் கேட்டாள்.

"தேவையில்லே. பயனும் இல்லே." டாக்டர் ஆசனத்திலிருந்து எழுந்தார்.

சோடா பாட்டில் கண்ணாடிகள் போன்ற பருமனான அந்த மூக்குக் கண்ணாடி வழியே தெரியாத உருவங்களைத் தெரிந்து கொள்ள முயன்று வெறித்தபடி வெளியே பெஞ்சின் மீது பஞ்சரத்தினம் உட்கார்ந்திருந்தாள்.. காலடி ஓசை கேட்டதும் ஆவலுடன் அந்தப் பக்கம் திரும்பினாள். "டாக்டர் என்ன சொன்னார்? சீக்கிரம் ஆபரேஷன் பண்ணிடலாமுன்னு நினைக்கிறாரா?"

வேதனையும் துக்கமும் அகல்யாவைக் கப்பிக்கொண்டன.

"கொஞ்ச நாட்கள் ஓய்வா வீட்டிலிருந்துட்டுப் பிறகு வரச் சொல்லி யிருக்கிறார்." கண் தெரியாதவளிடம் பொய் சொல்கிறோமே என்ற அவமான உணர்வில் தவித்தபடி அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்று வண்டியில் மெள்ள ஏற்றி விட்டாள்.

அன்று இரவு இலையில் அளவோடு மருமகள் வைத்த கோதுமைச் சோற்றைக் குழம்புடன் கலந்து பிசைந்து ஒரு கவளம் போட்டுக் கொண்டாள் பஞ்சரத்தினம்.

அவளுக்குத் துக்கம் நெஞ்சை இறுக்கவே தொண்டையிலேயே சோறு அடைத்துக் கொண்டு விட்ட உணர்வில் திணறிப் போனாள். கொஞ்சம் தண்ணீரைப் பருகக் கையை நீட்டினவள் தம்ளரைத் தட்டிவிட்டாள். மேஜையின் மீது சாய்ந்த தம்ளர் தண்ணீரைக் கொட்டி வழியச் செய்துவிட்டு உருண்டு 'டமால்' என்ற சத்தத்துடன் கீழே விழுந்து விட்டது.

அடுப்பில் காய்ந்த பாலை இறக்கி வைக்க உள்ளே சென்றிருந்த அகல்யா ஓடிவந்தாள்.

"என்ன சத்தம்?" என்று திகைப்புடன் கேட்டாள்.

"எதிரே என் இலைகிட்ட நீ வைச்சுட்டுப் போன தம்ளர் கூட என் கண்களுக்குத் தெரியலே. வர வரப் பார்வை சுத்த மோசமாயிடுச்சு. இப்ப என் குழந்தை ஊரிலிருந்து வந்தா அவனைப் பார்த்து ஆனந்தப்படக் கூட எனக்கு அதிர்ஷ்டம் இருக்கப் போறதில்லே...." மேலே பேச முடியாத துக்கத்தில் விம்மி குலுங்கி அழுதாள்.

அகல்யாவின் கண்களும் கனத்தன. வேதனையால் நெஞ்சு விம்மியது.

அருகில் வந்து மாமியாரின் தோளை ஆதரவுடன் தழுவிக் கொண்டாள். இன்னும் சில நாட்களில் ஊருக்குத் திரும்பிவிடப் போகும் மகனைத் தாய் பார்க்க முடியாது. — என்ன பரிதாபம்! மூன்று வருஷங்களாக அவன் வரவுக்குக் காத்திருந்து வரும்போது இப்படி ஒரு துன்பம் நேர வேணுமா? அம்மா! என்று ஆசையுடன் அருகில் வந்து உட்காரப் போகிற மகனின் முகத்தைப் பார்க்க முடியாத தாய் எப்படித்தான் 'தவிக்கப் போகிறாள்...? கைகளால் முகத்தைத் தொட்டுப் பார்த்து ராஜா — என் ராஜா... என்று

18-10-79 அன்று மாலை 6-30க்கு டெலிவிஷனில் பட்டாசு ஏற்றுமதி சம்பந்தமான சிறப்பு நிகழ்ச்சியைக் காணத் தவறாதீர்கள்

கதறி அழப் போகிறானே? அந்தக் கண்ணரு விலை எப்படிச் சகிக்க முடியும்?

அம்மாவுக்குக் கண் பார்வை சுத்தமாக இல்லை. அவள் குருடாகி விட்டாள் என்ற உண்மையை அறிந்தால் மகன் மனம் என்ன பாடுபடும்? துயரத்திலே துடித்துப் போய்விடுவானே ராஜ்குமார்?

''முத்து மாரியம்மா... உன் சோதனைக்கு நாங்கதானா அகப்பட்டோம்?'' அவளையு மறியாமல் கண்ணுங்களை நனைத்த கண்ணீர்த் துளியை மெல்லத் துடைத்துக்கொண் டாள் அகல்யா.

இரண்டு நாட்களுக்குப் பின் ஒரு நாள் இரவு நடு வேளையின் போது பஞ்சரத்தினம் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள்.

''அகல்யா!'' அவள் ஒரு முறை கூப் பிட்டதுமே மருமகள் விசுக்கென்று எழுந்து விட்டாள்.

''முன்பு ஒரு வாட்டி வந்துச்சே நெஞ்சு வலி — அது போல இப்ப ரொம்ப அதிக மாகவே நெஞ்சு வலிக்குது. டாக்டரைக் கூட்டி வரச் சொல்லு.'' மூச்சு விட முடி யாமல் கிழவி திணறினாள்.

அவசரமாக எழுந்து விளக்கைப் போட் டாள் அகல்யா. படுக்கையின் மீது மார்பை இடது கையால் அழுத்திக் கொண்டு உட் கார்ந்திருந்த பஞ்சரத்தினத்தின் முகத்தில் வியர்வை ஆறாக வழிந்தது.

''பயப்படாதீங்க. கொஞ்சம் பொறுத் துக்குங்க. இதோ கூட்டி வரச் சொல்றேன்!'' ஆறுதல் கூறிவிட்டு அவள் முகத்தைத் துண் டால் மெல்லத் துடைத்து விட்டாள். தலை யணைகளை உயரமாக அடுக்கி அவளைச் சாய்த்துப் படுக்க வைத்து விட்டு ஹால் விளக்கைப் பொருத்தினாள். அலமாரியில் இருந்த டார்ச் விளக்கை எடுத்துக்கொண்டு பின்பக்கம் ஓட்டமும் நடையுமாகப் பறந் தாள். கனமான தோட்டத்துக் கதவை மூச்சைப் பிடித்துக் கொண்டு அழுத்தித் திறந்தாள். குப்பென்று மல்லிகைப் பூவின் வாசனை முகத்தில் அடிக்க — இருளில் மூழ்கிக் கிடந்த தோட்டத்துக்குள் டார்ச்சின் வெளிச்சத்தை வீசியபடி விரைந்தாள்.

''சிங்காரம்! சிங்காரம்!'' பரபரத்து ஒலித் தது அவள் குரல்.

தன் வீட்டுக் கயிற்றுக் கட்டிலின் மீது ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த தோட்டக்காரன் விழித்துக் கொண்டு குழப்பத்துடன் எழுந்து உட்கார்ந்தான்.

''பூரணியை எழுப்பு. உள்ளே வந்து எனக்கு உதவியாக இருக்கச் சொல்லு. நீ போய் நம்ம டாக்டர் தணிகைவேலனைக் கூட்டிவா; கையோட! நெஞ்சு வலியால் அம்மா துடிக்கிறாங்க.'' உத்தரவிட்டாள்.

வைத்தியர் வருவதற்குள் நேரம் யுக மாகக் கனத்தது. தூக்கம் நிறைந்த கண்களும் அலட்சிய உடையுமாக அவர் வந் திருந்தார். பஞ்சரத்தினத்தைப் பரிசோதித் தார். மருமகளை ஒரு பக்கமாக அழைத்துக் கிசுகிசுத்தார்.

''அம்மாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக் கிறது. இருக்கும் இடத்தை விட்டு அசைக் கவும் கூடாது. ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளணும். நான்கு வாரமாவது படுக்கை யில் ஓய்வா இருக்கணும். இப்போ ஒண்ணும் சொல்ல முடியாது. எதுக்கும் உங்க கண வருக்குத் தந்தி அடித்து வரவழைப்பது நல்லது.''

நோவு தெரியாதிருக்க அவர் ஏற்றிவிட்டுப் போன ஊசி மருந்தில் சிறிது பொழுதில் பஞ்சரத்தினம் உறங்கிப் போனாள்.

விரைவில் ஊருக்குத் திரும்ப இருக்கும் கணவனுக்குத் தந்தி அடித்துக் கலவரப் படுத்துவது சரியா?

முத்துமாரி கிருபையில் விரைவில் குண மாகி விட்டால் வீணாக ராஜ்குமாருக்குக் கவலையை ஏன் உண்டாக்க வேண்டும்?

ஊருக்குப் புறப்படு முன் வேலை பார்க்கும் இடத்தில் முடித்துக் கொடுக்க வேண்டிய காரியங்கள் பல இருக்குமே — இது சமயம் அவர் மனதைக் குழப்பினால் ...? தபாலில் எழுதி நிலைமையை மெல்லத் தெரிவிப்பது தான் சரி. அதுவரை அத்தையை ஜாக்கிரதை யாக அவள் பாதுகாத்துக்கொள்ள முடியும்...

மாமியார் மீது போர்வையைக் கழுத்து வரை போர்த்திவிட்டு விளக்கை அணைத்து விட்டு ஹாலுக்குள் வந்தாள். சாப்பாட் டறை மேஜை மீது உட்கார்ந்து கொண்டு கணவனுக்குக் கடிதம் எழுதத் துவங்கினாள்.

''அத்தைக்குக் கொஞ்ச நாட்களாக மோச மானதொரு நெஞ்சு வலி அடிக்கடி வந்து கொண்டே இருக்கிறது. நம் குடும்ப டாக் டர் அவ்வப்போது வந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். நானும் முடிந்த வரை அத்தையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறேன். இருந்தாலும் நீங்கள் இது சமயம் அருகில் இருப்பதற்கு ஈடாகுமா?சிந்தித்துப் பாருங்கள்....''

''அகல்யா!'' மாமியாரின் மெல்லிய குரல் அவளை அழைத்தது. கடிதத்தைப் பாதியில் விட்டு விட்டு விரைந்தாள் அறைக்குள்.

''கிட்ட வந்து உட்கார்... உங்கிட்ட விவ ரமா எல்லாத்தையும் சொல்லணும்னு தோணுது. உட்கார்...'' என்று முணு முணுத்தாள் கிழவி.

கட்டிலின் விளிம்பின் மீது வந்து உட் கார்ந்து கொண்டாள் அகல்யா. ''என்ன அத்தை — சொல்லுங்க கேட்டுக்கிறேன்.''

''சொல்றேன்... அது வந்து...'' குழறிய பஞ்சரத்தினம் கண்களைத் திறக்காது மீண் டும் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போனாள்.


அத்தை என்ன சொல்ல விரும்புகிறாங்க? ...ம்! அகல்யாவுக்குக் குழப்பம்.

(தொடரும்)



மின்சார சாதனக் கடை முதலாளி: ''ஏல்லையா! அந்த தெரு நாலாம் நம்பர் வீட் டில் ஃபியூஸ்போனு வந்து சொன்னாங்களே, போய்ப் பார்த்தியா?

பையன்: போனேனுங்க. அரை மணி நேர மாக் காலிங் பெல்லை அழுத்தியும் யாரும் கதவைத் திறக்கலீங்க! -சம்பத் குமாரி



BLOWUP
POSTER
கல்கி நவம்பர் 4-ம் இதழுடன்
YOU WILL FALL IN LOVE WITH HER STYLE!
மிருத்யுஞ்சயன் எழுதும்
தொடர் கதை
கல்கி
நவம்பர் 4-ம் இதழில் ஆரம்பம்
+ PLUS
நவம்பர் 18-ம்
திரை இசை சிறப்பிதழ்
ஜனவரி 6-ம்
'80 மலர்
புஷ்பா தங்கதுரை

செம்மண் நிலத்து நீர்

லட்சுமி ராஜரத்னம்

புத்தம் புதிய சிவப்பு நிற பஸ். கணவன் வீட்டுக்குப் புறப்படத் தயாரான புதுப் பெண்ணைப் போல் நின்றது. ஒரு பிரபல நிறுவனத்தின் மூன்று கிளைக் கம்பெனிகளின் ஊழியர்கள்தான் பிரயாணிகள். ஒவ்வொரு வருடமும் இப்படி உல்லாசப் பயணம் போய் வருவார்கள். இந்த ஆண்டு கேரளா பக்கம் போய் வருவதென்று தீர்மானித்தார்கள்.

ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்தனர். புது டிராவலர்ஸ் கம்பெனியின் புது பஸ். அதனால் நிர்வாகத்தினர் எல்லோரையும் வரவேற்கக் கற்கண்டு, சந்தனம், மருவில் வைத்துக் கட்டிய ஒற்றைச் சிவப்பு ரோஜாச் செண்டு.

வேகமாக வந்தாள் ஷீலா. சிவப்பு நிற சாமோ சாட்டின் புடவை, சிவப்பிலே நகைகள் — வரவேற்புத் தட்டிலிருந்து ஒரு பூச்செண்டை எடுத்து லாவகமாகக் கொண்டையில் செருகிக் கொண்டாள். ஜன்னலோரம் ஸீட் கிடைத்தது. பார்வை பஸ்ஸில் அலைந்தது. இரண்டு ஸீட் முன்னால் மின்ட் கிளையில் வேலை பார்க்கும் ரவி. அவன் முகத்தில் புன்னகை ததும்பியது.

''ஹாய் ஷீலா! இப்பத்தான் வரியா நீ மட்டும்தான் வரே. உன்கூட வரேன்னு சொன்ன நளினி வரவில்லை என்று சொல்லி விட்டாள்.''

''ஓ மை காட்! பஸ்ஸிலே நான் ஒருத்தி தான் பெண்ணா?''

''நான் இருக்கிறேன் ஆண்ட்டி'' பின் ஸீட் பெண் — ஒரு எட்டு வயசு சோட்டா குரல் கொடுத்தது.

ரவி அவளையே பார்த்தான். ''பஸ்ஸு''க்கு மேட்சா உன் டிரஸ்ஸா? உனக்கு மேட்சா பஸ்ஸா?'' என்று கேட்டான்.

''ஆண்ட்டி, Safr,n is the symbol of sacrifice and strong 'mind'' னு எங்க பாடத்திலே தேசியக் கொடியைப் பற்றிச் சொல்லும் பொழுது வந்திருக்கிறது. அதனாலே உங்களுக்கு ஸ்ட்ராங்மைண்ட் இருக்கும் இல்லையா?''

ஷீலா சிரித்து விட்டாள்.

''நீயே ஆப்பிள் மாதிரி இருக்கிறாய்'' என்ற ரவி குழந்தையின் கன்னத்தைக் கிள்ளினான். இது யாரைச் சொன்னது என்பது அவளுக்குத் தெரியாதா?

''லவ்லி கேர்ல்! பெயர் என்ன?''

''அம்மு!''

வேகமாக ஓடிவந்தான் மது. ''நல்ல காலம். பஸ் கிளம்பிடுமோன்னு பயந்து கொண்டே வந்தேன்..''

படியில் ஏறியதும் எதிர் ஸீட்டில் உள்ள ஷீலா கண்களில் பட்டாள். டபிள் ஸீட்! ஷீலா மட்டும்தான் உட்கார்ந்திருந்தாள்.

''குட், எனக்கு இடம் போட்டு வைத்திருக்கிறாயா?'' மது அருகில் உட்கார்ந்ததும் ரவியின் முகம் சுருங்கி விட்டது. விருட்டென்று தன் இடத்துக்குப் போய் விட்டான். மது சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்தான். ஷீலா சங்கடத்துடன் நெளிந்தாள். இதென்ன 'பாடிகார்ட்' மாதிரி!

பஸ் கிளம்பும் சமயம் எல்லோருக்கும் ஸ்வீட், காரம், காப்பி, ஐஸ்கிரீம் வழங்கப் பட்டது. கோன் ஐஸ்கிரீம் மேல் சிவப்பு மணியாக உட்கார்ந்திருந்தது செர்ரி பழம்!

''உன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் இந்தப் பழத்தையும் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல இருக்கிறது.''

உயரம் உயரமான ஸீட்டுக்கள் ரவியை மறைத்தாலும் ரவியின் தலை தெரிந்தது. ஸீட்டுக்கு வெளியே தலையை நீட்டிய ரவி முறைத்தான். பிறகு அவளைத் தன் அருகே வரும்படி சைகை காட்டினான். பிறகு எழுந்து வந்து, ஐஸ்கிரீம் அவளுக்கும் வந்ததா என்று கேட்டுவிட்டுப் போனான்.

இதென்ன காதல் போட்டி! இதில் யாரை அவள் தேர்ந்தெடுக்கப் போகிறாள்? ரவி ஒரு வகையில் அவளுக்கு உறவினன். இருவருமே அவளது கிளையில் அவளுக்கு மேல் பதவியில் இருந்தனர். ஆரம்பத்திலிருந்தே போட்டிதான். ரவி அவளிடம் வந்து ஏதாவது பேசினால் பின்னாலேயே மது வந்து விடுவான்.

ஒரு தீபாவளி வரும் சமயம் ரவி சிங்கப்பூர் போய் வந்தான். இன்று அவள் உடுத்தி வந்திருக்கும் சிவப்புப் புடவையை வாங்கி வந்தான் அவளுக்காக!

''இது என் தீபாவளிப் பரிசு ஷீலு!''

இதைத் தெரிந்து கொண்ட மது, யாரையோ பிடித்து, எங்கேயோ சுற்றி அவளுக்காக ஒரு ஜப்பான் நைலக்ஸ் ஒன்றை வாங்கி வந்தான்.

''இது என் தீபாவளிப் பரிசு ஷீலா''

அவளுடைய இள மனசும் வயசும் இதை ரசித்து வேடிக்கை பார்த்தன.

ஆனால் ரவி அளித்த சிவப்புப் புடவை ராசியாக அமைந்து விட்டது. முதன் முதலில் அவள் அதை உடுத்திக் கொண்டு வந்த அன்றுதான் அவளுக்குப் பிரமோஷன் கிடைத்தது. இதை அவள் மதுவிடம் சொன்னபோது அவன் முகம் விழுந்துவிட்டது

''என் புடவை அதிர்ஷ்டம் இல்லை என்கிறாயா?'' என்று சீறியதை அவள் மறக்கவே இல்லை.

இதற்குப் பிறகு வெவ்வேறு கிளைக்கு இருவருமே மாறிப் போனார்கள். ஷீலாவுக்கு மழை பெய்து ஓய்ந்தது போல் நிம்மதி பிறந்தது. போட்டி சினிமாவிலும் அன்பளிப்புகளிலும் தொடரத்தான் செய்தன. ஒன்றை ஒன்று தடுக்க முடியாமல் இணைந்து விடும் சமயங்களில் ஷீலா தவித்துப் போனாள்.

இரவுச் சாப்பாட்டுக்காக ஒரு ஹோட்டலில் பஸ் நின்றது. அவளுக்காக ஓர் இடத்தை ரவி போட்டிருந்தான். அவளுடனேயே இறங்கிய மதுவும் உட்கார்ந்தான். ரவிக்கு எரிச்சலாக வந்தது.

பில் வந்தது. சர்வர் ஒரு தட்டில் வைத்து விட்டுப் போனான். ரவியும் மதுவும் பில்லை ஒரே சமயத்தில் எடுத்தார்கள். மது கையில் கிடைத்தது.

''நான் தரேன்'' என்று ரவி கையை நீட்டினான்.

''ஏன், நான் தரமாட்டேனா?''

இருவரும் விட்டுக் கொடுக்காமல் பேசினார்கள். ஷீலாவுக்கு எரிச்சல் வந்தது. எல்லோரும் பஸ்ஸினுள் ஏறி அமர்ந்தாயிற்று. டிரைவர் கொடுக்கும் ஹாரன் தங்களுக்குத்தான் என்று அவர்கள் கவனிக்கவில்லை. ஷீலா கவனித்தாள்.

''எங்கே பில்லைக் கொடுங்கள்.''

எதற்குக் கேட்கிறாள் என்று புரியாமல் மது நீட்டினான். ''இருவரும் போங்கள். நான் 'பே' பண்ணிவிட்டுவருகிறேன்.''

ரவி 'உம்' என்று தன் ஸீட்டுக்குப் போனான். பஸ்ஸில் சிலர் இந்த நாடகத்தை ரசித்தார்கள்.

பஸ் கிளம்பியது. ''இதோ பார் ஷீலு! இனிமேல் நான் பொறுக்க மாட்டேன். இந்த ரவிப் பயல் எல்லாவற்றிலும் போட்டி போடுகிறான். எனக்கு எரிச்சலாக வருகிறது. நீ மதுவைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்லு. நான் பார்த்துக்கொள்கிறேன் அப்புறம்.''

இருவருமே அழகிலும் படிப்பிலும் வேலையிலும் சரிசம அந்தஸ்து உள்ளவர்கள். யாரைத் தேர்ந்தெடுப்பது? தன் உள்ளமே அவளுக்குப் புரியவில்லை.

''இந்தப் பிரயாணம் முடியும்பொழுது நான் சொல்லி விடுகிறேன். சரிதானே?''

பீடா இனித்தது அவளுக்கு.

பஸ் திருச்சூர், குருவாயூர் என்று வரிசையாகப் போய்க் கொண்டிருந்தது. மது பஸ்ஸுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். வேகமாக ஓடி மறையும் வெளிக் காட்சிகள்! ஷீலா உம்மென்று முகத்தைத் தூக்கிக் கொண்டிருந்தாள். அழுதழுது முகம் சிவந்து போய் விட்டிருந்தது.

நடுவில் ரவி ஒரு தடவை வந்து ''ஷீலு! நான் தான் சென்னை போனதும் வாங்கித் தரேன்னு சொன்னேனே இன்னும் நீ அழுதால் நான் பொல்லாதவனாக இருப்பேன்'' என்றான்.

மது எரிச்சலுடன் பார்த்தான். ''இவன் பண்ணிய தப்புக்கு நீ ஏன் பொறுப்பை ஏற்கிறாய்? இர்ரஸ்பான்ஸிபிள் கேர்ல்'' என்று சீறினான் மது.

முதல் நாள் சிரித்து மகிழ்ந்ததற்கு இது ஒரு தண்டனை என்று எண்ணிக் கலங்கினாள் ஷீலா.

''ஏதோ தெரியாத்தனமாப் பண்ணி விட்டாள். அதுக்காக இப்படிக் கோபிப்பது நல்லதல்ல மது'' என்றான் ரவி.


''ஆயிரம் தடவை சொல்லுவேன், ஷீலா செய்தது தப்பு, தப்பு என்று'' என்றான் மது.

வானவில்

மழைநெசவில் வளர்ந்த வண்ணத் துகிலா
இழை அறுந்ததால் எடுத்தெறிந்ததா?
இந்திர லோக ஏந்திழை தோளின்
முந்தானை நழுவி வானில் வீழ்ந்ததா?
எழுநிறக் கிளியின் எழில்வண்ணச் சிறகா!
தழுவிய மன்மதன், தவிப்பில் ரதியின்
ஒட்டி யாணம் ஒடிந்து வீழ்ந்ததா? நாண்
கட்டப் படாத கன்னிமிகு வில்லா?

வானத் திரையில்பல வண்ணம் தோய்த்து
மேனகை வடிவைத் தீட்ட எண்ணிய
இயற்கை ஓவியன் எழில் புரு வத்திலேயே
மயங்கி நிற்பதா? வடிவம் மறந்ததா?

—தென்னம்பட்டு ஏகாம்பரம்





என் 'இதயக் கோவில்' நாவல் நாயகியை — "உன் சுபத்ராவைப் பற்றிய உன் வர்ணனைகளும், காட்சிகளை விளக்கும் படங்களும் — அவளை என் நெஞ்சோடு அணைத்து அவளுக்கு ஆறுதல் சொல்ல மாட்டோமா என்ற தவிப்பையும் வேதனையையும் கொடுத்தன."

—இப்படிச் சொன்னவர் பல லட்சம் வாசகர்களில் ஒருவரான 92 வயதான மூதாட்டி. திரு மணியன் செல்வன் அவர்கள் — வரைந்த அட்டைப் பட சுபத்ரா, காட்சிகளில் என் வர்ணனைகளை ஒட்டி வந்து நின்ற சுபத்ராவை வாசகர்களின் மனத்தில் நிற்கும் அளவுக்கு வரைந்தவர், என் வாசகர்களின் நினைவில் இடம் பெற்றுவிட்டார்.

என் வாசகர்களின் சார்பில் இக் கதைக்கு இவரையே ஓவியம் இட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

லட்சுமி ராஜரத்னம்.

ரவி வெறுப்புடன் தன் வீட்டுக்குப் போனான்.

இத்தகைய வேதனைக்குக் காரணம்?

கோயில் வாசலில் கண்களைப் பறிக்கும் வளையல் கடை! ஷீலா அவற்றினுள் நுழைந்து விட்டாள். ஏற்கனவே கடையினுள் நல்ல கூட்டம். அவளுடன் கூட ஆண்கள் சிலர் தங்கள் மனைவிக்கு வளையல்கள் வாங்கத் தொடங்கினார்கள். அவளையே சரியான அளவுகளை, கலர்களைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள்.

ரவியும் ஷீலாவுடன் வளையல்களைத் தேர்ந்தெடுத்தான். ஷீலா கை நிறையச் சிவப்புக் கலர் வளையல்களை — நடுநடுவே தங்கப் பொட்டு வைத்து வாங்கி அடுக்கிக் கொண்டாள்.

"தந்தம் மாதிரி வழவழன்னு இருக்கிற உன் கைக்கு ரொம்ப நன்றாக இருக்கிறது" என்றான் ரவி. மது அவளுக்குப் பின்னால் நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

வளையல் வியாபாரம் முடிந்து பஸ் ஏறினார்கள். பஸ் காலடியை நோக்கிப் போயிற்று. வளையல்களின் அழகைக் கைகளில் தள்ளிப் பார்த்துக் கொண்டிருந்த ஷீலா விரிட்டாள்.

"மது, என் சிவப்புக் கல் வளையலைக் கடையிலேயே விட்டு விட்டேன்" என்றாள். அவள் கூவிய கூவலில் பஸ் நின்றது. இதற்காகத் திரும்பிப் போவதா?

ரவி எழுந்து வந்தான். "இதற்காக பஸ்ஸைத் திருப்ப வேண்டாம். நீ வா ஷீலு. ஒரு டாக்ஸியில் போய்விட்டு வந்து விடலாம்."

யாருக்கும் மனமில்லை வளையலை விட்டு விட. கல்லு மாதிரி இரண்டரை சவரன் வளையல்!

"மது, நீ வருகிறாயா?" ஒப்புக்கு அழைத்தான் ரவி.

மது—தலையை அசைத்து விட்டான். "நீ போய்விட்டு வா. கேர்லெஸ் கேர்ல்!" என்றான்.

ரவிக்கு உற்சாகம் பிறிட்டது. ஷீலா கூட எப்படியும் கிடைத்து விடும் என்றுதான் வந்தான். இதைச் சாக்கிட்டு ஷீலாவின் உள்ளத்தில் தன்னைப் பற்றி உயர்வான எண்ணம் எழும் என்று எண்ணினான் ரவி.

வளையல் கிடைக்கும் என்ற நம்பிக்கை பொய்த்து விட்டது. கடையில் வளையல் இல்லை.

"ஐயோ, எங்கம்மாவுக்கு என்ன பதிலைச் சொல்வேன்? இது எங்க அக்கா வளையல் ஆச்சே!" என்று அழ ஆரம்பித்தாள் ஷீலா.

ரவி எப்படி எல்லாமோ சமாதானப்படுத்திப் பார்த்தான்.

"எங்கப்பாவோட கோபம் உங்களுக்குத் தெரியாது ரவி" என்று அழுதாள்.

அவர்கள் மீண்டும் பஸ்ஸுக்கு வந்தார்கள். தலைக்குத் தலை பேசினார்கள்.

"இரண்டரை சவரன் கல்லு வளையல் என்றால் லேசா? பவுன் என்ன விலையில் விற்கிறது?" என்று அங்கலாய்த்தவர்.

"கடைக்காரனுக்கு அடித்தது யோகம்! நரி முகத்தில் முழித்திருக்கிறான்" என்றார்கள்.

"மது, இவளுக்குக் கொஞ்சம் சமாதானம் சொல்லு. நான் வாங்கித் தந்து விடுகிறேன் — இதே மாதிரி சிவப்புக் கல் பதித்து, அதே டிஸைனில்— ஷீலா அழாதே!"

மதுவுக்கு முகம் சிவந்தது. "இவள் செய்த தப்பை நீ ஏன் உன் தலையில் தூக்கிப் போட்டுக் கொள்கிறாய்?"

"பின்னே இப்படியே அழ விட்டுவிடச் சொல்கிறாயா?"

"தன் பொருளைக் கூடச் சரியாக எடுத்து வைத்துக் கொள்ளத் துப்பில்லை. நீ வாங்கித் தந்தால் கூட நான் போய்ச் சொல்லிவிடுவேன், இவள் அப்பா கிட்டே."

எரித்து விடுவது போல் மதுவைப் பார்த்தான் ரவி. ஷீலா தன் கைப் பையை எல்லாம் தேடினாள். ரோஜாவாக இதழ் விரித்த சிவப்புக் கல் வளையல் மனக் கண்களில் நர்த்தனமிட்டது. ஜோடியைப் பிரிந்த மற்ற வளையல் கண்ணாடிச் சிவப்பு வளையல்களுடன் கிடந்தது.

ஷீலாவுக்கு ரவியின் குளுமையும், மதுவின் சூடும் புரிந்தன. தனக்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக ரவி காத்துக் கொண்டிருக்கிறான். அனால் மது! சொத்களிலை எப்படிக் குத்திக் கிளறிவிட்டான்!

இரண்டு மூன்று தினங்கள் உற்சாகமின்றிக் கழிந்தன. அவர்கள் கன்யாகுமரிக்கு வந்தார்கள். எப்படாப்பா பயணம் முடியப் போகிறது என்று தோன்றிற்று அவளுக்கு.

அன்று காலை சூரியோதயம் பார்க்கப் போக வேண்டும். கடலின் தொடு வானத்தின் அடிவயிற்றில் சிவப்புப் பழமாக மிதந்து வரும் சூரியனைக் காண ரவி சீக்கிரம் போய் விட்டான். இன்னும் ஷீலா எழுந்திருக்க வில்லை.

''ஷீலா, இன்றைக்கு அஸ்தமனம் பார்க்கப் போகிறாயா?'' என்று எழுப்பினான் மது.

ஷீலா எழுந்து கொண்டாள். இவனால் எப்படி உற்சாகமாக இருக்க முடிகிறது? தன்னுடைய இழப்பு இவனை ஏன் பாதிக்க வில்லை? ரவி எப்படித் துடித்துப் போனான்?

''பல்லைத் தேய்த்துக் கொண்டு கிளம்பு. போற வழியில் காப்பி வாங்கித் தருகிறேன்.''

வளையல் வாங்கித் தரும் ரவியையும் மிரட்டி வைத்திருக்கிறார். காப்பி வாங்கித் தருகிறாராம்!

பேஸ்டுக்காகப் பெட்டியைத் துழாவினான்: முதல் நாள் தங்கிய இடத்திலேயே விட்டு வந்திருக்கிறான்!

—''ஷீலா, இன்னுமா கிளம்பல்லே? ஒவ்வொரு பல்லாக் கழற்றித் தேய்க்கிறாயா?''

அவன் நகைச் சுவையை அவள் ரசிக்கும் நிலையில் இல்லை. பேஸ்டைக் காணோம் என்றால் திட்டுவானோ?

''மது, பேஸ்டைக் காணோம்.''

''இந்தா, சாவி, என் பெட்டியில் இருக்கும் பார். என்னுடைதை எடுத்துக்கொள்.''

அவள் அவன் பெட்டியைத் துழாவும் பொழுது, பெட்டியின் அடியில் வட்டமாக தட்டுப்பட்டது — அவள்சிவப்புக் கல் வளையல்!

''மது!'' வீரிட்டாள்.

மது ஓடிவந்தான்.

''இது எப்படி உங்ககிட்டே வந்தது?''

அவன் அசரவில்லை. நிதானமாகப் பார்த்தான்.

''வளையல் வாங்கினதும் நீ எழுந்து போனாய். எனக்கு முந்திக் கொண்டு பணம் கொடுக்க ரவிக்கு அவசரம். அதனால் உன்னையே கவனித்துக் கொண்டிருக்கும் நான் — மடியிலிருந்து உருண்ட உன் வளையலை எடுத்து வந்தேன்.''

''ஏன் எங்கிட்டச் சொல்லவில்லை?''

''சதா சர்வ காலமும் நான் உன்னையே கவனித்துக் கொண்டு வருகிறேன். வளையலைத் தொலைத்தால் நீ எப்படி வருத்தப் படுகிறாய்? உன்னை இழந்தால் நான் எப்படி வருத்தப்படுவேன்?''

''ரவி வருத்தப்பட மாட்டாரா?''

''மாட்டான்! போனால் போகட்டும், வேற வாங்கிவிடலாம். அதாவது லைப்ஸ்டைல் நூட் வைத்து அட்ஜஸ் பண்ணிக்கொள்வான்!''

வைத்த விழி வாங்காமல் அவனையே பார்த்தாள்!

அவர்கள் போனபோது சிவப்புக் கோளமாகத் தகதகத்தது உதய சூரியன்! கரையோரங்களில் சிகப்பு மணல், கறுப்பு மணல் என்று வண்ணங்களை வாரி இறைத்தது. மதுவும் அவளும் அதில் இறங்கி நடந்தார்கள்.

''குறுந்தொகையில் ஒரு மறக்க முடியாத வரி ஷீலா!''

''என்ன?''

''செம்மண் நிலத்தில் பெய்யும் மழை நீர் மண்ணுடன் கலந்து சிவப்புக் கலராக மாறிவிடும். அதே போல் அன்பால் கலந்த உள்ளத்தில் நீ, நான் என்ற பேதம் இல்லை. அது செம்மண் நிலத்தில் கலந்த நீர்.''

அவர்கள் நிற்பதைக் கண்ட ரவி ஓடி வந்தான்.

''ரவி, சீக்கிரம் எங்கள் திருமண அழைப்பு வரும்.''

ரவி அதிர்ந்து போனான். ''ஒரு சிவப்புக் கல் வளையலுக்காக அழவிட்ட இவனையா?''

''அந்தச் சிவப்புக்கல் தான் வாழ்வின் அஸ்திவாரம். உங்களால் என் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்! இவரால் என்னையே கண்ணுள் உள்ள மணியைப் போலக் காத்துக் கொள்ள முடியும்! எனக்குத் தேவை பாதுகாப்புள்ள கணவன் தானே? தேவைகளை நிறைவேற்றினால் தானே பாதுகாப்பைத் தர முடியும்?''

மது குனிந்து சிவப்பு மண்ணை எடுத்துக் கொண்டான். அவள் கன்னங்கள் செம் பூவாகச் சிவந்தன.

''செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் போல நம் அன்பும் ஒன்று பட்டு விட்டது, மது'' என்றவள் அவன் கரத்தைப் பற்றினாள்.

ரவி அங்கு இல்லை. நெருப்புக் கோளமாக ஆதவன் புறப்பட்டான்!

'தர்ம சங்கடம்'





அத்தியாயம் 11

"உன் நிலம் இல்லை"

"அடங்கொன்னியா, இலகம்!" ரத்தினம் சிகரெட்டைச் சட்டென்று எறிந்து விட்டுத் தன் அக்காவைச் சந்திக்க ஓடினான். அதிகாலை. வானம் அப்பொழுதுதான் வெளுத்துச் சிங்காநல்லூர் தூங்கி எழுந்திருந்தது. ரத்தினம் பாக்டரிக்குக் கிளம்ப இருந்தான். கூரைக் கடையில் இரண்டு இடியாப்பம் சாப்பிட்டுவிட்டு மயில் பன்னைத் தோய்த்துச் சாப்பிட்டுவிட்டு.... ரத்தினம் அவளைப் போலத்தான் இருந்தான். அவளை விட சற்றுக் கறுப்பு. பதினேழு வயசு இருக்கும். பஞ்சாலையில் பாக்கிங் செக்‌ஷனில் வேலை. இருநூற்றிச் சொச்சம் சம்பளம். கல்யாணத்துக்குப் பெண் பார்த்து வைத்திருக்கிறான். அவளுக்குப் பஞ்சு மிட்டாய் வர்ணத்தில் சேலை எடுத்து வைத்திருக்கிறான்.

"என்னக்கா உடம்பெல்லாம் ஒரு மாதிரி! இதென்ன காயம்? விளுந்திட்டியா?"

இலகம் அவனை அருகில் பார்த்த உடனே அழ ஆரம்பித்து விட்டாள்.

" என்னக்கா! பெரியசாமி அடிச்சுட்டாரா?"

இல்லை என்று தலையாட்டினாள்.

"பின்னை என்னதான் ஆயிடுச்சு? வா, வந்து உட்காரு. நான் இன்னிக்கு வேலைக்குப் போவலே! உனக்காக வீட்ல இருக்கேன். ஒரு கடுதாசி போட்டிருக்கக் கூடாதா? நானே ஊருக்கு வந்து கூட்டிப் போயிருப்பேன்ல? முதலில் உக்காந்துக்க. இந்தா டீ சாப்பிடு. களைச்சு வந்திருக்க! பஸ்ட்டு பஸ்லிலே வந்தியா?"

இலகம் ஒரு வழியாக அழுது முடித்து விட்டு நடந்ததைச் சொன்னாள். மூக்கை ஒட்டச் சிந்தினாள். தலையை முடிந்துகொண்டாள். ரத்தினம் ஒரே திக்கில் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"தீர்த்துன்னு தீர்த்துக் கட்டிர்றேன் அந்தாளை!"

"யாரை?"

"சேட்டுப் பையனை! எங்கேயிருக்கான், சொல்லு!"

"எங்கயிருக்கான்னு தெரியாதுரா தம்பி! ஊர்க் கோடியில வயக்காடு மாதிரித் தெரியுது. மத்தியில தார்சுக் கட்டடம்!"

"கண்டு பிடிச்சுடலாம் அக்கா. நீ கவலையே படாதே. கண்டு பிடிச்சுத் துண்டு துண்டா வெட்டிப் போட்டுடறேன். அந்தாளை!" என்றான் ரத்தினம்.

"வேண்டாண்டா! வம்புடா! அவன் என்னைத் தொட்டு இழுத்தான். வேறே ஒண்ணும் செஞ்சுடலே. அதுக்கே அவனை மாரியாத்தா கொண்டு போயிருவா. தெய்வம் கொடுக்கும் தண்டனை!"

"வேறு ஒண்ணும் செய்யலியா?"

"இல்லை!"

"தப்பிச்சான்!"

ரத்தினம் கோழை. சின்ன வயசில் அம்மாவின் சேலைக்குப் பின் ஒளிந்து கொள்வான். தொட்டால் 'பே' என்று அழுவான். எல்லாம் தெரியும் இலகத்துக்கு. அவன் ஒன்றும் போய் சேட்டுப் பையனைக் கிழித்து விடப் போவதில்லை. எல்லாம் தெரியும். இருந்தும் தன் தம்பியின் சந்துஷ்டிக்காக அந்தப் பாசாங்கு நாடகத்தில் பாகம் வகித்தாள். அவள் முதல் கவலை ஆண் துணை. அப்புறம் விசாரித்துத் தன் கணவன் எங்கே இருக்கிறான்

என்று கண்டுபிடிக்க வேண்டிய, தன்னால் தனியாக இயலாத பொறுப்பு.

''ரத்தினம் நடந்தது நடந்திருச்சு! முதல்ல அவரை எங்கே அடைச்சு வச்சிருக்காங் கன்னே தெரியலியே!''

''முதல்ல நெடுப்பாக்கம் போயிரலாம். அங்க போயி போலீஸ் டேசனிலே விசாரிக் கலாம். அவுங்கதான் சொல்லுவாங்க! கவ லைப்படாதேக்கா. அவரு எங்கேயிருந்தாலும் கண்டுபிடிக்க மீட்டுறலாம்!''

ஒன்பது எக்ஸ்ரே எடுத்தார்கள். இழந்த ரத்தத்துக்குப் பாட்டில் நிறைய ரத்தம் ஏற்றி னார்கள். கை, கால், மார்புப் பகுதி எல்லாம் சிம்பு வைத்துக் கட்டி ஒரு காலைத் தூக்கி டிராக்ஷனில் ஏற்றினார்கள். காதரை அடை யாளம் கண்டு கொள்ள முடியாதபடி கட்டுக்கள்.

அவனுக்கு இன்னும் நினைவு திரும்ப வில்லை. தாய் தந்தையற்ற அந்த அநாதைப் பையனைக் காப்பாற்ற லட்ச ரூபாய் சாத னங்கள் இணைந்திருந்தன. நிறையப் படித்த டாக்டர்கள் அரை மணிக்கு ஒரு தடவை வந்து பார்த்தார்கள். அவன் கால்மாட்டில் தொங் கின பழுப்புச் சீட்டில் நிலைமை எழுதியிருந் தது. பெயர் மட்டும் தெரியவில்லை என்று எழுதியிருந்தது.

''பெரியசாமியா! யாரு நம்ம ராவிமுக்கு டீக்கடை பெரியசாமியா?''

''அவருதாங்க!''

''அவன் நம்ம சப் ஜெயில்லதான் இருக் கான்! குடிச்ச கேஸா?''

''ஆமாங்க! கோயமுத்தூருக்குக் கொண் டுக்கிட்டுப் போயிட்டதாச் சொல்லிட்டாங்க. நான் கிடந்து அல்லாடினேங்க.''

''கோயமுத்தூரும் இல்லே ஒண்ணும் இல்லே. இங்கேதான் இருக்கான். மாஜிஸ் ட்ரேட் கோர்ட்ல விசாரிச்சாங்க! நாத் தம்பது ரூபா அபராதம் போட்டாங்க! பண மில்லே. அதுக்குப் பதிலா ஜெயில்ல கிடக் கான். நீங்க பணம் கட்டிட்டு அழைச்சிட் டுப் போயிறலாம்! அவன்கிட்டச் சொல்லிப் போடும்மா. குடிச்சுத் தொலைக்க வாண் டாமுன்னுட்டு!''

''நீங்கதான் சொல்லணுங்க. நான் சொல்லி அவரு கேக்குறவரில்லே!''

''அப்புறம் உங்க கடைக்குப் போயி சமீ பத்தில பார்த்தியா?''

''இல்லீங்களே, ஏன்?''

''போய்ப் பாரு!''

திலகத்துக்குப் புரியவில்லை. இருந்தும் அவள் மனத்தில் கொஞ்சம் ஆறுதல் இருந் தது. கணவன் இங்கேதான் நெடுப்பாக்கம் ஜெயிலில் இருக்கிறான். கண்டுபிடித்தாகி விட்டது.


''அக்கா! பணம் கட்ட வேண்டி வரும்!''

''கட்டிறலாம்'' என்று வளையலை உருவிக் கொடுத்தாள் ரத்தினம். ''இருக்கா, முதல்லே உன் அளகான புருசனைப் போய்ப் பார்க் கலாம்! பத்திக்கிட்டு வருது! பேசாம செயில்லேயே ஒரு மாசம் இருந்துட்டு வரட் டும். நான் காப்பாத்தறேன் உன்னே!''

''என் புருசன்டா! அவரு இல்லாம எனக்கு வேறெ எதுவும் இல்லயே! இந்தப் பாளாப்போன குடிப் பளக்கத்தை நிறுத் திட்டா அவரு தங்கம்! ரெத்தினம் கோய முத்தூர்ல நடந்ததை அவருக்கிட்டச் சொல்ல வேண்டாம். நான் வேளை வர்ற போது சொல்லிப் போடுவேன். என்ன?''

''சரி சரி!''

தாழ்வான ஓட்டுக் கட்டடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அதுவே பெஞ்சு மாஜிஸ்



டிரேட் கோர்ட்டு. வாரம் ஒரு நடவையோ இரண்டு நடவையோ வருவாரு போல. இப்போ ஒரு குமாஸ்தாதான் உட்கார்ந்திருந்தார். சட்டி சட்டியாகக் கம்பிக் கதவு, திண்ணையில் ஒரு குட்டிப் பெஞ்சு முன் உட்கார்ந்திருந்தவர் கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு திலகத்தைப் பார்த்தார்.

''நீ அவன் பெண்சாதியா?''

''ஆமாங்க!''

''பணம் கட்டிடறேளா?''

''ஆமாங்க. இந்த வளவியை விக்கணுங்க.''

''இப்படியே நேராப் போனா ஆச்சி கடைன்னு கேளு. அவ பணம் கொடுப்பா. தங்கமா?''

''ஆமாங்க. எங்கப்பாரு செஞ்சு போட்டது. அவரு எங்கங்க?''

''உள்ளே இருக்கான். பத்திரமா இருக்கான். கவலைப்படாதே. காட்டறேன்!''

அவனைப் பார்த்ததும் திலகத்துக்குப் பிரவாகமாக அழுகை வந்து விட்டது. மகனைக் கட்டிக்கொண்டு அப்படியே உட்கார்ந்து கொண்டு அழுதாள்.

பெரியசாமி அவர்களைப் பார்க்காமல் தலை குனிந்து கொண்டான்.

''என்ன இப்படிச் செய்துட்டிங்க மாப்பிளே!''

மௌனம்.

''நகையெல்லாம் வித்தாச்சில்ல! நூத்தம்பது ரூபா அபராதம்!''

''ஏன் வரல இத்தனை நாளு?'' என்றான் பெரியசாமி.

''டங்களை எங்க வச்சிருக்காங்கன்னே தெரியாமப் போயிருச்சு! அக்காளும் தனியா என்ன செய்யும் பாவம்! சிங்காநல்லூர் வந்திருச்சி!''

''இப்ப பணம் குடுத்தாச்சா?''

''ஆச்சு! இதோ ஆச்சு!''

''தொறந்து விடச் சொல்லு பசிக்குது'' மனோகர் அவனை நோக்கி ஓடியது. பெரியசாமி அதை வாங்கித் தூக்கிக் கொண்டு சற்று நேரம் அழுதான்.

நிறைய தாடியும் சிக்கலான தலைமயிருமாகப் பெரியசாமி 'லபக் லபக்' என்று சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் திலகம். மூக்கை உறிஞ்சினாள்.

''அக்கா மறுபடியும் அளப் போறியா? எல்லாம் ஊருக்குப் போயி வச்சுக்கலாம், என்னடி மனோகர்? சிரிக்குது பாரு!''

பெரியசாமி இன்னும் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை.

இரண்டு மணி பஸ் பிடித்து அவர்கள் மறுபடியும் ராவிமுக்கு வந்தார்கள். மரத்தடியில் அவர்களை இறக்கி விட்டு விட்டுப் புழுதி பறக்க பஸ் சென்றதும் அந்தப் படலம் அடங்கக் காத்திருந்தார்கள்.

''வா, திலகம்! வீட்டுக்குப் போகலாம்!'' என்றார்.

''அங்க பாருங்க!'' என்றாள்.

பெரியசாமி திடுக்கிட்டான். எங்கே அவன் வீடு? எங்கே அவன் டீக்கடை? எங்கே அவன் நிலம்? எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து வேலி போட்டிருந்தது.

''ஏய் ஏய்! யார்ருவன் என் கடையிலே''' என்று சப்தமிட்டுக் கொண்டே வேலிக்கு வந்தான்.

கடை அவசரமாக இடிக்கப்பட்டிருந்தது. டீப்பாத்திரங்கள் எதையுமே காணோம். அடுப்பு இடிந்திருந்தது. அருகில் செல்ல முடியாதபடி வேலி! விண் என்ற வேலி!

''திலகம்! நீ வரப்போ வீட்டைப் பூட்டிக் கிட்டு வந்தியா?''

''ஆமாங்க! பூட்டி பலகையெல்லாம் தவத்தி வைச்சுட்டுத்தான் வந்தேனுங்க! ஆத்தாடி இந்த அநியாயம் உண்டா?''

''நம்ம உடைமையெல்லாம் எங்க கிடக்குது பாரு!''

மரத்தடியில் அவன் சொத்தெல்லாம் கொண்ட தகரப் பெட்டி கிடந்தது. உடைந்த கண்ணாடி சிசாக்கள் கிடந்தன.

''யாரு இப்படிச் செஞ்சிருப்பாங்க?''

''எல்லாம் அவங்கதான்! நிலத்தை விலைக்குக் கேட்டாங்க. தரமாட்டேன்னேன். அதுக்குப் பதிலாப் புடுங்கிக்கிடலாம்னு பார்க்கறாங்க!''

''அதெப்படி? நிலம் நம்முதில்ல'' என்றாள் ரத்தினம்.

''நம்முதுதான்!''

''பத்திரம் இருக்குதுல்ல?''

பெரியசாமிக்குத் திக் என்றது. பத்திரம்! பத்திரத்தைக் கிழித்துப் போட்டிருப்பாங்களோ! பத்திரத்தை எங்கே வைத்தேன்! பெட்டியில்தானே!

திடீரென்று ஞாபகம் வந்தது. பத்திரம் பெட்டியில் இல்லை. தெருப்பக்கத்தில் ஒருத்தரிடம் கொடுத்திருக்கிறான். அவரிடம் மூந்நூறு ரூபாய் கடன் வாங்கியபோது திருப்பித் தரும்வரை வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்தது எவ்வளவு நல்லதாய்ப் போச்சு! அப்பாடா!

''இருட்டறதுக்குள்ள இவர்களை விரட்டலை என் பேரு பெரியசாமி இல்லே!''

''அடிதடி வேண்டாங்க. இப்பத்தான் ஜெயிலுக்குப் போயி வந்திருக்கீங்க!''

''முண்டம்! நம்ம உடைமை எல்லாம் பறி போயிருச்சி. நீக்க நினைவில்ல தெரியுமில்ல?''

ஒவ்வொரு டெஸ்ட் ஆட்டக்காரருக்கும் ஒவ்வொரு கிரிக்கெட் டெஸ்டிற்கும் ரூ 10,600/= கொடுக்கப்படுகிறது. 5,000/= ரூபாய் கையிலும் ரூ 2000/= பாம்பே கிரிக்கெட் அசோசியேஷனிலிருந்தும் மற்றும் ரூ 2000/= கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டிலிருந்தும் இது தவிர 8 நாள் சாப்பாட்டுச் செலவிற்கு ரூ 1600/=ம் கொடுக்கப்படுகிறது. இவ்வாண்டு டெஸ்ட் நடக்கும் சில மாதங்களில் 17 டெஸ்ட்கள் இந்தியா விளையாட இருப்பதால் கவாஸ்கர் போன்று 17 டெஸ்டிலும் இடம் பெறக்கூடிய ஆட்டக்காரர்கள் சீசன் முடிவில் ரூ 1.8 லக்ஷம் பெறுகிறார்கள்!

— ஆதாரம் இந்தியா டுடே

— ஜெயராமன்

''சிங்காநல்லூர் திரும்பிப் போயிடலாம். வாங்க.''

''பேசறதைப் பாரு! நம்ம நிலத்தில நம்ம வீட்டில உரிமையே இல்லாத ஒருத்தன் வந்து குந்தியிருக்கான். உட்டுட்டுச் சிங்கா நல்லூர் போறதா?''

பெரியதனக்காரர், மணியம், கவுண்டர் என்று பற்பல பெயர்களில் அழைக்கப்பட்ட நல்லமுத்து திண்ணை பூரா உட்கார்ந்திருந்தார். அவருடைய நரை மீசை காற்றில் கிறுக ஆடியது. நெற்றிப் பொட்டில் கால் இஞ்ச் குறுக்களவுக்கு மச்சம். கழுத்தில் கொட்டைப் பாக்கு. புஜத்தில் மணிக் கயிறு. பெரிய லவுட்ஸ்பீக்கர் குரல்.

''இப்ப என்ன சொல்றே பெரியசாமி?''

''அய்யா, பத்திரம் பாத்திங்க இல்லே!''

''ஆமாம்.''

''அந்த நிலம் என்னுதுதானே? சந்தேகம் இல்லியே?''

''நிலம் ஒன்னுதுதான். அந்த நிலம்தானு சந்தேகம்.''

''புரியலிங்க. புரியற மாதிரி சொல் லுங்க!''

''இத பாரு பெரியசாமி! இந்தப் பத் திரத்தில உள்ளபடி உன் நிலத்தினுடைய சர்வே நம்பர் 178ல் கீழே இரண்டும் கீழே மூணு! சர்க்கார் நிலம் மூச்சூடும் கணக்கா சர்வே பண்ணித் துப்புரவா நம்பர் எழுதி ரிக்கார்டுகள் வச்சிருப்பாங்க. அதும்படி ராவிருக்கில உன் மக்கடை இருக்கிற நிலம் உன்னுது இல்லே! நெடுப்பாக்கம் பஞ்சா யத்தைச் சேர்ந்தது.''

''என்னங்க இப்பிடிச் சொல்றீங்க! அப்ப இந்தப் பத்திரத்தில உள்ளது? நான் இருபது வருசமா அங்கே இருக்கேன். இதுவரைக்கும் ஒருத்தரும் எங்கிட்ட வந்து, 'பெரியசாமி! இது உன் நிலமில்லேன்னு சொன்னதில்லே. வரிப் பணம் கட்டியிருக்கேன். அப்ப சொல்லலை. இப்ப அந்தச் சேட்டு வந்து கேட்டதும்தான் மாத்திச் சொல்றீங்களே! இது நியாயமா?''

''இதுவரைக்கும் ரெவின்யூ ரிக்கார்டுகளை ஒருத்தரும் ஒழுங்காப் பார்த்ததில்லை பெரிய சாமி. உன்கிட்ட எதுக்குப் போய் சொல்ல வேண்டும்?''

''இப்ப மட்டும் என்னவாம்?''

''இப்பத்தான் கோயமுத்தூர்ல இருந்து ஒரு வக்கீல் அய்யரு வந்து எல்லாத்தையும் தோண்டிப் பார்த்தார். கலெக்டர் ஆபிசில இருந்து மண்ணைத் தோண்டறதுக்கு லைசென்சு வாங்கி வந்திருந்தார்.''

''மண்ணைத் தோண்டவா? எதுக்குத் தோண்டணும்?''

''அது எதுக்கோ தெரியல்லே!''

''நான் தோண்ட மாட்டேனு?''

''நிலம் உன்னுது இல்லியே?''

''பின் என் நிலம் எங்கே?''

''அது தள்ளி இருக்குது. ஒரு மைல் தள்ளி மேற்கே இருக்குது! இத பாரு மேப்பு!''

பெரியசாமி புரியாமல் கட்டம் கட்ட மாக இருந்த ப்ளூ பிரிண்டைப் பார்த்தான். மடித்து மடித்து அழுக்காக இருந்த அந்த வரைபடத்தைப் பார்த்தாலே அவநம்பிக்கை



யாக இருந்தது அவனுக்கு. அதன் மீது மணியக்காரரின் விரல் ஒன்று நகர்ந்து உட்புறமாக ஓர் இடத்தில் நின்று ''இதான் உன் நிலம் பெரியசாமி!'' என்றார்.

''இது எங்கிட்டால இருக்கு?''

''சொன்னேனே மேற்கே ஒரு மைல் தள்ளி ஞப்ல உள்ள!''

''என்னங்க இது அக்கிரமம்! அங்க யாருங்க மக்குடிக்க வருவாங்க? அந்தப் பக்கமெல்லாம் தரிசுங்க! அதெ வெச்சுக்கிட்டு நான் என்ன செய்யறதுங்க!''

''பக்கத்தில ஒரு ஜோனை இருக்குது பெரியசாமி! நல்ல இடம்தான்!''

''இது வேண்டாங்க! எனக்கு என்னோட நிலத்தையே குடுத்துருங்க!''

''இதான் உன் நிலம்கிறேன். அறிவு கெட்டதனமாப் பேசறியே! இத பாரு நான் ஒரு சர்க்கார் ஊழியன். எனக்கு சப்ரிஜிஸ் தாரு, ரெவின்யூ இன்ஸ்பெக்டரு கலெக்டர் ஆபிசில இருந்து உத்தரவு வருது. உனக்கு இனிமே ஏதாவது கேக்கணுமின்னு கலெக் டர் ஆபிசில போய்க் கேட்டுக்க!''

''அதுக்கு எவத்தாலே போகணும்?''

''கோயமுத்தூருக்கு. அங்க கலெக்டர் தொரை இருக்காரு. சின்னவரு! புதுசா வந்த வரு. அவரைப் போயிக் கேளு. அவருகூட ஒன்னும் செய்ய முடியாது. அயனு இருக் குதே ரிக்கார்டு!''

''ஆமா! ரெக்காடு! பொட்டக்காளிப் பயலுகள் எல்லாம்!''

''என்ன பெரியசாமி! வார்த்தை வளருதே! ஜெயில்ல இருந்தது போதாதா?''

''நீங்க வாங்க மாப்பிள்ளே'' என்றான் ரத்தினம். ''அடே சின்னப் பயகளா! உருப்பிடுவீயளா? என் நிலத்தை உருவிக் கிட்டுப் பிடுங்கிக்கிட்டிங்களே நியாயமா? எங்கப்பாரு தெவண்டா. எங்கப்பாரு பாடு பட்டு ஒளிச்ச சொந்தக் காசில வாங்கின நிலம்! அந்த ரூபா பத்து ரூபாய்க்குச் சொந் தப் பெண்டாட்டியை வித்துருவீங்களே அடேய்! அடேய்!'' என்று தெருவெல்லாம் கத்திக்கொண்டே சென்றான் பெரியசாமி.

(தொடரும்)



பச்சையில் பிறந்த இச்சை

கௌசிகன்

"பாய் மேன்! நேத்திக்கே வந்திருந்தா ஏதாவது செய்திருக்கலாம். பாய்ஸனஸ் ஐவின்னு கேள்விப்பட்டிருப்பியே — ஒருவகை விஷப் பச்சிலே. நாட்டு மருந்துக் கடைக்காரர் காஞ்சூரிப் பச்சிலேன்னு சொல்லுவார். இது உடம்பிலே பட்டால் அரிப்புத் தாங்க முடியாது. அப்புறம் இப்படித்தான் தடிச்சுப் போகும். இந்தப்பச்சை கிட்ட உனக்கு எப்படி இச்சை ஏற்பட்டது?'' கேட்டார் டாக்டர்.

''அதானே? வாய்ப்பே இல்லையே!'' என்றவன் 'பே' என்று விழித்தவாறு பேச்சை நிறுத்திக் கொண்டான். பச்சை ஷிஃபான் சாரியில் அவன் காதலி இந்து நேற்று மாலை அவனைச் சந்தித்ததும் இருவரும் பூங்காவை நோக்கிப் பொடி நடை போனதும், இந்துவின் சிரிப்பில் போதை ஏறிப் போய், அவன் அந்தப் பூஞ்சோலையின் புதர் மண்டிய பச்சைப் புல் வெளியில் — அந்தப் பாழாய்ப் போன விஷப் பச்சிலை அப்போது தான் அவனோடு உறவாடி இருக்க வேண்டும். இந்துவோடு இருந்தபோது அதன் வீரியம் தெரியவில்லை. இப்போது அது தன்கை வரிசையைக் காட்டி விட்டது.

டாக்டரின் எச்சரிக்கையையும் மீறி மேலாக ஷேவ் செய்து கொண்டு கிரீன் லாண்டுக்குக் கிளம்பினான் ரங்கன். அவர்கள் சந்தித்துக் கொள்வதாக ஏற்பாடு செய்து கொண்டிருந்தது கிரீன்லாண்ட் ரெஸ்டாரெண்டில். இலைப் பச்சை வர்ணத்தில் சல்வார் கம்மீஸும், கிளிப் பச்சை நிறத்தில் டம்பப் பையுமாகக் காத்திருந்தாள் இந்து. ரங்கனைக் கண்டதும் திடுக்கிட்டாள்; ''என்னாச்சு உங்களுக்கு?'' என்றாள்.

''ஒண்ணுமில்லே. ஒரு பச்சையோட பார்வை பட்டதினால வந்த 'இட்ச்''' என்றான் ரங்கன்.

தன் பச்சை உடையைப் பார்த்துத்தான் அப்படிக் கூறுகிறானக்கும் என்று முகம் சுளித்தாள் பாவை. ''நான் உங்க வார்த்தையை நம்பி எங்கம்மா கிட்ட ஏதேதோ கதை கட்டி ஊட்டிக்கு என்னோடு அவளையும் கிளம்ப வச்சிருக்கேன்'' என்றாள்.

''கவலைப்படாதே. இது பாய்ஸன் ஐவி— அதாவது ஒரு விஷப் பச்சிலையாலே வந்த வினை. நாம் திட்டமிட்டபடி எல்லாம் நடக்கும்.''

''போன வருஷம் என் மாமா பையனுக்கு இப்படித்தான். என். ஸி. ஸி. காம்புக்கு குன்னூர் போயிருந்தபோது ஏதோ விஷப் பச்சிலையினாலே முகமெல்லாம் விகாரமாய் வீங்கிப் போயி.... ஊட்டியிலே ஒரு படகா டாக்டர் அற்புதமாகக் குணப்படுத்தினாராம். போடானிகல் கார்டனுக்குப் பக்கத்திலே தான் அவர் கிளினிக்'' என்றாள் இந்து.

''ரொம்ப நல்லதாய்ப் போச்சு. அந்தப் படகா டாக்டரை ஊட்டி போனதும் பார்த்துடறது. என் பச்சைக் கொடியே நீ இதுக்காக உன் ஊட்டி டிரிப்பைக் கான்ஸல் செய்துடாதே!'' என்றான்.

ஊட்டியில் இந்து குறிப்பிட்ட அந்தப் பச்சிலை வைத்தியர் படகா டாக்டரைக் கண்டு பிடிப்பது ஒன்றும் சிரமமாக இருக்கவில்லை. அவன் உள்ளே நுழையும்போது ஒரு பெண் வெளியே வந்து கொண்டிருந்தாள். அவள் உடுத்தியிருந்த பச்சை நைலக்ஸ் இந்துவை நினைவூட்டி அவன் உள்ளத்தைத் துள்ளச் செய்தாலும் அவள் உதடும் முகமும் அவன் முகத்தைச் சுளிக்க வைத்தன. பருவப் பெண்தான். இளமை நிமிறிக் கொண்டிருந்தது. ஆனாலும் அதென்ன அப்படியொரு உதடு —எவ்வளவு பெரிசு? வீக்கமா? அல்லது....? அந்த டாக்டரும் கை விரித்து விட்டார். உத்சாகமாக வந்தவன் ஒடிந்து போய்த் திரும்பினான்.

வீதிக்கு வந்ததும் அவன் தங்கியிருந்த ஹோட்டல் வழியாகப் போகும் பஸ் கிளம்

வானவில்

அதிர்ந்தது காற்று! நீளப்
பூங்கிளை அசைந்தா டிற்று!
முதிர்ந்திட்ட முகிலின் சேறு
மூடிற்று! சேற்றுக் குள்ளே
புதைந்திட்ட கதிரிற் பூத்த
புதுப் புது வண்ணம் எல்லாம்
ததும்பிற்றே வான வில்லாய்!

-பாரதிதாசன் எழுதிய 'அழகின் சிரிப்பு'
என்னும் நூலிலிருந்து
நகரம் க. மாரியப்பன்

பிக் கொண்டிருந்தது. ஓடிப்போய்த் தொத்திக்கொண்டு ஏறினான். பஸ்ஸில் நல்ல கூட்டம். கண்டக்டரின் ஒலி கேட்டு ஒரு குலுக்கலுடன் பஸ் கிளம்பியபோது ரங்கன் நிலை தடுமாறி விழாதிருக்க 'ஸ்ட்ராப்'பைப் பிடிக்கப் பரபரக்கும்போது மொத்தென்று ஏதோ ஒன்றின் மீது ஒரு மோதல். அடுத்து....

''மனுஷா நிக்கறது தெரியலே! காட்டுமிராண்டி...!'' என்ற பெண் குரலின் சீறல்.

'சாரி... பஸ் கிளம்பின வேகத்திலே...'' மன்னிப்புக் கேட்டவாறு பார்த்தான். 'அட— டாக்டர் வீட்டில் பார்த்த அதே பெண்— உதடு வீங்கிப்போய்...'

வீதியின் குறுக்கே ஓடிய கிழவியைக் காப்பாற்ற டிரைவர் சடன் பிரேக் போட, தோல் வாரைப் பிடித்துக் கொண்டு சொகுசாக நின்ற அந்தப் பெரும் உதட்டுப் பெண், நிலை பெயர்ந்து ரங்கன் மீது அலமலங்கச்சாய....

''ஸ்ட்ராப்பை ஒழுங்காகப் பிடிக்கக்கிட்டு நில்லுங்கம்மா''

என்றான் தன் மார்பு மீது வந்து மோதிய பச்சை மலர்ப் பந்தைப் பார்த்து.

''மிஸ்டர்..!'' என்று எரிச்சலோடு ஆரம்பித்தவள் ''உங்களைப்போன்ற ஆசாமிகளுக்கு அந்தக் குளவிகளே மேல் போலிருக்கே'' என்று முணுமுணுத்தாள்.

''குளவியா?''

''ஆமாம். நான் எப்பவுமே இப்படி அவலட்சணமா இருப்பேன்னு நினைச்சீங்களா?''

''பின்னே இல்லியா?....சாரி,.... வந்து''

''சாரியும் வேண்டாம். சல்வாரும் வேண்டாம். இப்படி என் முகம் வீங்கிப் போயிருக்கிறதுக்குக் காரணம் குளவிகள். ஒரு குளவிக் கூட்டமே படையெடுத்துக் கொட்டித் தீர்த்துட்டு தாக்கும்.''



இப்போது ரங்கனிடமிருந்து அந்த 'ஓ...!' வெடித்தது. "ஆமா... நீங்க ஏன் குளவியோட போய் விளையாடினீங்க?" என்று கேட்டான்.

"நான் விளையாடலே. என் சித்தி பிள்ளை ஒரு குச்சியாலே குளவிக் கூட்டை உடைத்து அதுக்குள்ளே இருக்கிற பச்சைப் புழுவை ஆராய்ச்சி செய்தபோது அவனைக் குளவிகளின் தாக்குதலிலிருந்து காப்பாற்றப் போய் இப்போ என் காதலனைச் சந்திக்க முடியாதபடி முகம் வீங்கிக்கிடக்கு."

"என் கேஸ்தான் போலிருக்கு. உன் காதலனிடம் நிலைமையை விளக்கினு, புரிஞ்சுக்க மாட்டாரா?"

"எனக்கு இஷ்டமில்லே. இந்த நிலையிலே என்னை அவர் பார்க்கிறதை நான் விரும்பலே" என்றாள் அவள். இப்போது பஸ் ஒரு ஸ்டாப்பில் நின்றது. அவள் சட்டென்று "நான் இறங்க வேண்டிய இடம்... குட்பை" என்று கூறிச்சரசரவென்று இறங்கிப் போனாள் கர்ச்சிப்பினால் தொங்கும் உதட்டை மூடிக்கொண்டே.

ஊட்டியில் ரங்கன் தங்கியிருந்தது ஒரு பிரபலமான ஹோட்டலில். ஊட்டி வந்திருப்பவர்கள் உல்லாசமாக இங்குமங்கும் போய் வந்து கொண்டிருந்தார்கள், இவனைத் தவிர. அவன் திட்டப்படி இந்து இன்று ஊட்டிக்கு வந்திருக்க வேண்டும், அவள் அம்மாவுடன். இந்த ஹோட்டலில் வந்து தங்குவதென்றுதான் ஏற்பாடு. ஆனால் அவள் இங்கு வரவில்லை. வேறு எங்காவது போய்த் தங்கிவிட்டாளோ அல்லது வரவேயில்லையா? ரங்கனுக்கு ஆத்திரமாக வந்தது. அவனுக்கு அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பது எரிச்சலூட்டியது. துண்டை எடுத்து முகத்தைப் போர்த்திக் கொண்டு வெளியே கிளம்பினான். திரும்பின பக்கமெல்லாம் பசுமை.

காலையில் பஸ்ஸில் அவனோடு மோதிய அந்த உதடு பருத்த மோகினியின் நினைவு பிடித்திழுக்க அவள் இறங்கிய பஸ் ஸ்டாப்பில் இறங்கிக் கொண்டான். 'இங்கே அருகே தான் அவள் வீடு இருக்க வேண்டும்' என்ற எண்ணம் அசை போட்டபடி நடைபோட...

"ஹலோ" என்ற குரல் வரவேற்றது. "பாய்ஸன் ஐவிதானே நீங்கள்?" வரவேற்றவள் அவள் தான்! குறும்புக்காரிதான் போலே!

"என் பெயர் ரங்கன். பாய்ஸன் ஐவி இல்லே" என்ற ரங்கன், அவள் அருகில் போய் அமர்ந்து கொண்டான். பிறகு "உங்கள் காதலர் உங்களைக் காண வந்தாரா" என்றான்.

"வரமாட்டார். டெலிபோன் செய்தார், தன் வருகையை அறிவிக்க. நான்தான் எனக்கு மம்ப்ஸ் - பொன்னுக்கு வீங்கி என்று பொய் சொல்லித் தடுத்து விட்டேன். இந்தக் கோலத்தில் அவர் என்னைப் பார்ப்பதை நான் விரும்பலே."

"வாருங்களேன், இப்படிக் காலாற நடந்துவிட்டு வரலாம். பொட்டானிகல் கார்டனிலே ஓர் ஓரமாய் யார் கண்ணுக்கும் படாம..." என்று அழைத்தவன் "உங்க பேரைச் சொல்லலியே" என்றான்.

"என் பேர் பாரு...பார்வதி" என்றாள். "வாக்கிங் போகலாம் தான். அங்கே எங்காவது அவர் கண்ணில் பட்டு விட்டால்...?" தன் காதலனின் நினைவில் உருகிப் போனாள் பாரு. ஆனாலும் அதே நினைவுடன் ரங்கனுடன் நடக்கவும் ஆரம்பித்தாள்.

அதே நேரத்தில் அவள் கவனம் தூர தூரத்தில் ஜோடி ஜோடியாக உலவும் காதலர்களைக் கண்காணிப்பதிலேயே இருந்தது.

"அதோ பாருங்கள்" என்று காட்டினாள் பாரு. மலர்ப் பாத்திகள் சூழ்ந்த பச்சைப் புல் மெத்தையில் ஒரு ஜோடி — விளம்பர மாடல்கள் போஸ் கொடுக்கிறாற் போல. உற்றுப்பார்த்த ரங்கனுக்குப் பகீர் என்றது. அந்தப் பெண் இந்து!

ஊட்டிக்கு வந்திருக்கிறாள். ஆனால் என்னைச் சந்திக்க முயற்சி செய்யவில்லை. சுற்றுச் சூழலையே மறந்து இப்படி யாருடன் மயங்கிக் கிடக்கிறாள்? ரங்கனின் திகைப்பைக் கவனித்த பாரு, "அந்தப் பெண்ணைத் தெரியுமா உங்களுக்கு? அவளைப் பார்த்ததும் இப்படிப்பச்சை பாரிக்கப் போயிட்டீங்களே?" என்றாள்.

"தெரியுமாவா? அவள் இந்து... என் இதய ராணி."

"குப்பத்து ராணி போல இருக்கிறாளே அவளா?"

"உன்னை இங்கே யாரும் அபிப்பிராயம் கேட்கலே. அது யார் அவள் கூடக் கரடிக் குட்டி மாதிரி"

"கரடிக் குட்டி இல்லே சார். என்னோட காதலர் அவர்தான்."

ஜோடியைப் பறி கொடுத்த இருவரும் மௌனமாக உயர்ந்து வளர்ந்திருந்த செடிகளிடையே நடந்தார்கள். ஓரத்திலிருந்த செடிகளின் பச்சைக் கொழுந்துகள் பாருவின் கையில் சின்னாபின்னமாயின. ரங்கனின் கால்களோ பாத்தி கட்டி நின்ற பச்சைச் செடிகளை உதைத்து உருத் தெரியாமல் செய்து கொண்டு வந்தன.





தமிழகத்தின் எல்லா ஓவியர்களையும் அவர்களின் கைவாகவங்களையும் அறிந்தவன் நான். முன்னேறத்துடிக்கும் புதிய ஓவியர்களுக்குத்தான் வாய்ப்பளிப்போமே என்பதே என் எண்ணம். ஆகவே மாருதியிடம் பயிற்சி பெறும் ஜமாலை என் கதைக்குப் படம் போடச் சொன்னேன். —கௌசிகன்

மறுநாள் காலை ஏரியில் உல்லாசப் படகில் இந்துவும் மனோவும் காட்சி தந்து இவர்களுடைய அமைதியை மேலும் குலைத்து விட்டனர்.

ரங்கனுக்குப் பொழுது போகவில்லை. ஊட்டியை விட்டுப்போகவும் மனமில்லை. இதமான குளிர். கரும் பச்சை நிறக் கம்பளி சூட் அணிந்து கொண்டு வெளியே கிளம்பினான். பாருவின் பங்களாவை நோக்கி அவன் கால்கள் ஊர்ந்தன.

பச்சைப் புல்வெளியில் டனீர் என்ற பச்சை வர்ண ஸ்வெட்டர் அணிந்தபடி நிலவில் குளித்துக்கொண்டு டிரான்ஸிஸ்டரை அணைத்தபடி உட்கார்ந்திருந்தாள் பாரு. அருகே காலியாக இருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டான் ரங்கன்.

''ஏன் என்னவோ போலிருக்கே பாரு?''

''மனோவும் நானும் ஒருவருக்கொருவர் என்ற நினைப்போடேயே வளர்ந்தோம். மனிதர்கள் மாறிவிடுகிறார்கள். இனி மனோ என்னுடையவரில்லை.... வேதனையான விஷயம் தான்.''

''வேதனையே இல்லே பாரு. சாதனை! அவன் உனக்கேத்தவன் இல்லே. உனக்கே அது தெரியும். நிர்மலமான காலை வேளையைப் போன்றவள் நீ. மேக மூட்டம் கொண்ட பகல் பொழுது அவன்... இந்துவைப் பற்றி நீ சொன்னியே அதுகூட ஸெண்ட் பர்ஸெண்ட் கரெக்ட்!''

''நாளைக்கு நாம் இருவரும் ஏரியில் படகில் உல்லாசமாகப் போய் வரலாம்'' என்றாள் பாரு தன் கைகளை அவனிடமிருந்து இழுத்துக்கொள்ளாமலே.

''உன் உதட்டு வீக்கமெல்லாம் கூட வடிந்து விட்டது பாரு. நீதான் எவ்வளவு இளமையாக, அழகாக ...'' அவன் கைகளை எடுத்து முத்தமிட்டான்.

''ஆவ்...! முரட்டுத் தாடி முள்ளாகக் குத்துகிறது!''

''ஒரு வாரமாயிற்றே ஷேவ் செய்துகொண்டு. நாளைக்குப் பார். போட்டில் உன் அருகே மழமழவென்ற கன்னத்துடன் காட்சியளிப்பேன்.''

அவன் அவளிடம் பிரியா விடை பெற்றுக் கிளம்பியபோது சந்திரன் மேகத்துக்குள் புகுந்து கொண்டிருந்தான். தோட்டத்தில் இருட்டு. நிதானமாக ஓர் ஊகத்தில் புல்வெளியைக் கடந்து கொண்டிருந்தபோது ஏதோ தடுக்கியது. தடாலென்று தலைகுப்புற விழுந்தான்.

வராந்தா விளக்கை அணைத்துவிட்டு, உள்ளே நுழைந்து கொண்டிருந்த பாரு, சத்தம் கேட்டு, ''ரங் — என்ன? பார்த்துப் போங்க. அந்த வாவரம் சுரேஷ் தோட்டம்பூரா ஏதாவது கண்ணி வெச்சிருப்பான். விஷமக் கொடுக்கு'' என்றாள்.

''தாங்க்ஸ்'' என்று குரல் கொடுத்தான் இருளிலிருந்து ரங்கன். முழங்காலைத் தடவிக்கொண்டே எழுந்தவனுக்குத் தலை கிர்ரடித்தது.

காலையில் எழுந்ததும் அவன் கவனத்தை ஈர்த்தது முழங்கால் வலிதான். ஊமைக் காயம். மொழு மொழுவென்று வீக்கம் கண்டிருந்தது. காலை மடக்க முடியவில்லை. நடக்க முடியாமல் விந்தியபோது டெலிபோன் ஒலித்தது. பாருதான் பேசினாள். அவள் குரலில் மகிழ்ச்சி கொப்பளித்தது.

''எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி. நானும் சுரேஷும் காலையில் பந்து விளையாடினோம், லானில். முரட்டுப் பயல். அவன் வீசிய அந்தப் பச்சைப் பந்து என்னைத் தாக்கி...?''

''எங்கே ''

''அதே இடத்தில்தான். உதட்டில்! கெட்டியான பந்து. உதடு பழையபடியே புரு புருவென்று வீங்கி விட்டது. நாம் திட்டமிட்டபடி இன்று ஏரியில் படகில் போக முடியாது. ரங்! என் உதடு ரொம்பக் கோரம். நீங்க எப்படி இருக்கீங்க?''

''ஐ ஆம் ஆல்ரைட்... எக்ஸப்ட் மை முழங்கால்...!''

''முழங்காலுக்கு என்னாச்சு?''

''ஒன்னுமில்லே. உன் சித்தி பிள்ளை வச்சிருந்த கண்ணியிலே ராத்திரி மாட்டிக்கிட்டுக் குப்புற விழுந்ததிலே முழங்காலைச் சுற்றிப் பச்சையா ரத்தம் கட்டிக்கிட்டிருக்கு. ஃப்ரீயா நடக்க முடியல்லே. அவ்வளவுதான்.''

''உங்க இந்துவுக்குத் தெரிஞ்சா ரொம்பக் கோபப்படுவா இல்லே?''

''உன் மனோ மட்டும் சந்தோஷப்படுவானாக்கும்?''

''அப்போ நாம ரெண்டு பேரும் அவங்க யாருமே காண முடியாத இடமா எங்காவது போகலாமா?''

''பேஷா...! அது சரி. அந்தப் பொடியன் சுரேஷ் அங்கேதானே இருக்கான்?''

''இருக்கான். அனு ரங் — பாவம், சின்னப் பையன். அவனை நீங்க ஒன்னும் செய்யாதீங்க.''

''நோ நோ... அவனை நான் பாராட்டணும் போறேன். எனக்குப் பாருவைக் கிடைக்கப் பண்ணினதுக்காக!''

குங்குமப் பொட்டுகள் யாவும் ஒரே வகை அல்ல!

சிங்கார் நிச்சயமாக மேன்மையானது
• சன்னமாகவும், சமனமாகவும் அணிந்திடக் கூடியது • எழில் மிகுந்தது • வழிந்து பரவாது
• உலர்ந்ததும் கீறல் விழாது • கறை ஏற்படுத்தாது
• சுகாதார முறையில் தயாரித்தது.

குறிப்பிட்டுக்
கேட்பீர் எப்போதும்

சிங்கார்

முழுமை எழில் கொஞ்சும்,
இந்தியாவின்
உச்ச விற்பனையுள்ள
குங்குமப் பொட்டு.

பாரமௌண்ட் ப்ராடக்ட்ஸ்,
809, ப்ரஸாத் சேம்பர்ஸ்,
பம்பாய் 400 004.





ஸிங்தூர்

evcrest/638/SH Tam

நீலக்கடல்

ராஜம் கிருஷ்ணன்



பூவரிசைகளைப் போல் நீலக்கடலில் அலைகள் குதித்துக் குதித்துக் கரையை நோக்கி வரும் அந்தக் கட்டுமரத்தைத் தாங்குகின்றன. கரையிலே கட்டை போல் கிடந்த உடலில் சூறாவளியாய் எழும்பும் ஒரு வெறியின் உந்துதல் — அவன் கடலில் பாய்ந்து நீந்திச் சென்று கரை திரும்பும் அந்த மரத்தின் கொடுங்கையைப் பற்றி ஏறிவிடுகிறான். மரத்தைத் தள்ளி வரும் சூசை அவனிடம் கோலைக் கொடுத்து விடுகிறான். மேலே, நீல வானில் ஒரு மாசு மருவில்லை. கீழே நீலக் கடல். மரச் சொந்தக்காரன் சூசையும், அவன் கூட்டாளி ஜோசும் மரத்தை அவனிடம் விட்டுக் கரைக்குப் பாய்ந்து விடுகின்றனர். கரையிலிருந்து மீண்டும் சற்றே அகல, மரத்தை அவன் தள்ளிச் சென்று திரும்பி விடுவான். பத்து நூறு கஜங்களுக்கப்பாலிருந்து கரையை நோக்கி, நிறைந்த வலைகளுடன் கட்டு மரத்தைச் செலுத்தி வரும் உணர்வில் பிச்சையானுக்கு வாழ்வின் பேரானந்தத்தை எட்டிவிட்ட இலயம் கூடிவிடுகிறது. அங்கிருந்து கரையை நோக்குகையில் கரையில் ஈயாய் மொய்த்திருக்கும் காலை நேர மீன்வாடியில், வண்ணப் புள்ளிகளுக்கிடையே நீலப் புள்ளி ஒன்று பெரிதாக வளர்ந்து அவன் கட்புலனை நிறைக்கிறது.

அது.... அவன் ஆத்தா...?

அப்பனை அவன் பார்த்ததில்லை. நீலக் கடல் கொந்தளித்துக் குமுறிச் செம்மையும் கருமையுமாகச் சுழன்றபோது, அப்பனைத் தன் மடியில் அமுக்கிக் கொண்டதாம். அப்போது அவன் தாயின் கருவறையை விட்டு வெளிச்சம் காண வந்திருக்கவில்லை. எனவே, ஆத்தாளை அவன் நீலச் சேலை உடுத்துத்தான் பார்த்திருக்கிறான். பத்துப் பிராயத்தில் அவன் சித்தின் பார்னந்துவின் மரத்திலேறித் தொழில் பழகச் சென்ற காலத்தில் இதே போல் காலைச் சூரியன் கடலை நீலமாக்கும்பொழுது கரையில் அவனுக்காகக் 'கோப்பித் தண்ணி'யை வைத்துக்கொண்டு நீலப் புள்ளியாய்க் காத்திருப்பாள். இந்த முழுக் கடற்கரையிலும் அவள் மாசு மருவற்ற நீலம் போல் விளங்கினாள். அவளுடைய பெண்மையை எந்தச் சூறாவளியும் குலைத்துவிட முடியவில்லை. அவ்வாறு முயன்றவனை அவள் கட்டுப் பொசுக்கி விடுவாளாம். சிலுவைப் பாட்டா அந்தக் 'கதை'யை அவனிடம் சொல்லியிருக்கிறார்.

ஆனால்... அப்பொழுதெல்லாம் இறாலுக்காகக் கொச்சிக்காரர் கரையெங்கும் வந்து மடியில் காசைக் கட்டிக் கொண்டு திரியவில்லையே! இரவு பகலாக 'மிசின் போட்'டுகள் வந்து கடலைக் கலக்கி 'இறால் கூனி'களைக்கூட விட்டு வைக்காமல் வாரிச் செல்லவில்லையே?



தாறுமாறான நினைவுப் பிசிறுகளிடையே இந்தத் தூலமான ரேகைகள் அவனுக்கு முழுமையாகவே புரிகின்றன.

அலைகள் பாறைத் தொடரில் தட்டி மடிந்து விழுகின்றன. அவன் மிகக் கவனமாக, லாகவமாக அதைத் தவிர்க்க விலக்கிச் செலுத்தி வருகிறான். கரை... கரை வருகிறது. கரையில் ஒவ்வொரு சிறுமியாக அவன் முகம் தேடுகிறது.

லிலி.....லிலிப் பொண்ணு எங்கே?

அவனுடைய முடியிலிருந்தும் கண்களிலிருந்தும் உப்பு நீர் வந்து உதடுகளில் கரிப்பைத் தடவுகிறது. செம்மையும் கருமையுமாக உறுதி வாய்ந்த தசைகள். மணலில் அவன் கால்கள் பதிந்தும் பதியாமலும் ஓடுகையில் குலுங்குகின்றன. இடையில் வெறும் அழுக்குக் கச்சை. கண்களில் துழாவும் பார்வை.

லில்லிப் பொண்ணு எங்கே?

'ஓமல்' என்ற பனை ஓலைக் கடையில் நீலமும் வெண்மையுமாக... 'பல் இளிஞ்சான்' மீன் மேலாகத் தெரிய, குத்துகை சாயபு சைக்கிளை மணலில் தள்ளிப் போகிறார்.

''லில்லி, லில்லிப் பொண்ணைக் கண்டியளா? நீலப் பாவாடை ப்ளவுஸ் போட்டிட்டிருக்கும்....?''

அவர் ஒரு கணம் அவனைப் பேரிரக்கத்துடன் பார்த்துவிட்டுச் சைக்கிளைத் தள்ளிச் செல்கிறார்.

உதடுகள் துடிக்க அவன் கோயில் மேட்டில் நடக்கிறான். பக்கத்தில், புனித மேரி உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் வழியில் நீலமும் வெள்ளையுமாகச் சீருடையில் சிறுமியர். எல்லோரும் பெண்கள். ''பொட்டச்சிகதாம் படிக்கா. ஆம்பிளெ கடலுக்குப் போவா. அவெக்குப் படிப்பு எதுக்கு?'' என்பது தான் கடற்கரை மக்களின் தீர்ப்பு. குழந்தை முதலில் தவழ்ந்து கடலை நோக்கித்தான் வரும். ஐந்து வயதுக்குள் கடலில் முக்குளிக்கப் படித்துவிடுவான். மரத்தைத் தள்ளி மணற் கரையில் சேர்க்க, நீரில் தள்ள, வலையை இழுத்து மீன்களைப் பிடிக்கப் படித்து விடுவார்கள். அவன் பத்து வயசில் கடல் மீது போனான். முப்பது வருஷங்களாகப் போகிறான். சரேலென்று அந்த நிர்மலமான நீலம் துண்டு துண்டாகப் பிய்ந்து சிதறி விட்டது.

துண்டு துண்டாக... அவன்தான் கிழித்துக் குதறி எறிந்தான். மினுக்கும் பட்டு நீலம். அதில் தங்க நட்சத்திரச் சுடர்ப் புள்ளிகள். பன்னரிவாளின் கருக்கிலே அதைக் கிழித்துப் பற்களால் இழுத்துக் குதறினான்.

''ஐயோ, நாங்கடன்கொல்லி, கோயிலுக்குக் கட்டச் சீலையில்லென்னு எடுத்தாரச் சொல்லி வச்சிருந்தேன். இப்படி ஏன் கிழிக்

அவன் ஒரு வானவில்

இதுவரை என்னிடம்
'வர்ண ஜாலம்' காட்டிவிட்டு
நீ எங்கே
எங்கே ஒளிந்து கொண்டாய்?
ஓ..... நான்
இதுவரை காதலித்தது
ஒரு வானவில்லையா! —தஞ்சை துரை



ஓவியர் கல்பனா அழகுணர்ச்சியையும் முகபாவங்களையும் வெளிப் படுத்துவதில் வல்லவர். கடலைச் சார்ந்த மனித வாழ்வின் கஷ்டங்களையும் துயரங்களையும் சித்திரிக்கும் எனது இந்தக் கதைக்கு பாவங்கள் முக்கியம். கல்கி ஸ்தாபன ஓவியரையே படம் போடச் சொல்லலாமே?

— ராஜம் கிருஷ்ணன்

கிறிய?'' என்று ஆங்காரமாக அவள் பாய்ந்து வந்தாள்.

''வராதே இட்ட. கொன்னிடுவேன்! வெக்கங்கெட்ட மூதி. கொச்சிக்காரங்கிட்டப் படுத்திட்டு....சீ....'' என்று அதைக் கிழித்துத் துண்டாக்குவதிலேயே அவன் கண்ணாக இருந்தான்.

''ஐயோ சவத்து மாடன் என்னைக் கொல்லானே?'' என்று அவள் ஓலமிட்டாலும் கூட அந்தக் கரையில் இதெல்லாம் சகஜம் என்று அலைகள் கரையை அலைப்புகையில் சிரித்துவிட்டுப் போகும். கடற்கரைக்காரர்களுக்கு இத்தகைய ஓலங்கள் பழகிப் போனவை.

கூலிக்கு வலைக்காரனுக்குச் சென்று, இடைப்பதில் தொண்ணூறு விழுக்காட்டையும் குடித்துவிட்டு வந்து அடிக்கும் கணவனிடம் எத்தனை நாட்கள்தாம் உறவு பற்றிக் கிடக்கும்? இறால் ஏஜண்டுகள் மடி நிறையக் காசுடன் கடற்கரைகளில் திரியும்போது, இளவட்டப் பெண்களின் அடித்தள ஆசைகளுக்கும் அவர்கள் தூண்டில் போடத்தான் செய்தார்கள். அவை மிக விரைவில் குபீரென்று பற்றிக் கொண்டன. யாரையும் யாரும் ஏசுவதற்கோ, பேசுவதற்கோ இடமில்லை. இராக்கடல், பகற்கடல் என்று கட்டு மரத்தைக் கட்டிக் கொண்டு பணத்தை அள்ளித் தரும் இறால் மீனுக்காகக் கடலின் மடியை இவர்கள் ஓயாமல் துழாவினாலும் இவர்களைக் காட்டிலும் பல நூறு மடங்குகள் பலம் கொண்ட பிள்ளைகள் கடலின் மடியை உறிஞ்சிக் குடிக்க முன்வந்து விட்டார்களே? இறால் இவர்களுக்கு எட்டாச் சரக்காயிற்று. மரச் சொந்தக்காரனுக்கே அடுப்பில் நீலப் புகை காண வழியில்லாத போது, கூலிக்காரனுக்கு என்ன கிடைக்கும்? ஒன்று, அரை கிடைக்கும். அதைக் கொண்டு போய்க் குடித்து, கனமான கருமைகளைக் கரைத்துக் கொள்வான். நீல வானில் பஞ்சாய் மிதக்கும் சொகுசுடன் குடிலை நோக்கி வருவான்.

வெற்றுப் பானையைக் கவிழ்த்து விட்டு, வயிற்றுப் பிள்ளையும், கைப்பிள்ளையுமாக வாசலில் நின்று அவனிடம் அடிபட்டுக் கொண்டிருந்தவள், அவன் வருகையில் சோறு போட்டு இறைச்சிக் கண்டம் மிதக்கும் ஆணம் ஊற்றியபோது, ஏனென்று கேட்பாளா? எப்படி என்று வினவினாளா?

பிறகு அரச பொரசலான பிசிறுகள் தெறித்து, உண்மை நிலத்தை அவனுக்குத் தெளிய வைத்து விட்டது.

பலன்தான் மீனுக்குப் புடவையைக் கிழித்தெறிந்தான். அவள் முடியைப் பற்றி உலுக்கினான். வெறி தணிந்ததும் கடலைப் பார்க்கப் போய் அமர்ந்து கொண்டான்.

வலைகளை விரித்து, பாறை பற்றிக் கிழிந்த இடங்களைச் செப்பம் செய்கையில், ''இறால் நிறைச்சுக் கெடச்சா, எல்லாம் செரியாப் போவும். அப்பம் சொந்த மரம் வாங்கலாம். ஒரு நாளைக்குப் பத்து ஐந்நூறு ரூபாய்ப்பாடு கிடைக்குமே? கடல் நாச்சி மனசு வச்சா இந்தா இந்தான்னு கொடுப்பா!'' என்று நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டான்.

அதிகாலையில் தொழிலுக்குச் செல்லும் போது, ''ரால் படணுமின்னு மாதாவை வேண்டிக்க ரோசி. ஒம்மேலே எனக்கு மனத்தாவமே இல்லே...'' என்று கண்ணீருடன் இறைஞ்சுவான். ''நா குடிக்கவே போக மாட்டெ. நேர மீன் தட்டினதும் இங்கத்தா வருவேன்'' என்று ஆணையிடுவான்.

கடலின் எல்லையில்லாப் பரப்பில் வானமும் கடலுமாகச் சூழ்ந்த நீல வெள்ளத்தில் எல்லையில்லாததோர் விடுதலை உணர்வில், கரையின் கருமைகளும், சட்ட திட்டங்களாகிய பந்தங்களும் அகன்று போகும். வானில் பறப்பது எப்படி என்று அவனுக்குத் தெரியாதுதான். ஆனால் கடலில் அந்தப் பூ அலைகளில் ஏறியும் இறங்கியும் மிதந்தும் சவாரி செய்கையில் அவனுக்குப் பத்து நூறு யானைப் பலம் தோன்றும். முழு விடுதலையின் ஆனந்தத்தில் மிதப்பான். பனையுயர அலை வந்தாலும் அவன் அஞ்சியதில்லை. ஆனால் கரையில் வந்தாலோ அந்த நீலம் தந்த விடுதலைப் பலன்களனைத்தும் கனமாய்க் கவிழ்ந்து கொண்டன. அதைக் கரைக்க உடனே அவன் குடிக்கப் போய்விடுவான்.

அன்று அப்படித்தான் மணலில் கிடந்த அவனை யாரோ உலுக்கினார்கள். தட்டி எழுப்பினார்கள்.

''ஏலே, பிச்ச, எழுந்திரிலே! உம்பெஞ்சாதி ரோசி, புள்ளியெல்லாம் தூத்துக்குடி சினிமாக் கொட்டகையில கரிஞ்சி கெடக்காவ... எந்திரிலே!''

''பாவம்... ஆம்பளப் புள்ளிய ரெண்டும் போயிற்று... மிஞ்சினது வில்லிப் பொண்ணுதா... அது சினிமாவுக்குப் போவாம டீச்சர் கூட்டிற்றுப் போயிட்டா.'' குரல்கள்



எங்கோ மலை முகட்டில் தூங்கும் பூரானைப் போல் குடைந்தன.

"அப்பச்சி....அப்பச்சி...!" லில்லிப் பெண்ணின் ஓலம் நீண்டது.

குடலைப் பிடுங்கி விட்டாற் போல் குபுகுபுவென்று எரியுணர்வு மேலிட்டது. நீல நீலமாகச் சுவாலைப் பூக்கள் எழும்பி அவனுக்குள்ளேயே விழுந்தன. அவளுடைய சிலையா, முடியா? எது அடையாளம் கண்டுகொள்ளத் தெரிந்தது? எல்லாம் கரிந்து ஒட்டிக் கிடந்த ஓர் உடலை, குவியலில் யாரோ அடையாளம் காட்டினார்கள். ஜோசு, பீட்டர், இரண்டு தளிர்களும் அன்னையுடன் கருகி விட்டன.

"லில்லிப் பெண்... ஆரஞ்சு போல் முகம். அவள் எங்கே? அவதா எம்மவ. அந்தப் பிள்ளிய கொச்சிக்காரம் பிள்ளிய..." கோயிலின் முன் கெபி.... உள்ளே நீலமாக வண்ணம் பூசியிருக்கிறார்கள். அழகிய பசுங்கொடிகளுக்கு நடுவே தெய்வக் குழந்தையை ஏந்தி நிற்கிறாள் மரியன்னை.

கெபி மூலையில் லில்லிப் பெண் ஒளிந்திருக்கிறாளோ என்று தேடும் பார்வை. உயர்ந்த சிலுவைத் தூபியுடைய கோயிலின் முகப்பிலிருந்து மின்னும் நீலமணிக் கழுத்துக்கள் அசையப் புறாக்கள் பறந்து வருகின்றன.

"லில்லிப் பொண்ணே, ஒன்ன நா அடிக்க மாட்டே.. நா /மாதா சத்தியமாக் குடிக்க மாட்டே.. என்னை விட்டுப்போட்டுப்போயிட்டியே? என்னுத்தா? எனக்கு ஆடில்லாயச் செஞ்சிட்டியே?...."

கோயிலின் உள்ளே சென்று முட்டுக்குத்தி அவன் அழுகிறான். அவனுடைய குரல் அந்த உயர்ந்த கூரையில் முட்டி மோதி எதிரொலித்துக் கடலின் அலைத் துளிகள் போல் அந்தக் கூடம் முழுவதும் பரவுகிறது.

அவனைத் தேடி அங்கே ஆசை வருகிறான்.

"மச்சா, என்னுகா? லில்லிப் பொண்ணு எங்கும் போவ இல்ல. கான்வெண்ட் லில்டர்தா கூட்டிப் போயிற்று. ஸ்கூல்ல படிக்கா இப்பம். நாளைக்கி வரும் வா..."

அவனுடைய முகம் உயர்ந்து எங்கோ வெறுமையைத் துழாவுகிறது. அதா, ஆஞ்க.... லில்லிப் பொண்ணுதா இவ..."

"ஆமா....வா....!"

"பாவம், புத்தி பெறண்டு போச்சு. அந்தப் பொண்ணு லில்லி ஒரு மாசம் இவங்கூடதா இருந்து. அப்பச்சி அப்பச்சின்னு கரஞ்சிச்சி. அதை அடையாளம் கூடத் தெரிஞ்சிக்காம லில்லிப் பொண்ணுன்னு தேடுறு.. பாவம்...."


ஆசை, சகோதரி கணவனை அவனைப் பற்றிக்கொண்டு மணலில் நடக்கிறான். நீலக் கடல் பார்வையை மட்டுமின்றி முழு உணர்வையும் வளைத்துக் கொள்கிறது.

POWER
for bigger profit !

THE P6/354
120 BHP for Vehicular and 90 BHP for Industrial applications

The P6/354 is a cost effective power unit specially designed to give higher productivity at lower fuel consumption levels.

It's 5.8 litres swept volume together with the direct fuel injection system ensures instant and sustained power output at all load conditions.



Engineered to perform under the worst operational conditions the P6/354 has earned a reputation for reliability.

This profitable prime mover is available in both industrial and vehicular versions and is backed up by a nation wide service and parts outlets.

Manufactured and Marketed by

Simpson & Co. Ltd

861/862, Anna Salai, Madras-600 002

MAC/S/404/78 A



அத்தியாயம் 11

ஸில்வரின் சங்கீதம்

இடது கையால் தனது இடையை வளைத்த இந்திரஜித், தன்னைக் கொத்திவிடுவதுபோல் அலையை விரித்துப் பாய்ந்து வந்த இளியை வலது கையால் வெகு லாகவமாகப் பிடிப்பதற்கும், இன்னொரு வெள்ளையனுடன் ஸில்வர் கைக்கோல்களை ஊன்றித் துரிதமாகத் தாங்கள் இருந்த இடத்துக்கு வந்ததற்கும் விநாடிகள் சிலவே சென்றதால் நிலைமையை முற்றும் சீர்தூக்கிப் பார்க்கும் நிலையில் இல்லை ராணியின் மனம். ஸில்வர் அளவுக்கதிகமாகவே குடித்திருந்தாலும் நிதானம் சிறிதும் பிசகாமலும், தள்ளாடாமலும் நடந்து வந்ததையும், வந்த பிறகும் அவன் பதற்றம் எதுவும் காட்டாமல் இருவரையும் பார்த்துப் பெரிதாக நகைத்ததையும் கண்ட ராணியின் உள்ளம் எரிமலையாக இருந்தாலும், வெளிக்கு எந்த உக்கிரத்தையும் காட்டாமல், சிந்துதுர்க்கத்தின் ராணியாகவே மிகக் கம்பீரமாக நின்றிருந்தாள். அவன் தோரணையைக் கண்ட ஸில்வர் பக்கத்திலிருந்த வெள்ளைக்காரனை நோக்கி ''யூ ஸீ டெய்லர்! தி ரே பாரட்ஸ் மாட்ச் ஈச் அதர். தே ஆர் போத் பிரெட்டி அண்ட் தே ஆர் போத் போல்ட். அண்ட்.... (பார்த்தாயா டெய்லர்! இந்த இரண்டு இளிகளும் நல்ல அழகு. நல்ல தைரியம் உள்ளவை. தவிர....) என்றான். வாசகத்தை முடிக்கவில்லை அவன்.


''அண்ட் வாட்?'' டெய்லரின் குரல் கரகரப்பாகவும் பயங்கரமாகவும் ஒலித்தது.

''தே ஆர் போத் இன் த ஹாண்ட்ஸ் ஆப் மை பிரண்ட் அனந்த் (இரண்டும் என் நண்பன் அனந்தின் கைகளில் சிக்கியிருக்கின்றன.)'' என்று கூறிய ஸில்வரின் கண்கள் பளிச்சிட்டன. உதடுகள் பழைய குடிகார நகைப்பைப் பெரிதாக உதிர்த்தன.

டெய்லர் எந்தப் பதிலும் சொல்லவில்லை. உதட்டைக் கூட அசைக்காமல் நின்றான். அவன் தோரணையைப் பார்த்த கடல் ராணியின் உள்ளத்தில் கூட ஓரளவு அச்சம் உதயமாயிற்று. ஆறடி உயரத்தைத் தாண்டியிருந்த டெய்லரின் பழுப்புக் கண்களிலிருந்த சாயை ஈவிரக்கமற்ற கொலைகாரனை நினைவூட்டியது ராணியின் இதயத்துக்கு. டெய்லரின் உடல் மிகப் பருமனாயிருந்ததையும், அது வீண் பருமனாயிருக்காமல் உடலின் ஒவ்வொரு பாகமும் இரும்பைப் போல் இறுகியிருந்ததையும், உதடுகள் மிகப் பெரிதாகவும், மடிப்பிலே ஒரு குரூரத்தைக் காட்டுவதாகவும் அமைந்திருந்ததையும்ராணி கவனித்தாள். அவன் பருத்த கன்னங்களும், கன்னங்களை அடுத்து உதடுகள் மேலிருந்த பொன்னிற மீசையும் கண்களை வளைத்து வளைத்து அவற்றின் நிறத்துக்கு ஈடு கொடுத்த பழுப்புப் புருவங்களும் அவன் முகக் குரூரத்தை மிகைப்படுத்துவதை ராணி கண்டாள். அவன் இடைப் பெல்டில் இருந்தவை இரண்டே கைத்துப்பாக்கிகள் தானென்றாலும் அவற்றின் பரிமாணமும், பிடிகளின் பளபளப்பும் டெய்லர் அவற்றைக் கண்களைப் போல் பாதுகாக்கிறான் என்பதை அறிவுறுத்தின ராணியின் சிந்தைக்கு. டெய்லர் கையில் நீண்டதொரு டெலஸ்கோப் வைத்திருந்தான். ஏதோ பிறரை அடிப்பதற்குத் தயாராயிருப்பவன் போல் அதை அவன் பிடித்திருந்ததையும் பார்த்தாள் ராணி. இஷ்டப்பட்டால் அந்தத் தூரதிருஷ்டிக் கண்ணாடியாலேயே யார் மண்டையையும் அவன் பிளக்கக் கூடியவ

மெட்ராஸ் கிரிக்கெட் டெஸ்டில் ஆஸ்திரேலியா ஒரு விநோதமான ரெகார்டை ஏற்படுத்தியிருக்கிறது. முதல் இன்னிங்ஸில் முதல் ஏழு ஆட்டக்காரர்களும் தங்கள் முதல் ஸ்ட்ரோக்கில் பௌண்டரி அடித்துள்ளார்கள். அதாவது நான்கு ரன்களிலிருந்து தங்கள் கணக்குகளை ஆரம்பித்துள்ளார்கள். இது போல் முன்னால் எப்பொழுதாவது நடந்திருக்கிறதா என்பது சந்தேகமே.

டைம்ஸ் ஆப் இந்தியாவில் கடிதம்
எஸ். சந்திரசேகர்



னென்பதை ராணி சந்தேகமறப் புரிந்து கொண்டாள். தன்னை அவன் பார்த்தபோது கசாப்புக் கடைக்காரன் ஆட்டைப் பார்க்கும் அன்பு அவற்றில் ஒளி விட்டதை ராணி கவனித்தாள்.


ராணிதான் இத்தனையும் கவனித்தாளேதவிர அனந்த் எதையும் கவனித்தாகத் தெரியவில்லை. கண்கள் அரை வாசி மூடியிருந்தன. இரண்டு கைகளும் இரண்டு அலுவல்களில் இருந்ததால் அவன் இடையிலிருந்த கைத் துப்பாக்கியை எடுக்கவும் வசதியில்லாதிருந்தது. உண்மையில் பயங்கரமான இரு எதிரிகளுக்கிடையில் நிராதரவான நிலைமையில் அவன் நின்றிருந்தது நன்றாகப் புரிந்தது ராணிக்கு. அது எதிரிகளுக்கும் புரிந்திருந்தாலும் அவர்கள் இருவரும் அவனை அணுகாமல் சற்று எட்டவே நின்றிருந்தது ராணியின் வியப்பை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது.

அவள் எண்ணங்கள் இப்படி அம்மூவரையும் எடை போட்டுக் கொண்டிருந்த சமயத்தில் வில்வர் பேசினான். ''அனந்த்! நீ கூறியபடி நள்ளிரவு நேரத்தில் வரவில்லை என் இருப்பிடத்துக்கு. ஆகவே நான் வந்தேன்'' என்று கூறினான் பேச்சைத் துவக்க.

அனந்த் பதில் சொல்லவில்லை. மௌனமாக நின்றிருந்தான். ''நேரம் முக்கியம் அனந்த். அதை மீறினால் அது நம்மை மீறிவிடுகிறது'' என்று சொன்ன வில்வர் டெய்லரை நோக்கி ''யூ அக்ரி? (நீ ஒப்புக்கொள்கிறாயா?)'' என்று வினவினான்.

டெய்லர் பதில் ஏதும் சொல்லவில்லை. ஏதோ உயர்ந்து பருத்த ரோமாபுரிச் சிலை போல் விழித்த கண் விழித்தபடி நின்றிருந்தான். வில்வர் அவனையும் நோக்கி அனந்தையும் நோக்கினான். ''நீங்கள் இருவரும் ஊமைகளா?'' என்றும் விசாரித்தான் சகஜமாக. அத்துடன் தனது ஒரு கைக்கோலை ஊன்றி அனந்தை நோக்கி நகர முயன்றான்.

அனந்தின் அரைவாசி மூடிய கண்கள் வில்வரை நோக்கின. உதடுகளும் அரை வாசியே விரிந்தன. ''நேரத்தைப் பற்றிப் பேசினாய் வில்வர்'' என்ற சொற்கள் வறண்ட குரலில் உதிர்ந்தன அவன் உதடுகளிலிருந்து.



''ஆம் அனந்த்! நேரத்தை ஓட்டிவிட்டாய். காரணம், பக்கத்தில் நிற்கிறது. அதுவும் ஒரு கிளிதானே அனந்த்?'' என்றான் வில்வர்.

''கிளிதான் வில்வர். ஆனால் உன் நேரம் சரியில்லை'' என்று அனந்த் மறுபடியும் பதில் சொன்னான்.

''என் நேரமா?'' சற்றுக் குரல் மாறியது வில்வருக்கு. சந்தேகமும் அதில் ஒலித்தது.

''உன் கிளியின் நேரம் கூட'' என்ற அனந்த், ''வில்வர் இந்த ராட்சதக் கிளியைக் கொண்டு வராதே என்று உன்னை நான் காப்பாற்றியபோதே சொன்னேன். நீயும் அதைப் பறக்க விட்டாய். இப்பொழுது புரிகிறது எனக்கு. நீ எங்கிருந்தாலும் இது உன்னைத் தொடர்ந்து வரும். நீ ஏவினால் யார் கண்ணையும் கொத்தத் தவறாது. எத்தனை அழகான பறவைக்கு ராட்சதத் தனத்தைக் கற்பித்திருக்கிறாய்?'' என்றும் சொன்னான். இப்படிச் சொன்ன அனந்த் ராணியின் இடையிலிருந்த தனது இடது கையை எடுத்து அதில் கிளியை மாற்றிக் கொண்டான். பிறகு வலது கையால் அதன் பெரிய கழுத்தைத் தடவினான். ''இதன் கழுத்து மிக அழகாக இருக்கிறது வில்வர். இதை நெரிக்க எனக்கு இஷ்டமில்லை'' என்றும் கூறினான்.

இடது கையிலிருந்த அந்தக் கிளி மற்ற கிளிகளைவிடப் பன்மடங்கு பெரிதாயிருந்தது. அதன் அலகு கழுகின் அலகைப் போலிருந்தது. வண்ண இறகுகள் அளவுக்கு மீறியும் உடல் கொழுத்தும் இருந்தன. அந்த உடலைச் சற்று இறுக்கிப் பிடித்த அனந்த் தனது வலது கையால் அதன் கழுத்தைச் சுற்றிப் பிடித்தான்.

''அனந்த்! மை பாய்! டோண்ட் கில் இட். டோண்ட் இஞ்சர் இட். (அனந்த்! அதைக் கொல்லாதே. இம்சை செய்யாதே)'' என்று கெஞ்சினான் வில்வர்.

கிராதகனான வில்வருக்கு அந்தக் கிளியிடம் ஏன் அத்தனை அன்பு, பரிவு என்பது ராணிக்குப் புரியவில்லையாயினும் அனந்துக்குப் புரிந்திருந்ததால் அவன் சொன்னான்: ''வில்வர்! டச் மை பாரட், ஐ வில் ரிங் தி நெக் ஆப் யுவர் பாரட் (வில்வர்! என் கிளியைத் தொடு. உன் கிளியின் கழுத்தைத் திருகி விடுகிறேன்)'' என்று.

வில்வர் வெலவெலத்துப்போனான். ஆகவே சுதேசி மொழிக்குத் திரும்பினான். ''அனந்த்! உன் கிளிக்கு எந்த விதக் கெடுதலும் இல்லை. நாங்கள் தப்ப வேண்டும். எங்களுடன் நீயும் வா அவளை அழைத்துக்கொண்டு. உன்னையும் அழைத்துப் போகிறோம்'' என்று சொன்னான். அவன் குரலில் அன்பு கொட்டியது.

அனந்த் டெய்லரை நோக்கினான். ''டெய்லர்! யூ பிராமிஸ் நாட் டு ஹார்ம் இஸ் கேர்ல் (டெய்லர் இந்தப் பெண்ணுக்கு எந்த ஹானியும் விளையாதென்று உறுதி கூறுகிறாயா?)'' என்று கேட்கவும் செய்தான்.

டெய்லர் பதிலை மராட்டியில் சொன்னான். நல்ல மராட்டியே பேசினான் அவன். ''டெய்லர் யாருக்கும் எந்த உறுதியும் கூறுவதில்லை'' என்றான் டெய்லர், புருவத்தைக் கூட அசைக்காமலும், குரலில் எந்த உணர்ச்சியையும் காட்டாமலும்.

அனந்தின் கண்கள் முக்கால்வாசி மூடிக் கொண்டன. ''அப்படியானால் நான் இங்



லிருந்து நகர உத்தேசமில்லை'' என்றான் அனந்த்.

டெய்லரின் உதடுகள் கடுமையாக மடிந்தன. ''நீ ஒரு முட்டாள்'' என்று கூறி அனந்தின் இடையில் சொருகப்பட்டிருந்த இரு கைத்துப்பாக்கிகளையும் கவனித்தான். ''இந்தத் துப்பாக்கிகளை நீ துரிதமாகச் சுடுவதாக வில்வர் சொன்னான். அந்த விளையாட்டை டெய்லரிடம் வைத்துக்கொள்ளாதே. டெய்லரைவிடத் துரிதமாகச் சுடக் கூடியவன் இனிமேல் பிறந்துதான் ஆக வேண்டும். பேசாமல் என்னுடன் வருவது உனக்கும் நல்லது அந்த ராணிக்கும் நல்லது'' என்ற டெய்லர் ''வாருங்கள் என்னுடன்'' என்று சொல்லிவிட்டுச் சோலையிலிருந்து கடலுக்குச் செல்லும் வழியில் நடந்தான். ''வெயிட் டெய்லர் வெயிட்'' என்று வில்வர் கூறியதை அவன் காதில் வாங்கவில்லை, திரும்பிப் பார்க்கவும் இல்லை.

டெய்லர் செல்வதை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்ற அனந்த் ''வா ராணி! டெய்லரின் திறமை எத்தனை தூரத்திலிருக்கிறது என்பதைக் கவனிப்போம்'' என்று கூறி டெய்லர் சென்ற திசையில் நடந்தான். ராணி அவனைத் தொடர்ந்தாள். அவர்கள் பின்னால் வில்வர் கைத்தடிகளை ஊன்றிப் பாய்ந்து வந்தான். கையிலிருந்த அகரக் கிளியை ராணியிடம் கொடுத்து, ''ராணி இதைப் பத்திரமாக எடுத்து வா. உன்னைக் கொத்தினால் கழுத்தை நெரித்து விடு'' என்று வில்வரின் காது கேட்கச் சொல்லிவிட்டு மேலும் நடந்தான்.

சோலையை விட்டு வெளிப் போந்ததும் அங்கு தங்களைச் சுற்றி வளைக்க யாருமில்லாததைக் கண்டு ராணி வியந்தாள். அதைப் பற்றிக் கேட்கவும் செய்தாள்: ''இங்கு யாருமே இல்லையே?'' என்று.

பின்னால் வந்த வில்வர் இதைக் கேட்டு நகைத்தான். ''ஹி ஃஸ் எ லோன் உல்ப்!'' டெய்லர் ஃஸ்'' (டெய்லர் யாரையும் துணைக் கொள்வதில்லை. அவன் ஒரு தனிப்பட்ட ஓநாய். யார் மீதும் தனியாகவே பாயும் சக்தி அவனுக்கு உண்டு) என்று கூறி நகைத்தான்.

அப்பொழுது டெய்லர் கடல் ஓரத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். தனியாக. கரை ஓரத்தில் ஒரு படகு மட்டும் இருந்தது. படகு டெய்லருடையது என்பது சந்தேகமறத் தெரிந்தது அனந்துக்கு. அந்தச் சமயத்தில் வில்வர் அனந்தை இரண்டு எட்டில் அணுகி, ''இதுதான் சமயம், அவன் முதுகில் சுட்டுவிடு'' என்று ரகசியமாகக் கூறினான்.

''அனந்த் யாரையும் முதுகில் சுடுவதில்லை'' என்றான் அனந்த் வறண்ட குரலில்.

''சரி. கழுத்தில் சுடு'' என்றான் வில்வர்.

''பின்புறத்தில் சுடும் பழக்கமில்லை எனக்கு. முதுகாயிருந்தாலும் கழுத்தாயிருந்தாலும் ஒன்றுதான் எனக்கு.'' அனந்தின் குரல் மிகவும் கடினப்பட்டு ஒலித்தது.

''சுடும் வழக்கமில்லை! சாவதுதான் வழக்கமா?'' என்றான் வில்வர்.

இதற்கு வில்வருக்குப் பதில் சொல்லவில்லை அனந்த். ராணியிடம் சொன்னான்: ''ராணி! இன்னொரு முறை இவன் வாயைத் திறந்தால் கிளியின் கழுத்தை முறித்துவிடு.'' பிறகு நடந்தான் கடற் கரையை நோக்கி.

பாண்டவகட்டின் கடற்கரையில் அமைதி நிலவிக் கிடந்தது. அலைகளின் இரைச்சலைத் தவிர ஒலி எதுவும் இல்லை. எட்ட இருந்த சிந்து துர்க்கத்தின் கலங்கரை விளக்கத்தின் ஒளிகூட மிகப் பயங்கரமாகக் கடல்மீது விழுந்ததே தவிர அங்கிருந்த காவலர் ஒலியும் காதுக்குக் கேட்கவில்லை. சாதாரணமாகப் பாண்டவர் கட்டைப் பாதுகாக்கும் காவலர் கூட யாரும் காணோம். எங்கும் நிலவிக் கிடந்த மௌனமே பயங்கரமாக இருந்ததென்றாலும் டெய்லர் பயமற்ற நோக்குடன் படகருகில் நின்று கொண்டிருந்தான். அவனுக்கருகில் படகிலிருந்த பீரங்கி ஒன்று எதிரே அணுகி வந்த மூவரையும் நோக்கிப் பயங்கரமாக விழித்தது.

நல்ல பாதுகாப்புடனேயே டெய்லர் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டான் அனந்த். தங்களைத் துப்பாக்கியாலும் அவன் சுடலாம், இல்லையேல் படகில் தாவிப் பீரங்கியை இயக்கியும் அழிக்கலாம் என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி உணர்ந்து கொண்டான் அனந்த். சிந்து துர்க்கத்திலும் சரி, பாண்டவர் கோட்டையிலும் சரி, ஏன் பீரங்கிகள் அமைதியாக இருக்கின்றன? அப்பேர்ப்பட்ட என்ன மந்திரம் டெய்லரிடம் இருக்கிறது?'' என்று சிந்திக்கவும் செய்தான் அனந்த். விடை ஏதும் புரியாததால் டெய்லரை நோக்கி ''இங்கலண்ட் எங்கே?'' என்று வினவினான்.

''காஸண்ட்ராவுக்கு அனுப்பப்பட்டான்'' என்றான் டெய்லர், இமைகளைக் கூடக் கொட்டாமல்.

இந்தச் சமயத்தில் வில்வர் இடை புகுந்து ''புவர் பாய்! இங்கலண்ட் லைக்ஸ் காஸண்ட்ரா (பாவம்! இங்கலண்டுக்கு காஸண்ட்ரா மிகவும் பிடிக்கும்)'' என்று கூறினான்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மணி: மாமா, ஒரு நிமிஷம் நெருப்புத் தரீங்களா, சிகரெட் பிடிக்கிறதுக்கு!
மாமா: நெருப்பா, எங்கிட்ட இல்லையே!
மணி: அதெப்படி? அந்த அக்கிரகாரத்திலே நீங்கதான் வத்தி வெக்கப் பேசறவர்னு எல்லாரும் சொல்றாங்களே! -ஸ்ரீநடராஜன்





தாக்கர்ஸி — தலைமுறையினரின் நாகரீக இணைப்புப் பாலம்

உங்கள் குடும்பத்திலுள்ள அனைவருக்காக நாகரீகத் துணிகளைப் படைக்கின்றது தாக்கர்ஸி. உன்னத காட்டன்களுக்காக 1873 முதல் புகழ்பெற்றது. பாலியெஸ்டர் கலப்பிழைத் துணிகளை முதன் முதலாக உருவாக்கியது. வாயில், கிரேப், கேம்ப்ரிக், பாப்ளின், 2 × 2, வேட்டி, ஜக்கார்டு, ஃபர்னிஷிங், <u>க்ரோஷேஸ்ட்</u> (முன்கூட்டியே சுருக்கப்பட்டது) மற்றும் <u>டெபிலேஸ்ட்</u> (மடிப்பைத் தடுக்கப் பரிசோதனை செய்யப்பட்டது) காட்டன் ஆகியவற்றில் மனங்கவரும் எண்ணற்ற வண்ணஜாலங்கள், பிரிண்டுகள் மற்றும் நெசவுகள். தவிர பாலியெஸ்டர் கலப்பிழை சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், ஆடைத் துணிகள் மற்றும் புடவைகள்.

ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிட்.

1873 முதல் TF உன்னதமான ஜவுளிப் பரம்பரைச் சின்னம்

Dattaram-HM-14-TAM

''ஷட் அப்!'' டெய்லரின் சொல் கடுமையாக ஒலித்தது. அடுத்த விநாடி தடுமை மாறியது. ''மேடம்! ப்ளீஸ் ஸ்டெப் இன் (அம்மணி இங்கு ஏறுங்கள்)'' என்று படகைச் சுட்டிக் காட்டினான், ராணிக்கு மிக மரியாதையுடன்.

ராணி அனந்தை நோக்கினாள். அனந்த் ராணியின் இடையில் தனது கையைக் கொடுத்தான்.

''நீ தேவையில்லை. ராணி மட்டும் வரட்டும்'' என்றான் டெய்லர்.

அனந்தின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. ''ராணி எங்கு போகிறாளோ அங்கு நானும் வருவேன்'' என்றான் அனந்த்.

''நோ (முடியாது)'' டெய்லர் குரல் பயங்கரமாக ஒலித்தது.

''எஸ் (ஆம் முடியும்)'' அனந்தின் குரல் மிக இனிமையா யிருந்தது.

டெய்லர் முதன் முதலாக நிதானத்தை இழந்தான். ''என்னை எதிர்த்துப் பிழைத்தவர் கிடையாது'' என்று டெய்லர் சொன்னான். அவன் கை அவன் பெல்ட்டிலிருந்த துப்பாக்கியை நோக்கிச் சென்றது.

''காப்டன் டார்லிங்! டோன்ட் பீ எ ஃபூல். வாட்ச் அவுட் (காப்டன் தங்கமே முட்டாள்தனம் செய்யாதே. பார் சரியாக)'' என்று அனந்தின் குரல் ஒலித்தது. நகைத்தது.

டெய்லர் வியப்புடன் நோக்கினான். எதிரே ராணியின் கையில் அவள் இடையிலிருந்த துப்பாக்கி டெய்லரைப் பார்த்துக் கொண்டிருந்தது. ராணியின் இடையை வளைத்த போதே அவள் ஆடையைத் தளர்த்திக் கைத் துப்பாக்கியை நகர்த்தி அவள் கைக்குள் திணித்துவிட்ட அனந்தின் கருத்தை ராணி புரிந்து கொண்டாள். கையிலிருந்த துப்பாக்கியுடன் மேலாடையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். சமயத்தில் மேலாடை அகன்றது. துப்பாக்கி தோன்றியது.

துப்பாக்கியைக் கவனித்த டெய்லர் சிறிதும் அஞ்சவில்லை. ''கேர்ல் யூ ஆர் பிரேவ் (பெண்ணே! நீ துணிவுள்ளவள்)'' என்று பாராட்டினான். அத்துடன் சொன்னான்: ''சரி! ராணி! அனந்தும் வரட்டும்'' என்று.

அடுத்தபடி ராணி அனந்தை நோக்கிக் கேட்டாள். ''இனி நாம் செய்ய வேண்டியது என்ன?''

''டெய்லரைத் திருப்தி செய்வோம். படகில் ஏறிக்கொள்.'' என்றான்.

அதுவரை மௌனமாய் இருந்த வில்வர், ''அனந்த்! டெய்லருடன் போக வேண்டுமா?'' என்று கேட்டான்.

''காலண்ட்ராவில் வேலையிருக்கிறது எனக்கு'' என்ற அனந்த் ''சரி ராணி! ஏறு படகில்'' என்றான்.

கையிலிருந்த துப்பாக்கியை அகற்றாமலே படகில் ஏறினாள் ராணி. அவளைத் தொடர்ந்து அனந்தும். அனந்தைத் தொடர்ந்து வில்வரும் ஏறிக் கொள்ள டெய்லரே படகைச் செலுத்தினான் துடுப்புகளால். கடலின் அலைகள் பெரிதாக எழுந்து தாழ்ந்தன. ஆகாயத்தில் விண்மீன்கள் கண் சிமிட்டின. அகண்டமான இருளில் படகு அலைகளில் எழுந்தும் தாழ்ந்தும் போய்க் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் வில்வர் சொன்னான்: ''அனந்த்! உன் போக்கு எனக்குப் புரியவே இல்லை'' என்று.

''பலருக்குப் புரிவதில்லை'' என்ற அனந்த், ''வில்வர்! உன் வழக்கமான பாட்டைப் பாடு என்று கேட்டான்.

அந்த நிலையில் அனந்த் அவனைப் பாடச் சொன்னதை ராணி ரசிக்கவில்லை. அவள் ரசிக்காததற்காக சங்கீதத்தை நிறுத்தவில்லை வில்வர். பெரிய குரலெடுத்து அலைகளுக்குச் சரியாகப் பாடத் தொடங்கினான்.

(தொடரும்)

நினைவூட்டுகிறோம்: அலை ஓசை கருத்தரங்கு

''தாம் எழுதிய நாவல்களுள் மிகச் சிறந்தது அலை ஓசை என்று கல்கி அவர்களே கருதக் காரணம் என்ன?'' — விடையைக் கல்கியில் இரண்டு அல்லது மூன்று பக்கங்களுக்கு மேற்படாத வகையில் எழுதி கல்கி ஆசிரியர் விலாசமிட்டு அனுப்புங்கள். சிறந்த கட்டுரைக்கு வானதி திருநாவுக்கரசு ரூ. ரூ. 1000 பரிசு வழங்குகிறார்.

பரிசு பெறும் கட்டுரை தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் கட்டுரைகளுக்கு கல்கி காரியாலயம் வழக்கமான சன்மானம் வழங்கும். பரிசு பெறும் கட்டுரை டிசம்பர் 5ல் கல்கி நினைவு நாளை யொட்டி வெளிவரும் கல்கி இதழில் பிரசுரமாகும். பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை ஒட்டி சுய விலாசமிட்ட உறையைக் கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். கடிதப் போக்கு வரத்துக் கிடையாது. முடிவு தேதி நவம்பர் 10. உறையின் மேல் ''அலை ஓசை கருத்தரங்கு'' என்று குறிப்பிடவும்.

அலை ஓசை புத்தகம் கிடைக்காதவர்கள் சொந்தத்தில் வாங்க விரும்பினால் பத்து ரூபாய் சலுகை தரச் சித்தமாய் இருக்கிறார் திருநாவுக்கரசு. டிசம்பர் 5ல் வரை நாற்பது ரூபாய் புத்தகத்தை முப்பது ரூபாய்க்குப் பெறலாம். இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவோர் வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை-17 என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

சியாமளிக்கு மசக்கை

தமிலன்

அந்தப் பாங்கின் ஸேவிங்ஸ் பாங்க் கௌண்ட்டரில் அன்று காலே பணிபுரிந்த சியாமளி, பணம் பெற வந்த வாடிக்கையாளரிடம் செக்கைத் தன் கைநீட்டி வாங்கிக்கொண்டாள். பிறகு டோக்கனை எடுத்து 'உவா' என்று சொல்லிக் கொண்டே வாடிக்கைக்காரரிடம் எறிந்தாள்.

பணம் வாங்க வந்தவர் அந்தப் பெண் (சுமார் 25 வயதுள்ள மங்கை) தன்னைப் பரிகாசம் செய்வதற்காக 'உவா' என்றுளா அல்லது அப்படிச் சப்தமிடுவது மிக நவீன முறை வேலே நிறுத்தத்தின் ஓர் அம்சமா என்று எண்ணி ஆச்சரியப்பட்டார்.

சியாமளிக்கு இடதுபுறமிருந்த வாலிபக் குமாஸ்தா இந்தச் சப்தத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவளைக் கடைக்கண்ணுல் பார்த்தார். வலது புறம் உட்கார்ந்திருந்த சக குமாஸ்தா ஒரு துண்டுக் காகிதத்தில் 'குமட்டுகிறதா?' என்று எழுதி அதைச் சியாமளியினிடம் காண்பித்தான்.

சியாமளி ஆமாம் என்று தலையாட்டினுள்.

''லீவு எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போ!'' என்று அவன் பதில் எழுதினுன்.

சியாமளிக்கு அப்படிச் செய்ய விருப்பமில்லே. ஆனுல் மறுபடியும் 'உவ்வா' சப்தம் தொண்டையில் கிளம்பிக் கொண்டிருந்ததால் அதை ஒருவிதமாக உள்ளேயே தங்கியிருக்கச் சொல்லிவிட்டு மானேஜரிடம் உடல் என்னவோ செய்கிறதென்று கூறி லீவு பெற்றுக் கொண்டு வீடு திரும்பினுள்.

அவள் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த சக குமாஸ்தா ''சியாமளி எதுவும் ஷெட்யூல் படி செய்பவள்!'' என்றான்.

''அப்படி யென்றால்?'' என்று அந்தப் பெண் குமாஸ்தா கேட்டாள்.

''அவளுக்கு செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதி கல்யாணமாயிற்று. இன்று அக்டோபர் ஐந்தாந் தேதி. சரியாக ஒரு மாசமாகிவிட்டது.....'' என்று இழுத்தான்.

''ஓ! பிரக்னென்ட்....!'' என்று வெட்கம் புரிந்த வண்ணம் மெதுவாகக் கூறினுள்.

டாக்ஸியில் தன் மனைவி வந்து இறங்குவதைக் கண்ட அவள் கணவன் கிருஷ்ணன் ஆச்சரியப்பட்டான். வாசற்பக்கம் அவனது தாயார் மங்களமும் என்னமோ, ஏதோ என்று பயந்து விட்டாள்.

சியாமளி நேரே சென்று ஒரு ஸோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

''என்னம்மா!'' என்று அன்புடன் கேட்டுக் கொண்டே கணவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''உவ்வா!'' என்று பதில் வந்தது.

''என்ன?''

''உ....வ்....வா....!'' என்று மேலும் பலத்த குரலில் பதில். அப்போது சியாமளி தன் தொண்டையைப் பிடித்துக் கொண்டாள்.

மாமியார் மங்களம் சியாமளியைப் பாத்ரூமுக்கு அழைத்துச் சென்றாள்.

அவர்கள் இருவரும் திரும்பி வந்ததும் கிருஷ்ணன், ''நான் போய் ஒரு ஸோடா வாங்கிக் கொண்டு வருகிறேன். அப்படியே நம்ப டாக்டரையும் வரச் சொல்லி டெலிபோன் செய்துவிட்டு வருகிறேன்'' என்றான்.

''டாக்டர் எதற்கு! நான் அவளுக்குக் குமட்டல் உண்டாகணும்னு வேண்டிக் கொண்டிருக்கிறேன். எனக்குப் பேரன் பிறக்கப் போகிறான்!'' என்றாள் தாயார்.

இதைக் கேட்டு அந்த இளம் தம்பதிகள் பூரிப்படைந்தனர்.

''அவளுக்கு மசக்கை அதுதான் குமட்டுகிறது. அது நம்ப குடும்பத்திலே பலமாக உண்டு. ஏன், எனக்குக்கூடக் கல்யாணமான முப்பத்தோராவது நாளே மசக்கை ஏற்பட்டது. ஒரே குமட்டலும், ஓக்காளமும். உன் பாட்டி வாந்தியை அடக்க மருந்து எதுவும் சாப்பிடக் கூடாது என்று சொல்லிவிட்டார். அப்போது எனக்கு என்னவெல்லாம் புதுசாப்பிடிக்குமோ அதெல்லாம் கொடுக்க ஏற்பாடு செய்தார். ''சியாமளி! உனக்கு என்ன வேண்டும் போலிருக்கிறது. சொல்!'' என்றாள்.

சியாமளிக்கு, பாரமார்த்தியான தன் மாமியாரைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று தோன்றிற்று. அப்படிச் செய்ய ஆசைப்பட்டாள். ஆகவே ''கருநீலப் புடவை!'' என்று தெரிவித்துக் கொண்டாள்.

''அதென்ன பிரமாதம்! வாங்கினால் போச்சு!'' என்றாள் மாமியார்.

''அதை எதற்காகப் பிடிச்சே?'' என்று கிருஷ்ணன் மனைவியைக் கேட்டான்.

''நான் கான்வென்ட் ஸ்கூலிலே நாலு வயதிலேயிருந்து பதினாறு வயசு வரைக்கும் கருநீலச் சீருடைதான் போட்டுக் கொண்டிருந்தேன்'' என்றாள் சியாமளி. அவளுக்கிருந்த புடவைகள், ரவிக்கைகள் எல்லாம் அநேகமாகச் சிவப்பு நிறத்தினவாய் இருக்கும். மாமியாருக்கு அந்த வர்ணம் ரொம்பப் பிடிக்கும் என்பதற்காகத் தனக்குக் கருநீல நிறத்தின் மீதுள்ள ஆசையை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''மத்தியானத்துக்கு மேலே நீங்கள் இரண்டு பேருமாகப் போய்ப் புடவை வாங்கிக்கொண்டு வாருங்க!'' என்றாள் மாமியார்.

''இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. நாளைக்குப் போகிறோம்!'' என்றான் கிருஷ்ணன்.

அன்று இரவு கணவனும் மனைவியும் தங்கள் படுக்கை அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

''இந்தக் கருநீலம் உனக்கு ரொம்பப் பிடிக்குமாக்கும்!'' என்று ராமகிருஷ்ணன் கேட்டான்.

''கல்யாணத்துக்கு முன்னாலே சுமாராக. இப்போது ரொம்ப!'' என்றாள்.

''இப்போது என்ன விசேஷம்?''

''அது உங்களுக்கு ரொம்பப் பிடித்திருக்கிறதனாலேதான்.''

''எனக்கா,

''ஆமாம்! உங்களுக்கு மொட்டை மாடியில் திறந்த வெளியில் படுத்துக் கொள்ளப் பிடிக்கும். நீல நிற ஆகாயத்தைப் பார்த்து அனுபவிப்பீர்கள்!''

''ஆமாம்!''

''பீச்சுக்குச் சென்றால் நீலக் கடல் நீரைப் பார்ப்பதில் உங்களுக்கு ஆனந்தம். அடிக்கடி துறைமுகத்துக்குச் சென்று அங்கே தேக்கப் பட்டிருக்கும் தண்ணீரின் நீல நிறத்தைக் கண் கொட்டாமல் பார்ப்பீர்கள்!''

''அப்புறமா?''

''சன்னல் திரைகள் எல்லாம் அநேகமாக நீல நிறம்தானே?''

''ஆமாம். அந்த வர்ணம் கண்களுக்குப் பாது காப்புக் கொடுக்கும்'' என்றான் கிருஷ்ணன்.

இயற்கை

ஒரு தாரிகையை சிருஷ்டிக்க எண்ணி
ஓர் ஓவியத்தைச் சிருஷ்டித்தது
அதுதான் வானவில்
சொர்க்கத்திலிருந்து வீசியெறியப்படுகிற
துரும்புகூட
அழகாகத்தான் இருக்கிறது

- புலவர் நா. காமராசன்

''கல்யாணத்தின்போது எனக்குச் சாதாரண வைரத் தோடு போடப் போவதாகச் சொன்னார்கள். நீங்கள் ஃப்ளூ ஜாகர் வைரத் தோடுதான் போட வேண்டும் என்று சொல்லி அதற்காகும் அதிகப்படி இரண்டாயிரம் ரூபாயை நீங்களே கொடுத்து விட்டீர்கள். இது மாதிரி உங்களுக்கு நீல நிறப் பைத்தியம் உண்டு. அது என்னையும் இப்போது பிடித்துக் கொண்டு விட்டது. என் பெயர் சியாமளி என்று உங்கள் பெயருக்கு ஏற்றாற் போல் அமைந்திருக்கிறது தெரியுமா!'' என்றாள்.

''எப்படி?''


''நீங்கள் சியாமளன்.''

''புரியவில்லை.''

''கிருஷ்ணன் அல்லவா? நீலமேக சியாமள வர்ணமுள்ளவர்'' என்றாள்.

''கிருஷ்ண பகவான் கறுப்பாயிருந்தாராம். அதற்காக நாகுக்காக நீலமேகன் என்று புகழ்ந்தார்கள்.''

இப்படி அவர்கள் நீல வர்ணத்தின்



எல்லாப் பெருமைகளையும், அருமைகளையும் பற்றிப் பேசினர்.

மறுநாள் காலை சுமார் ஏழு மணி இருக்கும். சியாமளியின் மாமியார், முகத்தில் கவலையுடன் மருமகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

''ஏன், அம்மா! என்னவோ போலிருக்கிறீர்கள்?'' என்று சியாமளி பரிவுடன் கேட்டாள்.

''நீ எழுந்திருந்தது முதல் சும்மா இருக்கியே. நேற்று பாங்கிலே பண்ணின மாதிரி....'' என்றாள்.

''ஓ! அதைச் சொல்கிறீர்களா? அது வந்து கொண்டிருக்கு.'மறு கணம்'உவா... உவா... உவ்வா....'' என்றாள்.

இந்த ஒக்காள சங்கீதத்தைக் கேட்ட மாத்திரத்தில் மாமியாரின் முகம் மலர்ந்தது.

சியாமளி இரண்டு நிமிடங்கள் இண்டர்வெல் விட்டு விட்டு மறுபடியும் ஒக்காளமெடுக்க முயற்சிகள் செய்தாள். அப்புறம் அது நின்று விட்டது.

''இன்றைக்கு ஆபீசுக்குப் போக வேண்டாம்!'' என்று கூறிக் கொண்டே கிருஷ்ணன் மாடிப் படிகளிலிருந்து இறங்கி வந்தான்.

''உ....வ்....வா!'' என்றாள் மறுபடியும் சியாமளி.

''இன்றைக்குச் சீக்கிரமே சாப்பிட்டுவிட்டு ஜவுளிக் கடைக்குப் போய் வாருங்கள்!'' என்று மங்களம் கூறினாள்.

''என்ன புடவை வாங்குகிறது?'' என்று சியாமளி தன் மாமியாரைக் கேட்டாள்.

''உன்னிஷ்டம். உனக்கு எது பிடிச்சாலும் வாங்கு. பட்டுப் புடவை வேண்டுமானாலும்...''

''அது கனமாயிருக்குமே அம்மா!''

''மெல்லியதாகவே வாங்கிக்கொள்!'' என்றாள்.

அன்று பிற்பகல் மூன்று மணிக்குக் கிருஷ்ணன் தம்பதிகள் ஒரு பெரிய மில் துணி ஸ்டோர்ஸுக்குள் சென்றார்கள்.

''மிக மிக மெல்லிய புடவை எடுங்கள்'' என்றாள்.

''அமெரிக்கன் ஷிப்பான் இருக்கிறது'' என்று விற்பனையாளர் கூறித் துணி மடிப்புக்களை எடுக்கப் போனார்.

''டார்க் புளு, இரண்டு கலரில் வேண்டும்'' என்றான் ராமகிருஷ்ணன்.

விற்பனையாளர் ஏழெட்டு மடிப்புக்களை எடுத்துப் போட்டார். ''இது ஸீ புளு (Sea Blue) இது ஸ்கை புளு (Sky Blue) இது நேவி புளு (Navy Blue) இது ஆனந்தா புளு'' என்று ஒவ்வொன்றையும் பற்றிச் சொன்னார்.

''எனக்குக் கருநீல வர்ணத்தில் வேண்டுமே!'' என்றார் சியாமளி.

அந்த வர்ணப் புடவை இல்லாததால் விற்பனையாளரின் வழக்கப்படி ''இது எம். எஸ். ப்ளு'' என்று ஒரு மடிப்பைக் காண்பித்து, ''இந்தக் கலர் முப்பது வருஷங்களுக்கு முன்னே பிரபலமாயிருந்தது. மறுபடியும் இப்போது பாபுலராகியிருக்கிறது!'' என்றார்.

பிறகு இருவரும் வேறு ஒரு கடைக்குச் சென்றார்கள். அங்கும் சியாமளியின் மசக்கையைத் தீர்ப்பதற்கான அந்த இண்டிகோ நிறப் புடவை இல்லை. அவர்கள் மேலும் இரண்டு கடைகளுக்குச் சென்று பார்த்தனர். அங்கேயும் சியாமளியின் மசக்கையைத் தீர்ப்பதற்கான அந்தக் கருநீல வர்ணப் புடவை இல்லை.

பிறகு அவர்கள் வீட்டுக்குத் திரும்பினர்.

மங்களத்தம்மாள் அவர்கள் இருவரும் வெறுங் கையுடன் வருவதைப் பார்த்து, ''ஏன் ஒன்றுமே வாங்கவில்லையா?'' என்று கேட்டாள்.

அப்போது சியாமளிக்கு ஒரு புத்திசாலித்தனமான யோசனை தோன்றிற்று.

''அம்மா, அந்த வர்ணப் புடவையெல்லாம் பௌடர் சாயம் தோய்த்ததாம். அவுரிச் சாயத்தில் தோய்த்த புடவைதான் வேணும் போலிருக்கிறது. ஆனால், நம்ப தேசத்திலே இப்போது அவுரிச் செடியிலிருந்து சாயம் தயாரிக்கிறதில்லையாம். ஸ்பெஷலாகச் சொல்லித் தயாரிக்கச் சொல்லணுமாம்!'' என்றாள்.

''மசக்கை என்றால் இப்படியெல்லாம் பேச வருமாக்கும்!'' என்று கணவன் பரிகசித்தான்.

''முன்னெல்லாம் கருநீலத்துக்கு அவுரிச் சாயம்தான் தோய்ப்பார்கள். புடவை ஒரு தனி பளபளப்புடன் இருக்கும். புடவை வெளுக்காது....'' என்று மங்களம் தன் பழைய கால நினைவுகளைக் கூறிக்கொண்டே போனாள்.

அன்றிரவு.

''நீ ஏன் அவுரிச் சாயத்தைப் பற்றி என்னிடம் சொல்லவில்லை?'' என்று கிருஷ்ணன் கேட்டான்.

''ஏன்? நீங்கள் அவுரிச் செடிகளைப் பிடுங்கிக்கொண்டு வரக் கிளம்பி விடுவீர்களோ என்ற பயந்தான்!'' என்றாள் சியாமளி.


''உனக்காக விண்ணையும் சாடுவேன்! இன்றைய பேப்பர்லே வில்லியம்ஸ்காஸ் என்ற அமெரிக்கர் எழுதிய 'நீல நிறமாய் இருப்பதைப் பற்றி' (On being blue) என்ற

''என் மகன் வேலை செஞ்சுக்கிட்டே படிக்கிறான்.''

''பேஷ்! எங்கே வேலை! என்ன படிக்கிறான்?''

''ஆல் இண்டியா ரேடியோவில் வேலை. அதில் நியூஸ் படிக்கிறான்.''

மு. செல்லபாண்டியன்



ஹேண்ட்லூம் ஹவுஸ் ஆடை உடுத்தி கோல மயிலெனத் திகழுங்கள்!


ஹேண்ட்லூம் ஹவுஸ், தரமான துணிகளை மட்டுமே பல ரகங்களில் உங்களுக்காகத் தேர்ந்தெடுத்து அளிக்கிறது.

எனவே காஞ்சீபுரம், பனாரஸ், பெங்கால், போச்சம்பள்ளி, காத்வால், கோயம்புத்தூர் ஆகிய இடங்களின் மிகச் சிறந்த புடவைகளை உங்களுக்குக் கிடைக்கின்றன.

பிரத்யேகமான ரெடிமேட் ஆடைகள், படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள், குழந்தைகளுக்கான ஆடைகளும் கூட!

செப்டம்பர் 26 முதல் எல்லா வகைகளுக்கும்

10% தள்ளுபடி உண்டு.





ஹேண்ட்லூம் ஹவுஸ்

9, ரத்தன் பஜார்
சென்னை 600 003

● ஞாயிறும் திறந்திருக்கும்

ADWAVE/HH/1128

புத்தகத்திலிருந்து சில கருத்துக்கள் எடுத்துப் போடப்பட்டிருக்கின்றன. அதைப் படித்தாயா?'' என்று கிருஷ்ணன் கேட்டான்.

''இல்லையே. அவர் என்ன சொல்கிறார்?'' என்று சியாமளி கேட்டாள்.

''நீல வர்ணம்தான் இன உணர்ச்சியை எடுத்துக் காட்டும் வர்ணம். எழுத்து நடையிலேயே 'நீல நடை' என்றிருக்கிறதாம்.'' டி. எச். லாரன்ஸ், ஜேம்ஸ் ஜாயிஸ் முதலியவர்கள் எழுதியுள்ளவை நீல நடையாம். இன சம்பந்தமான நிர்வாணத் திரைப் படங்களுக்கு நீல ஃபிலிம்ஸ் (Blue Films) என்று அதனால்தான் பெயர் வந்ததாம்...''

''டெல்லியில் பெரிய மனிதர்களுக்கும் தலைவர்களுக்கும் ரகசியமாகத் திரையில் போட்டுக் காண்பிக்கப்படுகிறது என்று சொல்கிறார்களே அந்தப் படம்தானே?'' என்றாள்.

இப்படியே நீல வர்ணத்தின் அருமை, பெருமைகளைப் பற்றிப் பேசிக் கொண்டே போனார்கள்.

மறு நாள் காலை!

சியாமளி தலைமாட்டில் வைத்துக்கொண்டிருந்த கடிகாரத்தில் அலாரம் மணி அடித்தது.

''மணி ஆறரை ஆகிவிட்டதே! அம்மா கவலைப்பட்டுக் கொண்டிருப்பாளே நான் போகிறேன்'' என்று சியாமளி கூறிக் கொண்டே எழுந்து மாடிப் படிகளில் இறங்கினாள். இறங்கும்போதே ''உவ்வா!... உவ்வா'' என்று குரல் கொடுத்துக்கொண்டே இறங்கிச் சென்றாள்.

கீழே நின்றிருந்த மங்களம், ஓக்காளச் சத்தத்தைக் கேட்டு முகம் மலர்ந்தாள்.

''நல்லவேளை. இன்றைக்கும் ஓக்காளம் இருக்கு. இனிமேல் கவலையில்லை. நீ பிள்ளைத் தாச்சிதான்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கிருஷ்ணன் வந்தான்.

''உன் மருமகள் என்ன சொல்கிறாள்?'' என்று தன் தாயைக் கேட்டான்.

''இந்தக் காலத்துப் பெண். அவளுக்கு ஒன்றுமே தெரியவில்லை. நான்தான் அவளுக்காகச் சொல்லணும்! நல்ல கருநீலப் பழம் ஒன்று இருக்கு. தின்பதற்கு நன்றாக இருக்கும். அதை வாங்கிக் கொடு. மசக்கை, ஓக்காளம் சட்டென்று நிற்கும்'' என்றாள்.

''அது என்ன பழம்?'' என்று சியாமளி கேட்டாள்.

''நாகப்பழம்!''

''ஆமாம், ஆமாம். சரியாகப் பொறுக்கி எடுத்தீர்கள்!'' என்றாள் சியாமளி.

''அம்மா! சீக்கிரம் காப்பி கொடு!'' என்று கிருஷ்ணன் அவசரப்படுத்தினான்.

''ஏன்?''

''நான் வெளியில் போகணும்.''

''எதற்காக?''

''நாகப்பழம் வாங்கிக்கொண்டு வர.''

''அது புரட்டாசி மாதத்தில் இப்போது கிடைக்காதே!''

''கிராமங்களுக்கெல்லாம் போய் நாக மரங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்றான்.



ஓவியர் திரு. வினுவை விட்டுப் படம் வரையச் சொல்லலாம். காரணம்? சில வாரங்கள் முன்னர் நான் நுங்கம்பாக்கத்தில் அவர் வசிக்கும் பகுதிப் பக்கம் சென்றிருந்தபோது அவரைப் போய்ப்பார்த்தேன். அப்போது அவர் தாம் வரைந்துள்ள, (மிகவும் பிரபல மாகிவிட்ட) ஆஞ்சநேயரின் திருவுருவப்படம் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார்.

எந்த விதமான குறைபாடுகளும் சொல்வதற்கின்றி, அற்புதயோகத்தை, சக்தி, நேர்மை எல்லா வற்றிற்கும் பிரதிநிதியாக விளங்கிவரும் அந்த ஆஞ்சநேயக் கடவுள் ஒருவரை மட்டுமே நான் வணங்கி வருபவன். அவரது திருவுருவத்துக்கு வினு நீல உருவம் தீட்டியிருந்தது என் மனதைக் கவர்ந்தது.

— குமரன்

''மரத்தின் மீதேறிப் பறித்து வருவீர்களல்லவா?'' என்று சியாமளி பரிகசித்தாள்.

''அவன் அப்படியும் பண்ணுவான்!'' என்றாள் மங்களம். பிறகு, ''அது வேண்டாம்டா. புடவைக்கு ஆர்டர் கொடுத்திருக்கே அது வரட்டும்'' என்றாள் பிள்ளையின் தாயார்.

பிறகு கணவனும், மனைவியும் தனித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, ''அப்புறம்?'' என்றாள் சியாமளி.

''சொல்லு.''

''உவா... உ...வ்வா...'' என்ற பதில் கிளம்பியது.

''ஜாம் சோடாவும் கையோடு வைத்துக்கொள்ளணும்'' என்றான் கிருஷ்ணன்.

அப்போது சன்னல் வழியே வானத்தைத் தற்செயலாகக் கவனித்த சியாமளி ''எனக்கு மசக்கை தீர ஒன்று செய்வீர்களா?'' என்றாள்.

''ஊம்!'' என்று கிருஷ்ணன் பலமாகத் தலையாட்டினான். வெளியில் புறப்படச் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான்.

''இதோ பாருங்கள்! வானத்தில் அசல் கருநீல மேகம், பக்கா இண்டிகோ கலர் கிளைனட் போகிறது. அதில் கொஞ்சம் பிடித்துக் கொண்டு வாருங்கள்!'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''ஏய், கிண்டல் செய்கிறாயா?'' என்று கிருஷ்ணன் கேட்டான்.

''எனக்கு முதலில் பாங்கில் ஓக்காளம் ஏற்பட்டது உண்மை. அப்புறம் அம்மாவைத் திருப்திப்படுத்துவதற்காகவே உவ்வா சப்தத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தேன்.'' என்று சியாமளி கூறினாள்.

''போக்கிரி!'' என்றான் கிருஷ்ணன்.



ஆரஞ்சு வண்ணத்தைக் கண்ணீரில் குழைத்து....

அனுராதா ரமணன்

பிரபு, மஞ்சள் வண்ணத்தை — டியூபி லிருந்து எடுத்து, வண்ணங்களைக் குழைத்துக் கொள்ளும் 'டிரே'யில் வைக்கிறான். அதனுடன் — சின்ன குங்குமப் பொட்டு போல சிவப்பு வண்ணத்தைக் கலந்து — ஒரு சொட்டு 'லின்ஸீட் ஆயில்' அதனுடன் சேர்த்து, குழைக்க .... அருமையான ஆரஞ்சு வண்ணம் ஜனிக்கிறது!

ஒன்றுடன் ஒன்று கலக்கும் போது மற்றொன்று பிறக்கிறது....

—இந்த நினைப்பு, அவனது இதழ் முனையில் சிரிப்பை விதைக்க — அவன், அந்த வண்ணக் கலவையை பிரஷ்ஷினால் குழைத்தபடி சற்று நேரம் ரசிக்கிறான்.

''என்ன! உனக்குள்ளேயே சிரிச்சுக்கறே?'' கட்டிலில் மல்லாக்கப் படுத்தபடி, சிகரெட் புகையைத் தனது நெஞ்சின் மேலேயே பரவ விட்டுக் கொண்டிருக்கும் குமார் கேட்கிறான்.

''நத்திங்''

''இல்லே... என்னமோ நினைச்சுண்டு சிரிக்கிறே.''

''சொன்னா உனக்குப் புரியாது. எனது நினைப்புகள், ரசனைகள் வேறு; உன்னோட சிந்தனைகள், தத்துவங்கள் வேறு...''

அவனுக்குப் பதிலளித்தபடியே, தான் பாதி வரைந்து வைத்திருக்கும் ஓவியத்தில் கண்களைப் பதிக்கிறான் பிரபு....

ஜன்னல் பக்கம் நிழலாடுகிறது.

''யாரு....?'' — அவன் திரும்பிப் பார்க்கிறான்.

அந்தப் பெண் அவசரமாக ஜன்னலை விட்டு நகருகிறாள். நகர்ந்த நேரத்தில் தாவணியின் முனை, ஜன்னல் ஆணியில் சிக்கிக் கொள்ள — அவள், மறைந்து நின்றபடியே, கைகளை மாத்திரம் நீட்டி மெதுவாகத் தாவணியை விடுவித்துக் கொள்கிறாள். மருதோன்றியின் சிகப்பு மாறாத விரல்கள்... நீண்ட மெல்லிய விரல் நுனிகள்....

'இது கூட ஆரஞ்சு நிறம்தான். மருதாணி கருஞ்சிவப்பா பற்றுவதை விட, இந்த மாதிரி இளம் சிவப்பா நிபத்தோட கொழுந்து மாதிரி பற்றினாத்தான் அழகா இருக்கு.'

பிரபு, விரல்களின் அழகை ரசித்துக் கொண்டே அறையின் வாசற் டக்கம்போய் எட்டிப் பார்ப்பதற்குள் அந்தப் பெண், அந்த வரிசையிலேயே இருந்த மற்றோர் அறைக்குள் நுழைந்து விட்டாள்.

பிரபு சென்னையில் பிரபலமான பத்திரிகைகளுக்கு ஓவியங்கள் வரையும் ஆர்டிஸ்ட். ஏதோ நல்லபடியாகப் பிழைப்பு நடக்கிறது. எப்பொழுதும் கறுப்பும் வெள்ளையுமாக 'வாஷ் டிராயிங்'கிலும், 'லைன் டிராயிங்'கிலும் பெண்களின் அழகான முகத்தையும், இடுப்பையும், மார்புப் பகுதியையும் பல கோணங்களில் வரைந்து தள்ளும் பிரபுவுக்கு எந்தெந்த எழுத்தாளரோ எழுதிய கதைகளில் 'செக்ஸி'யான வரிகளை மாத்திரம் பூதக்கண்ணாடியால் தேடி

வானவில்

வானவில் என்று பேர்
வடிவுகொண் டிலங்கி;
வானிலே எழிலைக் காட்டும்
வண்ணங்கள் பாரடியே!

காணருங் காட்சியிஃது
காமன் கை வண்ணமோடி?
நாணெனும் அணிதான் பூண்ட
நங்கையின் சிரிப்போ ஈது?

லீலைஇவ் உலகு என்பார்;
உலகமோர் கனவு என்பார்;
கனவுபோல் வாழ்க்கை என்பார்;
வாழ்க்கையோ வானவில்லாம்

வானவில் ஆனால் என்ன?
வந்துபின் போனால் என்ன?
போனதே மீளும் என்றால்,
புகழுக்கோர் எல்லையுண்டோ?

—தேவபாரதி

அதற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து வரைகிற பிரபுவுக்கு — நடுநடுவே கொஞ்சம் மாறுதல் தேவைப்படும்... அப்பொழுதெல்லாம், மதுரையில் இருக்கிற தனது பால்ய நண்பன் குமாருக்குக் கடிதம் போட்டு விட்டு வந்து விடுவான்... இருவருமாக கொடைக் கானலில், அதிக வாடகை வாங்காத சுமாரான இரண்டாந்தர லாட்ஜில் தங்குவார்கள்..

குமார் அறைக்குள் கட்டிலில் முடங்கிய படி, சிகரெட்டையும், விஸ்கியையும் கட்டிக் கொண்டு அழுவான்.

பிரபு இயற்கைக் காட்சிகளை, வண்ணங்களில் வடிப்பதில் கவனம் செலுத்துவான். காலை முதல் மாலை வரை மலைப் பகுதிகளில் சுற்றி விட்டு, குளிர் அதிகமானதும் அறைக்கு வந்து வரைந்து கொண்டிருப்பான்.

மதுரையில் ஒரு துணிக்கடை மானேஜராக இருக்கும் குமாருக்கு 'ஓஹோ' என்கிற வருமானம் இல்லையென்றாலும், மாதத்தில் இரண்டு பாட்டில் 'வாட் 69' 'பர்மிட்' வைத்து வாங்குகிற அளவுக்கு - இன்னும் எதெதற்கெல்லாமோ தாராளமாகச் செலவு செய்கிற அளவுக்கு—அவனது மாத வருமானம் கை கொடுக்கிறது.....

தினசரி, காலை முதல் இரவு வரையில் கடைக்குப் படையெடுக்கும் பெண்களையே பார்த்துக் கொண்டிருக்கும் குமாரின் கண்கள் ஏங்கிப் போனதில் ஆச்சரியமில்லை. பிரபுவைப் பொறுத்த வரையில் லாட்ஜ் அறை வாசம் பழகிப் போன ஒன்று. அது சென்னையானாலும் சரி, கொடைக்கானலானாலும் சரி... குடும்பம் என்று எதுவுமில்லாத அவனுக்குப் பத்தடிக்குப் பத்தடி நீள அகலமுள்ள அறையும், படம் வரைகிற சாதனங்களும் இருந்தால் போதுமானது....

மறு நாள் காலையே. அந்த ஜன்னல் அழகி யார் என்பதை விசாரித்து, தெரிந்துகொண்டு வந்து பிரபுவிடம் கொட்டி விட்டான் குமார்.

''பிரபு...: நேத்து ஜன்னல் கிட்ட வந்து நின்னு நம்மை எட்டிபார்த்துவிட்டுப்போச்சே ஒரு பொண்ணு, அது யாருன்னு கண்டு பிடிச்சுட்டேன்.''

''யாரு....''

''நீ பணம் கொடுத்து அவளை மாடலா உட்காரச் சொன்னாலும் உட்காருவா.. நான் பணம் கொடுத்து, அவளைக் கட்டிலில் படுத்துக்கச் சொன்னாலும் படுத்துப்பா...''

— அவன் பிரபுவை நோக்கிக் கண் சிமிட்டுகிறான்.

பிரபுவுக்கு, அவனது பதில் கசக்கிறது. பெண்களை அவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் மதிப்பவன் அவன். ஏதோ கவர்ச்சியாகப் படம் வரைகிறானே தவிர மனசில் தவறு ஓவியங்களின் பாதிப்பு ஏதுமின்றிச் சுத்தமானவன்....

வழக்கம் போல, மாலை ஆறு மணியளவில் அந்தப் பெண், ஜன்னல் வழியாக எட்டிப்பார்க்கும் போது—குமார் அவளை உள்ளே வரும்படி அழைக்கிறான்.

''உன் பேரு என்ன....''

''சந்தியா....''

வீணையை ஒரு தரம் மீட்டினாற் போன்ற குரல். வரைந்து கொண்டிருந்த பிரபுவைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறது....

ஒருகணம், அவளது அழகை அருகில் நின்று பார்க்கும் போது — திணறிப் போகிறான் அவன்.

இவளைப் பெற்றவள் உண்மையில் சிறந்த ரசிகையாக இருக்க வேண்டும்.. இவளுக்குப் பொருத்தமான பெயரைத்தான் வைத்திருக்கிறாள்.. சந்தியா இவளது முகம், வானத்தில் தேரோட்டம் முடிந்து வீடு திரும்பும் சந்தியா காலத்து சூரியன் போல் கண்ணை உறுத்தாத இளம் சிவப்பில், நேற்று



பிரபு குழைத்த ஆரஞ்சு வண்ணத்தை நீளப் பூட்ட......

''ரொம்ப நல்லா வரைடறீங்க. அதான் தினமும் எவ்வளவு தூரம் வரைஞ்சிருக் கீங்கன்னு ஜன்னல் வழியா எட்டி. பார்ப் பேன். எனக்குக் கூட இது மாதிரி படம் வரையணும்னு ரொம்ப ஆசை. கத்துக்கத் தான் வழியில்லே....''

அவளது குரலில் தாபம் இழைகிறது. பெயிண்ட் டியூபையும், பிரஷையும் கைகளால் தொட்டுப் பார்க்கிறாள்..... சின்ன குழந்தை மத்தாப்புப் பெட்டியைத் தடவிப் பார்ப்பது போல பென்சில்களை அடுக்கி வைத்திருக்கும் பெட்டியைத் தடவிப் பார்க்கிறாள்.

இவளுக்கு, மிஞ்சி மிஞ்சிப் போனால் பதி னெட்டு வயசிருக்குமா?.... அவ்வளவுதான் இருக்கும். இங்கே, தினமும் பொழுது அந்த மீத்தால் லாட்ஜை வட்டமிட்டுக் கொண்டு போலீசுக்குப் பயந்து.... சீ, இது என்ன வாழ்க்கை. அதுவும் இந்தச் சின்னக் குழந் தைக்குப் போய்.....

''நீங்க இங்கே இருக்கிற வரைக்கும், நான் தினமும் வந்து நீங்க படம் வரையற தைப் பார்க்கலாமா சார்?''

''ஓ. தாராளமா வா. எப்போ வேணு மானாலும் வா....'' பிரபுவை முந்திக் கொண்டு குமார் பதிலளிக்கிறான்.

அவள் சிரிக்கிறாள். கன்னங்களில் ஆரத்தி கரைத்தாற் போல மஞ்சள் கலந்த இளஞ் சிவப்பு....

'இந்தச் சிவப்பை என்னோட பிரஷ்ஷிலே கொண்டு வர முடியுமோ...' — பிரபு நினைக்கிறான்.

'இந்தக் கன்னத்தை ஆப்பிள் கடிக்கிற மாதிரி கடித்தால் என்ன...' — இது குமாரின் சிந்தனை. இத்தனை நேரம் பிரபு மாத்திரம் இல்லாமல் இருந்தால் குமார் இப்படி அவளிடம் சாவகாசமாகக் கதை பேசிக் கொண்டிருக்க மாட்டான்.

அன்று பிரபு சந்தியாவிடம் சொல்கிறான்:

''சந்தியா, நாளேலேயிருந்து உனக்குப் படம் வரையச் சொல்லித் தரப் போறேன். இங்கே இருக்கிற வரைக்கும் என் கிட்டே நேரிடை பாடத்தைக் கத்துக்கோ. அதுக்கு அப்புறமா என்னோட அட்ரஸ் கொடுத்திட் டுப் போறேன்... நீயும் உன் அட்ரஸைக் கொடு... தபால் மூலமா உனக்குக் கத்துத் தரேன்....''

புதிய வரி

"பிறருடைய பழிப்புரைகளைத் தவிர்ப்பதுதான்
அறவழியில் நிற்பதற்காக
நாம் கட்டும் வரி (TAX) ஆகும்"

— "மு.வ.வின் கடிதங்கள்"
நூலிலிருந்து
செ. தேனப்பன்

''நிஜம்மாவா.'' — அவள் கண்கள் அகல விரிகின்றன.

''இதுக்கு நிறைய செலவாகுமே. நான் தொழில் செஞ்சு சம்பாதிக்கறது என்னோட பெரிய குடும்பத்துக்கே போத மாட்டேங் குதே....'' —அவளது தயக்கமான வார்த்தை களை இடைமறிக்கிறான் அவன்.

''பரவாயில்லே. இத்தனை ஆசை இருக்கிற உனக்கு என் செலவிலேயே சொல்லித் தரேன். நீ காசு தர வேண்டாம்.. ஆனால் ஒரு சின்ன கண்டிஷன். என் கிட்ட பொறுமையா ஒரு வருஷம் பாடம் கத்துண்டு ஓவியப் பரீட்சை எழுதி பாஸ் பண்ணினதும் இந்த மாதிரி லாட்ஜுல அலையற அசிங்கமான தொழிலை விட்டுடணும். உனக்கு நல்ல வேலையா நானே வாங்கித் தரேன்... கௌரவமான ஒரு தொழில் நடத்தணும் நீ.''

—பிரபு தீர்மானமாகப் பேசுகிறான். அவ ளுக்கு அவமானத்தில் உடம்பே குன்றுகிறது.

அடுத்தநாள் முதல் அவள், 'அவனிடம் ஓவியம் பயிலத் தொடங்குகிறாள். பகல் வேளைகள் மனதுக்குப் பிடித்த கலையைப் பயிலுவதில் நேரம் சிட்டாய்ப் பறந்து விடும். மாலை ஆறு மணிக்கு மேல் தன் தொழிலைக் கவனிக்கச் செல்லுவாள். குமார்தான் நடு வில் அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தான். அது அவனுடைய பிறவிக் குணம். அதை மாற்ற ஆண்டவனே வந்தாலும் முடியாது தான்!

''நாளைக்குச் சாயந்திரம் ஊருக்குப் போறதா சொன்னீங்களே. அப்புறம் எப்ப சார் பார்க்கலாம்?'' — அன்று காலை வந்ததும் வராததுமாக சந்தியாவின் முதல் கேள்வி இதுதான்.

பிரபு, அவள் கேள்விக்குப் பதில் சொல்லா மல் அவளது மேலாக்கின் தலைப்புப் பகுதி யையே பார்க்கிறான்...

''முந்தானை கொள்ளாம என்னத்தைக் கட்டிட்டு வந்திருக்கே சந்தியா..?''

அவள் வெட்கத்துடன், தலைப்பில் சுமந்து வந்த கமலா ஆரஞ்சுப் பழங்களை, அவன் முன்னால் மேஜையில் கொட்டுகிறாள்...

ஒவ்வொன்றும் பெரிசு பெரிசாய்.. பொன் னிறத்தில், சந்தியாவின் கன்னத்தைப் போல....

''எங்க வீட்டுத்தோட்டத்திலே பழுத்தது சார்...'' — அவள், உருண்டு ஓடுகிற பழங் களை ஒன்று சேர்த்து வைக்க —

பிரபு, அவைகளை மேஜையின் மீது அழ காக ஒரு தட்டில் அடுக்கி வைத்து, ஒரு மெழுகு வர்த்தியையும் கொளுத்தி அதற்கான ஸ்டாண்டில் பொருத்தி வைக்கிறான்.

''இதெல்லாம் எதுக்குங்க...?''

''சந்தியா இத்தனை நாள் வெறும் பேப் பர்லே பென்சிலால் வரைஞ்ச நீ இன் னிக்கு இந்த மாடலை அப்படியே பெயின் டிங்கா வரைஞ்சு காண்பிக்கணும்...''

அவளது முகத்தில் சந்தோஷ வெள்ளம் கரை கடந்து பொங்குகிறது.

அவன் மென்முறுவலுடன் அவளது முக பாவத்தை ரசித்துக் கொண்டே வண் ணங்களைப் பற்றி விளக்குகிறான்.

சீரான திட்டங்கள்... சிறப்பான முடிவுகள் !!

திட்டமிட்ட சேமிப்பே
நிலையான அதிக வருவாய்க்கு
அடிப்படை!

பணத்தைப் பெருக்குவது திறமையான கலை. நீங்கள் சேமிக்கும் பணத்திற்குத் தகுந்த அளவு லாபமும் கிடைக்க வேண்டும்.

கரூர் வைஸ்யா பாங்கின் சேமிப்புக் கணக்குகளில் உங்கள் பணத்தை முதலீடு செய்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். மேலும், தங்களது சேமிப்பிற்கு அதிகமான வருவாயையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்களின் வளமான எதிர்காலத்திற்காகவே நாங்கள் திட்டமிடுகிறோம்.

எங்களின் தனிச்சிறப்பு வாய்ந்த முதலீட்டுத் திட்டங்கள் —

- **திருமகள் திருமணத் திட்டம்.**
- **தேனீ சேமிப்புத் திட்டம்.**
- **ஜம்போ சேமிப்புத் திட்டம்.**
- **சூர்யோதயா சேமிப்புத் திட்டம்.**




PA/KVB/104

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கரூர்-639 001.

கே.வி. ராகவாச்சாரி
சேர்மன்



திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

திருப்பதியிலும் திருப்பதியைச் சுற்றிலும் உள்ள திருத்தலங்கள்

ஏழுமலையானைத் தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் ஒரு முக்கியமான செய்தியை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் அறிவிக்க ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். திருமலையிலுள்ள வெங்கடேசப் பெருமான் திருக்கோயிலைத் தவிரத் திருப்பதியிலும், அதைச் சுற்றிலும் பல புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ளன. திருமலையைப் போலப் பிரபலமாகா விட்டாலும் புனிதத்தில் திருமலைக்கு இணையான தலங்கள் இவை. இத்தகைய தலங்கள் என்னென்ன?

ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி கோயில், ஸ்ரீ கபிலேஸ்வரஸ்வாமி கோயில் — இவை திருப்பதியிலேயே உள்ளன. திருப்பதியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிலிருப்பது திருச்சானூர். இங்கு ஸ்ரீ பத்மாவதித் தாயாரின் திருக்கோயில் உள்ளது. திருப்பதி வெங்கடேசப் பெருமானைத் தரிசிக்க வருபவர்களுக்குப் பலன் கைகூடி வரவேண்டுமானால் திருச்சானூரிலுள்ள பத்மாவதித் தாயாரையும் தரிசனம் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. நாராயணவனத்திலும் மங்காபுரத்திலுமுள்ள ஸ்ரீ கல்யாண வெங்கடேஸ்வர ஸ்வாமி கோயில், நாகலாபுரத்திலுள்ள ஸ்ரீ வேத நாராயணஸ்வாமி கோயில் ஆகியவை புராதனப் புகழ் பெற்ற புண்ணியபதிகள்.

மேற்கூறிய இத்தலங்களெல்லாம் திருப்பதியை அடுத்து உள்ளவை. விரைவாகவும் சுலபமாகவும் ரஸ்தா மார்க்கமாகச் செல்ல வசதி படைத்தவை. தனியார் மற்றும் அரசாங்கப் பேருந்துகள் இத்தலங்களுக்குப் போக அடிக்கடி கிடைக்கின்றன. பக்தர்கள் திருப்பதியில் இரண்டொரு நாட்கள் தங்கி இருந்தவாறே இத்தலங்களைத் தரிசனம் செய்து மகிழலாம்.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

''சந்தியா, நீலம், மஞ்சள், சிவப்பு —இந்த மூணு கலரும் ஆதார வண்ணங்கள். அதாவது 'பிரைமரி கலர்ஸ்'னு சொல்லுவாங்க. மஞ்சளும், நீலமும் கலந்தால் பச்சை; சிவப்பும் மஞ்சளும் கலந்தால் ஆரஞ்சு...''

அவள் மும்முரமாக அவன் சொல்வதைக் கவனிக்கிறாள்.

''முதல்லே எதிரே நான் அமைத்திருக்கிற மாடலே, ஸ்கெச் எடு. தைரியமா உன் இஷ்டப்படி பெயிண்ட் பண்ணு. இன்னிக்கு கொஞ்சம் வெய்யில் வந்திருக்கு. நான் ஸீனரியை முடிச்சுண்டு வந்துடறேன்... குமார், நீயும் என்னோட வா.....''

பிரபு தனக்கு வேண்டிய ஓவிய உபகரணங்களை எடுத்துக் கொண்டு கிளம்புகிறான்.

வேண்டா வெறுப்பாக அவனுடன் கிளம்புகிறான் குமார்.

பிரபு, ஓர் இயற்கைக் காட்சியைப் படமாக வரைந்து கொண்டிருக்கும் போது குமாருக்கு மதுரையில் பழக்கமான மனிதர் ஒருவர் எதிர்ப்பட அவன் அவருடன் பேசிவிட்டு வருவதாகச் சொல்லிக் கிளம்புகிறான்.

பிரபு, லாட்ஜுக்குத் திரும்பும் பொழுது இருட்டத்தொடங்கி விட்டது. லாட்ஜ்மானேஜர் அறைச் சாவியை எடுத்து அவனிடம் நீட்டியபடி எரிந்து விழுகிறார்.

''உங்க ஃபிரண்டு ஆளும், அந்த சந்தியாப் பொண்ணும் போலீஸ் ரெய்டும் போது மாட்டிக்கிட்டாங்க சார். எங்க லாட்ஜு முதலாளியைக் கூட ஸ்டேஷனுக்கு இட்டுக்கிட்டுப் போயிட்டாங்க போலீசுக்காரங்க. உங்களை மாதிரி இருக்கிறவங்களாலே எங்க லாட்ஜுக்குக் கெட்ட பேரு....''

என்னமோ இது நாள் வரையில் புனிதமாக இருந்த லாட்ஜ் அறை, இந்த சம்பவத்தால்தான் களங்கப் பட்டு விட்டது போல அவன் முகம் கடுக்க —

பிரபு அதிர்ந்து போய் நின்று விட்டான். சாவியை வாங்கிக் கொண்டு மாடியிலுள்ள தனது அறையை நோக்கி நகர பின்னுலேயே குமாரின் விசில் சத்தம்....!

அறைக் கதவைத் திறந்ததும், களைத்துப் போனவன் போல் கட்டிலில் வந்து விழுகிறான் குமார். நண்பன் கேட்கும் முன்பே நடந்ததை விவரிக்கிறான் அவன்.

''படுபாவிப் பசங்கடா இந்தப் போலீஸ். ரூமுக்குள்ளே நுழைஞ்சு கதவைச் சாத்திக்கிட்ட அஞ்சாவது நிமிஷத்திலேயே 'கப்'புனு வளைச்சுப்பிடிச்சுட்டாங்க... எந்தப் பக்கமும் தப்பிக்க வழியில்லாம போயிடுத்து.''

பிரபு, கண்களில் நீர் மல்க அவனையே உறுத்துப் பார்க்கிறான்.

''என்ன ஏண்டா முறைக்கறே. நான் சந்தியாவோட ஒரு நாளாவது சந்தோஷமா இருக்கணும்னுதான் ரூமுக்குள்ளே நுழைஞ்சேன். அவளுக்கும் ரெண்டு நாளா தொழில் மந்தம். நான் பணம் கொடுத்தா, அவ வீட்டு உலே கொதிக்கும்... வெறுமனே வரைஞ்சுகிட்டு உட்கார்ந்திருந்தா சோறு கிடைக்குமா.....ம்... அவளுக்கும் அதிருஷ்டம் இல்லே. விட்டுத் தள்ளு. போலீஸ் இன்ஸ்பெக்டர் நம்ம ஆளுதான். இவளுக்குக் கொடுக்கறதுக்காக வச்சிருந்த பணத்தை அவரு கையில அழுத்திட்டு கழண்டு வந்துட்டேன். லாட்ஜ் முதலாளிக்கும் இன்ஸ்பெக்டர் பழக்கமானவர் தான். ஏதோ வாய்க்கரிசி போட்டுட்டு வந்துட்டாரு....''

''அப்ப சந்தியா?''

''கொஞ்ச நாளு உள்ளே இருந்துட்டு வருவா. அவளுக்கெல்லாம் இது மாதிரி உள்ளே போயிட்டு வரது பழக்கம்... ஆனா, இந்தத் தடவை இவளை மாதிரி ஏழெட்டுப் பொண்ணுங்க மாட்டிக்கிட்டாங்க. அத்தனை பேரையும் இப்போதைக்கு விட மாட்டாங்கன்னு நினைக்கிறேன். சரி மூஞ்சியைத் தூக்கி வச்சுக்காதே.. லைஃப்லே இதெல்லாம் சகஜம் தான். அந்தக் கமலா ஆரஞ்சை எடு. சந்தியா தான் கிடைக்கலே பழத்தையாவது தின்னு வைக்கறேன்.''

குமார், சர்வ அலட்சியமாகக் கூறிக் கொண்டே, மேஜையில் மாடலுக்காக வைத்திருந்த ஆரஞ்சு பழங்களில் நாலைந்தை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு, சாவகாசமாகப் பழத்தை உரித்துச் சுளைகளை வாயில் திணித்துக் கொள்கிறான்.

சந்தியா அற்புதமாக வரைந்து பாதி வண்ணப்பூச்சுடன் நிறுத்தியிருந்த ஓவியத்தையும், கலர் பேலட்டில் அவள் குழைத்து வைத்திருந்த ஆரஞ்சு வண்ணத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறான் பிரபு.

ஆரஞ்சு வண்ணம் . அவளது அருமை மாணவி, மஞ்சளையும் சிவப்பையும் அளவாக எடுத்துக் கலந்து வைத்த ஆரஞ்சு வண்ணம். அவளுடைய செந்தூரக் கன்னத்துக்கு உதாரணமாய் விளங்கிய ஆரஞ்சு வண்ணம் இப்பொழுது பிரபுவின் நெஞ்சில் பட்ட ரணமாய் வலிக்கிறது. வழி தவறிய பெண்களைத் திருத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்காமல் மீண்டும் மீண்டும் குழிக்குள்ளேயே அழுத்தும் — சீழும் ரத்தமுமாய்ப் புரையோடிப் போன குமார் போன்ற இளைஞர்களின் இதயத்துக்கு எடுத்துக் காட்டாய் அவ்வண்ணம் அவன் கண்ணெதிரே சிரிக்கிறது....



எனது சிறுகதைக்கு 'மாருதி' அவர்களை ஓவியம் வரையச் சொல்லுங்கள். காரணம் - வெறும் கவர்ச்சி மாத்திரமில்லாமல் - கதா பாத்திரங்களை உணர்ச்சி ததும்ப வரைவதில் அவர் வல்லவர். அவரது ஓவியங்களில்-குறிப்பாக Wash drawing-ல் Light and Shadow பிரமாதமாக இருக்கும். முக்கியமான ஒன்று-அவர் வரைகிற ஆண்களின் உருவத்தில் துளிக் கூடப் பெண்மையின் சாயல் இருக்காது. கம்பீரமான ஆண் பிள்ளைத்தனம் முகத்தில் ஒளிவிடும். அது போல அவர் வரையும் பெண்களின் கண்கள்... ஓ.. அவை ஓராயிரம் கதைகளைக் கூறும்! இவைகளை நான் மிகவும் ரசிப்பேன். — அனுராதா ரமணன்

விமோசன வெள்ளை

ஆர். சூடாமணி

பேரொளிக் கடலாக ஒரு வெண்மைப் பிரவாகம். பாய்ந்து பாய்ந்து எங்கு ஓடுகிறது? முதலுமில்லை, முடிவுமில்லை. திக்கு திசை புரியவில்லை. ஆனால் புரிய வேண்டிய அவசியத்தைத் தாண்டி உணர்வெல்லாம் ஆனந்தம் முட்டி மோதுகிறது. தானே ஆனந்த சத்தாக மாறி அந்த வெள்ளத்துடன் கலந்து பாய்கின்ற சிலிர்ப்பு நிறைகிறது. இது என்ன என்று புரியா விட்டாலும் இதுதான் எல்லாம் என்பது புரிகிறது. இதற்காகவே பிறவி எடுத்தாற்போல் தோன்றுகிறது. பொங்கிப் பாய்ந்து வெள்ளமாய்ப் பெருகிடும் இந்த இன்பத்தின் நிறம் வெள்ளை. அலைபொங்கும் பளீர் பளீரென்று கதிர்வீசும் வெண்கடலில் அவரையும் இழுத்துக்கொண்டு இந்தப் பிரவாகம் மேலே மேலே பாய்ந்து ஓடுகிறது. மேலே மேலே மேலே ....

விழித்துக் கொண்டார்....

மீண்டும் அதே கனவா!

மூடிய பேழைக்குள் பத்திரமாய் இருக்கும் பொக்கிஷம் போல், விழிப்பு வந்தபிறகும் இமைகளுள் கனவுக் காட்சியின் பொலிவு கலையவில்லை. காட்சிதானா அது? அநுபவம். இடைவெளியின்றி அணு அணுவாய் உயிரை நிறைத்து விட்ட உணர்வு. விழித்த பின்னும் கனவின் ஆனந்தம் ஒரு ஸ்தூலப் பொருளாக அவருடன் கூடவே இருந்தது.

முன்பெல்லாம் எப்போதாவதுதான் அந்தக் கனவு வரும். இப்போது அடிக்கடி வருகிறது. வெள்ளைப் பிரவாகம். இன்பத்தின் சாரம். அவர் கனவுவிளக்கப் புத்தகங்களைத் தேடவில்லை. மனத்தத்துவ நூல்களை ஆராயவில்லை. அவரைப் பொறுத்த வரையில் அந்தக் கனவின் பொருள் தமக்குத் தெரிந்ததாகவே நிச்சயமாய் நம்பினார்.

பூபதி படுக்கையை விட்டு எழுந்தார்.


எட்டு மணிக்கு ஸ்நானம் முடித்து நெற்றியில் திருநீறு பூசிப் பூஜையறையில் கைகூப்பி நின்றிருந்தார் அவர். தெய்வப் படிமங்களில் மைய இடத்தில் கலைமகள் வீற்றிருந்தாள். கலைமகள் அவருடைய இஷ்ட தெய்வம். அவர் ஒரு கவிஞர்.

சிறு பிராயம் முதலே கலைமகள் துதி அவர் நாவில் ஊறிய தேன். 'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்....''

வெள்ளை.

அந்த வெண்ணொளிப் பெருக்கம்.

சாப்பாட்டை முடித்த பின் உடைமாற்றிக் கொண்டு ஆபீசுக்குப் போக மனைவியிடம் விடைபெற உள்பக்கம் வந்தவரின் கண்ணில் அவர் சாப்பிட்ட தட்டைக் கழுவ எடுத்துக் கொண்டு போகும் வடிவம் தென்பட்டது. அந்தச் சிறுமிக்கு ஏழு வயது. வள்ளி என்று பெயர். குச்சி குச்சியாய்க் கைகால்கள்.



பூபதிக்கு ஆத்திரம் வந்தது. ''இது என்ன கண்ணராவி சைல்ட் லேபர். இந்தப்பெண்ணை அனுப்ப வேணும்னு அந்த அம்மாவுக்கு எத்தனை தரம் சொல்றது? இங்கே வேலைக்கு வச்சிருக்கிறது இவளையா அவளையா?'' என்று மனைவியிடம் கத்தினார்.

''கோவப்படாதீங்க. அஞ்சலையின் கைக் குழந்தைக்கு ஜுரமாம். ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போயிருக்கா, வர முடியலே...''

''வர முடியாமப் போனாலும் அரை நாள் லீவு போடறதுதானே? வள்ளியை எதுக்காக அனுப்பணும்? ஒரு நாள் அரை நாள் வேலைக்கு வராட்டி நாம சம்பளமா பிடிக்கப் போறோம்?''

''சம்பளம் பிடிக்காட்டி ஆயிடிச்சா? சோறு? வேலைக்குன்னு யாரையாச்சும் அனுப் பிறுத்தானே பாத்திரங்க தேய்க்கிறதுக்கு முந்தி அதிலிருக்கிற சாப்பாட்டை எடுத்துக்க முடியும்?'' அந்தம்மாள்மெல்லச் சிரித்தாள். ''கவிதை எழுதினால் மட்டும் போதாதுங்க?''

பூபதி தலைகவிழ்ந்து வெளியே வந்து விட்டார். ஆபீசை நோக்கிக் காரை யந்திரப் போக்கில் ஓட்டினார். மனம் சோர்ந்திருந் தது. பாவம், அஞ்சலை. ஐந்து குழந்தைகள் பிறந்த பின் புருஷன் விட்டு விட்டுப் போய் விட்டான். தானே உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள். இந்த வீட்டு வேலை தவிர, ஓர் ஆபீசில் நாலு பேருக்கு மதிய உணவை அவர்கள் வீடுகளிலிருந்து வாங்கிப் போய்க் கொடுத்துவிட்டு வரும் வேலை. மாலையில் ஒரு பள்ளிக்கூட காம்பவுண்டைத் துப்புரவு செய்யும் வேலை. நாள் முடிய அலைச்சல். ஏழே உட்காரத்தான் நேரமேது? அவள் வய தையே கணிக்க முடியாதபடி உழைப்பில் உருமாறி யிருந்தாள். முதல் இரண்டு குழந் தைகள் இறந்து விட்டனவாம். இந்த நோஞ் சான் வள்ளி மூன்றாவது. இவளுக்குக் கீழே இன்னும் இரண்டு நோஞ்சான்கள். பெரிசுக்குக் கண் பார்வை மங்கல். கடைசிக்கு மூன்று வயது ஆகியிருந்தும் நடக்க வர வில்லை. கால்கள் சூம்பினாற்போல் இருந்தன.

இப்படி ஒரு குடும்பம் பெருகியிருக்காவிட் டால் என்ன? தெருத் தெருவாய்ப் பிரசாரம் தென்பட வில்லையா? ஐந்து குழந்தைகளாம்! மூட ஜன்மங்கள்.

இந்தச் சோர்ந்த மனநிலை அலுவலகத்தில் பிற்பகல் ஓய்வு நேரத்தில் மாறியது. தொழில் முறை நண்பர் ஒருவர் வந்திருந்தார். வந்த வர் வேறு விஷயங்களைப் பேசிய பின், சமீபத் தில் ஓர் உயர்தர விமர்சனக் கட்டுரையில் பூபதியின் கவிதைத் திறனைப் பாராட்டி எழு தப்பட்டிருந்த வரிகளைக் குறிப்பிட்டு மகிழ்ந்த துடன், ''எங்க கல்சரல் க்ளப் வருஷாந்தர விழா லெக்சர்ல நீங்க அரவிந்தருடைய 'சாவித்திரி'யைப் பத்திப் பேசணும் பூபதி'' என்றார்.

''நீங்க ரொம்ப புகழுறீங்க. அரவிந்தர் எங்கே? நான் எங்கே....?''

''இருந்தாலும் நீங்க பேசணும். நான் இன்னிக்கு வந்ததே முக்கியமாய் இதை உங்க கிட்டே கேட்டுக்கத்தான்.''

மாலையில் வீடு திரும்பிய பிறகும் அந்தச் சந்தோஷ மனநிலை நீடித்தது. தம் அறையின் பிரத்தியேக புத்தக வரிசை யிலிருந்து 'சாவித்தி ரி'யை எடுத்து அங் கங்கே படித்துப் பார்த்தார்,

வண்ணப் பாலம்

சூரிய காந்தியின் பாலமடி — எழில்
சப்த நிறங்களின் கோலமடி!
பாரிலே விண்ணக ஜாலமடி — இதைப்
பார்க்கப் பரவசம் ஆகுதடி!

நாட்டுவோம் உள்ளத்தில் வானவில்லை-உடன்
கூட்டுவோம் கோமள வண்ணங்களை;
ஊட்டுவோம் ஆனந்த அன்புத்தேனை—உளம்
ஒன்றி இணைந்து நாம் வாழ்ந்திடுவோம்

—சந்தா





'சாவித்திரி'. அக் காவியத்தைப் படைத்த அரவிந்தர். ''வரப்போகும் ஒளியை நோக்கி உன் பார்வையைத் திருப்பு.'' ஒளி. ஒளி வெள்ளமாய் வெண்மை.

அந்தக் கனவு.

இலக்கிய ஈடுபாட்டினால் கலைவாணியிடம் பக்தி. அதன் தொடர்ச்சியாய்க் கலைவாணி உகந்த வெள்ளையில் தனியானதொரு மயக்கம் அப்படித்தான் தொடங்கியதா? விளக்கம் எதுவாயினும் வெள்ளை அவருடைய இஷ்ட நிறம் என்பது உண்மை. அதனால்தானே அவருடைய விமோசனமும் கடைசியில் வெண்மை உருவிலேயே வந்திருக்கிறது!

விமோசனம்தான். முக்திதான், அதில் என்ன சந்தேகம்? அந்தக் கனவின் பொருள் அவருக்குத் தெரியும். பல மதத்தினரான



ரகு: முந்தியெல்லாம் நண்பர்கள் யாரைப் பார்த்தாலும் நாலோன்று கை குலுக்குவே. இப்ப ஏன் அது மாதிரி யெல்லாம் செய்ய மாட்டேங்கறே?

ரவி: பத்து நாளைக்கு முன்னாலே என் கையிலே போட்டிருந்த இரண்டு பவுன் மோதிரத்தைக் காணோம்! -ஆர். கோபாலகிருஷ்ணன்

அனேக ஞானிகள் தம் ஆத்மா பரம்பொருளுடன் ஐக்கியமாகும் அநுபவத்தை ஒரு பெரும் ஒளிப் பிரவாகம் தம்மை ஆட்கொள்ளும் வடிவமாகவே கண்டிருக்கிறார்கள் என்றல்லவா 'மிஸ்டிக்' அநுபவ வரலாறுகள் கூறுகின்றன? அந்த ஐக்கிய நிலையில் ஆனந்தம் ஒன்றுதானே எல்லாமாய் இருக்கிறது! அவர் கனவில் அநுபவித்ததும் வெண்மையான ஒளிப் பொழிவும் அதன் சொல்லொணா இன்பமும் தானே! ஆகவே, அந்த மகான்களின் உச்ச ஆன்ம நிலையைத்தான் தாமும் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதில் அவருக்குச் சிறிதும் ஐயமில்லை. ஒரு வேறுபாடு என்னவென்றால், அவர்கள் விழிப்பு நிலையிலேயே அந்த அநுபவத்தில் கலக்கிறார்கள், அவருக்கோ அது இரவில் தூங்கும் போது ஒரு கனவாகத்தான் எய்து கிறது. பரவாயில்லை, இது முக்தியின் தொடக்கமே.

பூபதி கண்களை நிமிர்த்தி எதிரே சுவரைப் பார்த்தார். அரவிந்தர், ரமணர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர். இன்னொரு புறம் புத்தர், வேதமத ஸ்தாபகர்கள், சில தாய்நாட்டு, மேல்நாட்டுக் கவிஞர்கள். கங்கையின் வெண் பிரவாகத்தில் மிதக்கும் மலர்களைப் போல் சுவர் வெள்ளையில் அந்தப் படங்கள்.

அவர் திருப்தியாய்ப் பெருமூச்சு விட்டார். மாலை நேரம் முற்றி விட்டது. சீக்கிரம் இரவு வராதா? உறங்க வேண்டும். அதில் மீண்டும் அக் கனவைப் பிடிக்க வேண்டும்... அந்த இறை வெள்ளம்.

அவர் எழுந்து ஹாலுக்கு வந்தபோது வெளி வராந்தாவில் வள்ளி, அவளுடைய ஐந்து வயதுத் தம்பி, மூன்று வயதுத் தம்பி, மூவரும் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.

''என்னம்மா வள்ளி இந்த நேரத்தில் இங்கே? தம்பிங்க எப்ப வந்தாங்க? உங்கம்மா எங்கே?'' என்றார்.

''உள்ளே காய் நறுக்கிக்கிட்டிருக்காங்க. பால்காரரு வந்ததும் சொல்லணுமுன்னு என்னை ஆட்டுக்காரம்மா இங்கே வாசப் பக்கமாய் இருக்கச் சொன்னாங்க'' என்ற வள்ளி எழுந்து நின்று, தரையில் கால்கள் துவள உட்கார்ந்திருந்த சின்னத் தம்பியைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள். ஏழு வயதுக் குழந்தையின் ஒக்கலில் மூன்று வயதுக் குழந்தை. தலைக்கு மேல் தலையாக இரு தலைகள் படைத்த ஏதோ அமானுஷ்யப் பிராணி போல் ஒரு தோற்றம். தம்பியின் கனத்தினால் வள்ளி எதிர்ப் புறமாய்க் கவிழ்ந்திருந்தாள். கரிய முகத்தில் கடைவாய்ப் புண்ணின் வெள்ளை. இந்த வெள்ளை ஒரு நெருப்பா? வயிற்றில் ஏதோ சங்கடத்துடன் அவர் அந்தக் காட்சியைக் காண இயலாமல் உள்ளே போனார். சாப்பாட்டு அறை ஓரமாக உட்கார்ந்து அஞ்சலை கறிகாய்கள் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

மறுநாள் விருந்தில் என்னென்ன படைக்கப் போகிறதென்று மனைவியை விசாரித்துக் கொண்டே பூபதி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.


அறைக்கு வெளியே வள்ளி இரு தலைகளுடன் தோன்றினாள். ''அம்மா, பால்காரரு வந்திட்டாரு''.

''இதோ வரேன்.''

''பாலைச் சீக்கிரம் வாங்கி வந்துட்டு எனக்கு இன்னும் கொஞ்சம் பொரியல் போடு'' என்றார் பூபதி மனைவியிடம். அஞ்சம்மாள் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வாசற் பக்கம் விரைந்தாள்.

ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். ''ஐயையோ!'' என்ற கூவலும் எவர்சில்வர் தரையில் மோதும் சப்தமும் ஒன்றாய் எழுந்தன. பூபதி கையை உதறிக் கொண்டு ஹாலுக்கு வந்தார்.

''பாலை வாங்கிட்டு அவசரமாய் வந்தேனா? கைதவறிப் பாத்திரத்தை விட்டுட்டேன். ஒரு லிட்டர் பாலும் கொட்டிப் போச்சே! இனி இந்த நேரத்துக்கு மேலே



சிண்டிகேட் பாங்க்

வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின் நிம்மதியுடன் கூடிய அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை. மற்றும் மாதா மாதம் தொடர்ந்து ஒரு கணிசமான தொகை. உங்களுடைய 50-ம் வயது தொடக்கத்தில் வேலையில் இருந்து இன்னும் சில ஆண்டுகளில் ஓய்வு பெறும் நாளைப்பற்றி நீங்கள் நினைப்பது இயற்கை.

வாழ்க்கையில் பல பொறுப்புகளை திறம்பட செயலாற்றி, குழந்தைகளின் கல்வி, திருமணம் ஆகியவற்றை செவ்வனே நிறைவேற்றி தற்சமயம் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறீர்கள்.

ஓய்வு பெறும் காலத்தில் கிடைக்க விருக்கும் பிராவிடண்ட் நிதி, கிராசுவடி, ஆயுள் இன்சூரன்ஸ் மூலம் கிடைக்க விருக்கும் தொகையினை சிறந்த முறையில் முதலீடு செய்து, ஒரு கணிச மான தொகையை மாதந்தோறும் தொடர்ந்து பெறுவது எப்படி என்று நீங்கள் சிந்திக்கக் கூடும்.

வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின், உங்களுடைய மாத வருமானம் குன்றி, வாழ்க்கைத் தரத்தில் ஒரு இடைவெளி ஏற்படும். இப்பிரச்சனையைத் தவிர்த்து மாதந்தோறும் ஒரு நிலையான, கணிச மான வருமானம் பெற சிண்டிகேட் பாங்க் ஒரு சிறப்புத் திட்டத்தை வகுத்துள்ளது.

அருகாமையில் உள்ள எங்களுடைய கிளையை அணுகி, உங்களுடைய குறுகிய மற்றும் நீண்டகால பணப் பிரச்சனைகளை எங்களிடம் ஒப்படையுங்கள். அவற்றிற்கு எளிதான மற்றும் முறையான தீர்வுகாண ஆலோசனை கூறி சேவை புரிய காத் திருக்கின்றோம்.

குறிப்பிட்ட கால சேமிப்பு திட்டம்

10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும்
ரூ. 100 வீதம் முதலீடு செய்தால்
10 ஆண்டுகள் முடிவுற்றதும் வாழ்நாள்
முழுவதும் மாதம் தோறும் ரூ. 169-85
திரும்பக் கிடைக்கும் மேலும், அசலும்
வட்டியும் இணைந்து ரூ. 20557/-
உங்கள் கணக்கில் நிலைத்து இருக்கும்

ப்ரகதி ரொக்கப் பத்திரங்கள்

ஒரு சிறிய தொகையை குறிப்பிட்ட
காலத்திற்கு முதலீடு செய்தால்,
பெரிய முழுமையான தொகையைத்
திரும்பப் பெறலாம்.

mas SB 103 TAM

சிண்டிகேட் பாங்க்

உங்கள் முதுமைக்கால நண்பன்

எந்த டிப்போவில் பால் கிடைக்கும்? நாளைத் தயிருக்கு நான் என்ன பண்ணுவேன்?'' என்று அவர் மனைவி ஓலமிட்டுக் கொண்டிருந்தது அவர் காதுகளில் விழவில்லை.

அவர் பார்வை தரையில் நிலைத்திருந்தது. அங்கு ஒரு வெள்ளை நீண்டு படர்ந்திருந்தது. கலைமகளின் சேலை போல.

இமைப் பொழுதுக்கு மயக்கமாய் ஒரு பிரமை. குப்பென்று அந்த வெள்ளை விச்வரூபம் எடுக்க, புலன்கள் கழல.. இது அந்த ஆனந்த வெண்ணொளிப் பிரவாகமா? கனவில் மட்டுமே வந்து முகம் காட்டியிருந்த ஜோதி, விழிப்புச் சத்தியமாகவே கடைசியில் கைகூடி விட்டதா?

உடலெல்லாம் முள் குத்திப் பாயும் சிலிர்ப்பில் கண்களை ஒரு கணம் மூடித் திறந்தார்.

பால்.

வெள்ளை வெளேரென்ற ஒளிப் பொழிவு. பால்தான். கனவுக் காட்சியின் சிறிய, நிதர்சன வடிவம்.

அதன் அருகில் ... அந்த உருவங்கள்?

வள்ளி கீழே கொட்டி ஓடியிருந்த அந்தப் பாலையே பார்த்துக் கொண்டிருந்தாள். கண்களில் பிரம்மாண்டமான ஓர் ஏக்கம். அவ்வப்போது எதையோ குடிக்கும் பாவனையில் எச்சிலைக் கூட்டிக் கூட்டி விழுங்கிக் கொண்டிருந்தாள். அவள் இடுப்பில் பெரிய மண்டையும் சூம்பிய கால்களுமாய் மூன்று வயதுக் குழந்தை. அவள் பாவாடையைப் பிடித்துக் கொண்டு பார்வைத் தெளிவில்லாமல் இமைகளைக் கொட்டி விழிக்கும் ஐந்து வயதுப் பாலகன். அவன் கேட்டான்:


''என்னக்கா இது?''

வள்ளி இன்னும் கண்களைத் தரை மீதிருந்து பறிக்காமலேயே, ''பாலுடா. அதோ வெள்ளையா ஓடுதே. அதுதான் பாலு'' என்றாள்.

அந்தப் பாலை வெறிக்கும் மூன்று குழந்தைகள். அவர்களை வெறிக்கும் அவர்.

கடைவாய்ப் புண். கண்ணின் மங்கல். எலும்புப் பலவீனம்.

மின்னல் வீச்சாக அந்த விநாடியில் பூபதி தம் கனவை ஒரு புதிய அர்த்தத்தில் புரிந்து கொண்டார். விமோசனம் அளிக்கும் ஆனந்தமயமான வெண்மைப் பிரவாகத்துக்கு வேறொரு பொருத்தம், வேறொரு தாத்பரியம்.



மணியம் செல்வன்:

இந்த ஓவியரின் பாணியில் ஒரு தனி நளினமும் "grace" என்று சொல்லக் கூடிய ஒரு நேர்த்தியும் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. கவர்ச்சி இருந்தாலும் அளவு மீறுவதில்லை. இவர் கலையில் அழகுணர்ச்சியே முக்கியமாய் மனத்தில் பதிகிறது. இவர் சமீபத்தில் ஒரு பத்திரிகையில் குழந்தைகளை வரைந்திருந்த ஒரு சித்திரம் என்னை மிகவும் கவர்ந்தது. ஆர். சூடாமணி

அவர் அந்த வாடிய தளிர்களை நோக்கினார். வெண்மையில் வரும் விமோசனமும் ஆனந்தமும் யாருக்கு? கற்பனையில் அக்குழந்தைகள் மாறினர். சிரிக்கும் முகங்கள், சுடரும் விழிகள், ஓடி விளையாடும் வலுவான உடல்கள்.

பால் வெள்ளைப் பிரவாகமாய் நகைத்து அவர் இஷ்ட தெய்வம் கூறினாள்: இதுதான் ஞானம். இதுதான் யோகம். இதுதான் முக்தி. இதுதான் கவிதை, கடவுள், எல்லாம்.

அவருக்கு மறுபடியும் உடம்பு சிலிர்த்தது. கண்களில் நீர் மல்கியது. அந்தக் குழந்தைகளைப் பார்த்தார். ஆனந்தம் அவருக்கும் தான்!

அவர் வெகு தொலைவிலிருந்து மெல்லத் திரும்பி வந்தபோது அவர் மனைவி ''எக்ஸ்ட்ரா பாலெல்லாம் கொட்டிப் போச்சே!'' என்று இன்னும் புலம்பிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்துப் பூபதி நிதானமாய்ச் சொன்னார்: ''நாளையிலிருந்து இனி தினமே நாம் எக்ஸ்ட்ரா பால் வாங்கப் போறோம்.''

மகாராஷ்டிர காட்டிலாகா அதிகாரி பொறுப்பில் இருந்த ஒரு யானை கருத்தரித்தது. இருபத்தொரு மாதங்கள் அதற்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுத்து அதை வேலை செய்ய விடாமல் பத்திரமாகப் பாதுகாத்தார்கள். இறுதியில் அது கருத்தரிக்கவில்லை என்ற உண்மை தெரிந்தது. ஆனால் எக்கச்சக்கமாகச் செலவாகியிருக்கிறதே? மேலதிகாரிகள் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்தெடுத்தார்கள். காட்டிலாகா அதிகாரி சொன்ன எந்தக் காரணத்தையும் அவர்கள் ஏற்கத் தயாராக இல்லை. முடிவில் வெறுப்புடன் அந்த அதிகாரி கத்தினார்: ''இதோ பாருங்கள், யானை கருத்தரிக்காமல் இருந்ததற்கு நானோ, என்னுடன் வேலை பார்ப்பவர்களோ எந்த விதத்திலும் பொறுப்பானவர்கள் அல்ல!''

பேட்ரியட் - ராமு




கேளுங்கள்!

மணிவண்ணன், ராணிப்பேட்டை

✖ கே. ரோ மொட்டை அடித்துக் கொள்வது எதனால்?

பதில்: என்னிடம் வந்து மொட்டை அடித்துக்கொள்வது போல் கேட்கிறீர்களே? தங்களது அறிவுபூர்வமான கேள்விக்குப் பாராட்டுக்கள்.



என். சந்திரசேகரன், சங்கரன் கோவில்

✖ கே. புனைபெயரில் எழுதும் கோழைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: புனைபெயரில் எழுதுவது கோழைத்தனம் என்று யார் சொன்னது? ஒளிந்து கொண்டு எழுதவில்லையே. தங்களுக்கு ஒரு புதுப் பெயரைச் சூடிக்கொண்டு எழுதுகிறார்கள். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களில் பலர் புனைபெயரில் எழுதியிருப்பது தெரியாதா? ஓ. ஹென்றி, மார்க் ட்வெய்ன், வால்டேர், கல்கி, தேவன், சாவி, கடுகு ஆகியவர்கள் கோழைகளா? புனைபெயர் அகராதி என்றே ஒரு பெரிய புத்தகம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அசோக் ரவி, குத்தாலம்


✖ கே. கடவுள் இருக்கிறாரா இல்லையா! (எங்களுக்காகக் கூறவேண்டாம். உங்களைப் பொறுத்த வரை)

ப: இருக்கிறார். (உங்களுக்காகவும், எனக்காகவும் கூறுகிறேன்.) இந்தப் பதில் கடவுளே என்னிடம் சொன்னது.

துரை பால்ராஜ், கோவை

✖ கே. எழுத்துலகில் நுழைந்து முன்னேறத் துடிக்கும் எனக்குக் கூறும் அறிவுரை என்ன?

ப: நிறையப் படியுங்கள். எப்படி எழுதுகிறார்கள் என்று பாடம் படிப்பது போல் கவனித்துப் படியுங்கள். படிக்கப் படிக்கத் தான் உங்களுக்குக் கருத்துத் தெளிவு ஏற்படும். கதை எழுதிப் பெட்டியில் போட்டு விடுங்கள். ஆறு மாதம் கழித்து எடுத்துப் படித்துப் பாருங்கள். சிறிது அதிருப்திப் பட்டாலும் கிழித்துப் போடுங்கள். உங்களுடைய கதைக்குக் கடுமையான விமரிசகராக இருந்து படியுங்கள்.



கோவி. பரஞ்ஜோதி, காட்பாடி

✖ கே. சுஜாதாவின் கதையைப் படம் இல்லாமல் வெளியிட்டால் எப்படி இருக்கும்?

ப: அப்போதும் சுவையாகத்தான் இருக்கும். கணையாழியில் படமில்லாத கதைகளைத்தான் அவர் எழுதியிருக்கிறார்.

ஆ. திருமலைராஜ், சோழவந்தான்

✖ கே. எழுத்தாளராக மாறி இராவிட்டால் எந்தத் துறையில் பிரகாசித்திருப்பீர்கள்?

ப: முதலில் உங்களுக்குப் பெரிய நன்றி. அதாவது எழுத்துத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருப்பதாகக் கூறியதற்கு. சரி. உங்கள் கேள்விக்குப் பதில்: தெரியாது!

வெ. லட்சுமிநாராயணன், வடலூர்

✖ கே. கவிதை, மூன்றெழுத்து. கல்கி, மூன்றெழுத்து பதில், மூன்றெழுத்து இதிலிருந்து என்ன தெரிகிறது?

ப: உங்களுக்கு மூன்றுக்கு மேல் எண்ணத் தெரியாது என்று!

இரா. நாகசுந்தரம், நாகலூர்

✖ கே. இன்றைய எழுத்தாளர்களில் உங்களை மிகவும் கவர்ந்தவர்கள் யார்?

ப: 'குறிஞ்சி மலர்' படித்ததும் நா. பார்த்தசாரதியின் ரசிகனானேன். 'காதலெனும் தீவினிலே' படித்ததும் எஸ். ஏ. பி. யின் எழுத்தின் மேல் மோகம் கொண்டேன். அப்புசாமிக் கதைகளைப் படித்து பாக்கியம் ராமசாமியின் விசிறியானேன்: 'நீ நான் நிலா' படித்து ஸ்ரீ வேணுகோபாலனின் எழுத்தை மோகிக்க ஆரம்பித்தேன். 'பாதி ராஜ்யம்' போன்ற சிறுகதைகளைப் படித்து சுஜாதாவின் ரசிகர் மன்ற உறுப்பினன் ஆனேன். கடுகின் நகைச் சுவை எழுத்தைப் படித்து காதல் கொண்டேன். (இது ஆயுளுக்கும் மாறாத காதல்!)

ராமு, பெசன்ட் நகர்

✖ கே. கல்லூரியிடம் விஞ்சி நிற்பது எழுத்தாற்றலா, பேச்சாற்றலா?

ப. ஆற்றல்!

பரிசு பெறுபவர்:

துரை பால்ராஜ்,
205, 100 அடி தெரு.
காந்திபுரம் கோவை-641012.

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran *

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு

